# சந்திரிக்கா அரசும் இனப்பிரச்சனைக்கான தீர்வும்

INSTITUTE OF POLITICAL STUDIES
UDUVIL

# சந்திரிக்கா அரசும்

# இனப் பிரச்சனைக்கான தீர்வும்

A. S. Uthayakumar *(B. Sc. Mech. Eng)*

INSTITUTE OF POLITICAL STUDIES
UDUVIL

# சந்திரிக்கா அரசும்

# இனப் பிரச்சனைக்கான தீர்வும்

# முன்னுரை

இலங்கைத் தீவின் அரசியல் பிரச்சனையானது இற்றைக்கு 2200 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து இன, மத அடிப்படைகளில் இருந்து வந்துள்ளது எனப் பாளி இலக்கியமான ''மஹாவங்ச'' மூலம் உணர்த்தப்படுகிறது. ஆனால், மஹாவங்ச ஆனது எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பது சரியாகத் தெரியவில்லை. சிலர் இது கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது எனவும், சிலர் இது பிரித்தானியர் காலத்தில் எழுதப்பட்டதெனவும் கருதுகின்றனர் எதுவிதத்திலும்' மஹாவங்சவில் குறிப்பிட்டதன்படி எல்லாளனைத் துட்டகைமுனு வென்ற பின்னர், இலங்கைத் தீவு முழுவதையும் ''சிங்கள பௌத்த', அரசன் ஆண்டதற்கான எந்தவித ஆதாரங்களும் இல்லை.

ஆனால், 14 ஆம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்தி என்ற யாழ்ப்பாண இராச்சிய மன்னன், தென் இலங்கையை ஆண்டதற்கான சிங்கள வரலாற்று ஆதாரங்கள் உள்ளன.

மஹாவங்ச ஆனது இலங்கை அரசியலில் இனம், சமயம் என்பவை முக்கிய இடத்தைப் பெற்றதென வலியுறுத்தியிருக்கும் போதிலும், 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளுக்குரிய சந்தேஸ பாடல்களில் மத வேறுபாடுகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது இச் சந்தேஸ பாடல்களில் ''சிங்கள மொழி'', ''சிங்கள இனம்'' என்ற பதங்கள் பயன்படுத்தப்படவேயில்லை ஆனால், தமிழ் மொழி, தமிழ் இனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைத் தீவானது மிக நீண்ட காலத்தின் பின்னர், 15 ஆம் நூற்றாண்டிலேயே மீண்டும் ''ஒரு குடைக் கீழ்'' கொண்டுவரப்பட்டது. ஆறாவது பராக்ரமபாகு என்ற தமிழ்ச் சைவன் காலத்தில்தான், இது நடைபெற்றது.

ஜயவர்த்தன நகரிலிருந்து (கோட்டே) ஆட்சிசெய்த ஆறாவது பராக்ரமபாகு ஒரு தமிழ்ச் சைவனாகும்; அவனது மகள் பெயர் ''உலகுடைய தேவி'' ஆகும்: அவளது கணவனை ''நன்னுறுதுணையார்'' எனச் செலளிஹிணி சந்தேஸய வினை இயற்றிய சிறீ ராகுல தேரர் குறிப்பிட்டுள்ளார். சைவனான பராக்ரமபாகு புத்தரின் மூன்று போதனைகளையும் கற்றறிந்த பின்னர், தீய நம்பிக்கைகளைக் கைவிட்டு, அதாவது சைவத்தைக் கைவிட்டு, பௌத்தத்தினைத் தழுவியதாகச் செலளிஹிணி சந்தேஸயவின் 98 வது பாடல் மூலம் அறியமுடிகிறது.

ஆறாவது பராக்ரமபாகுவின் அரசமாளிகையின் வட புறமாக கொண்டகம் கடவை வழியாக மறு புறத்தை அடைந்த பின்னர், ''ஈஸ்வரகோவில்'' உம், தென்திசையில் கந்தன் கோயிலும் இருந்தன என்பதைச் செலளிஹிணி சந்தேசய வின் பாடல்களுடாக அறியமுடிகிறது. ஈஸ்வர கோவிலில் பக்தர்கள் ஈஸ்வரனைப் போற்றும் தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுவதாகவும், பூஜைகளின் முன்னர் 5 இசைக் கருவிகள் கொண்டு இசை எழுப்பப்படுவதாகவும் (பாட்டுகள்- 22,23) செளிஹிணி சந்தேசய கூறுகிறது.

இந்த ஆறாவது பராக்ரமபாகுவினது ஆட்சிக் காலத்தில் 'ச(ப்)புகுமறு'', அதாவது ''செண்பகம் இளவரசன்'' என்ற படைத் தளபதியின் படையெடுப்பின்போதுதான், யாழ்ப்பாண இராச்சியக் கைப் பற்றப்பட்டதென சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. ''ச(ப்) புகுமறு'' தென் இந்திய சைவ (அல்லது இந்து?) மூலத்தவனாகும்.

இந்த நிலையில், 15 ஆம் நூற்றாண்டில் முழு இலங்கையையும் ஒரு குடைக்கீழ் மீண்டும் கொணர்ந்தவன் ஒரு தமிழ்ச் சைவனே. ஆறாவது பராக்ரமபாகு சைவத்தைக் கைவிட்டவனென செலளிஹிணி சந்தேசய விலிருந்து ஊகித்தறிய முடியுமானாலும், அவன் இறந்த போது சைவ (அல்லது இந்து) முறையில் கிரியைகள் நடைபெற்றதைச் சிங்கள இலக்கியங்களுடாக அறிய முடிகிறது.

இவற்றிற்கு மேலாக, பௌத்தம் இலங்கைத்தீவில் கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பரப்பப்பட்டபோது, இலங்கையில் இந்து, சமணம், அஜீவகம், மற்றும் சமயங்கள் இருந்தன என்பதைப் பாளி நூலான மஹாவங்ச வூடாக அறிய முடிகிறது. மேலும், கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலும், அதற்கு முன்னரும் இலங்கையின் வட பகுதியிலுள்ள கந்தரோடையில் நாகரிகமான மக்கள் வாழ்ந்தனர் என்பதை 1970 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

இலங்கைத்தீவின் வரலாறு இப்படியமைந்திருந்தபோதும், இலங்கை பௌத்த மதத்துக்குரியது என்றும், இலங்கை சிங்களவரின் ''தாயகம்'' என்றும் சிங்கள பௌத்த ஆளும் வர்க்கங்கள் கருதுவது எவ்வாவிற்குச் சரியானது என்பது கேள்விக்குரியதே. சிங்களப் பேரினவாதிகள் இலங்கையின் வரலாற்றினைச் சரியாக விளங்காத நிலையில், அல்லது தமது விருப்புகளுக்கு ஏற்ற விதத்தில் எடுத்து, இலங்கையைச் சிங்கள - பௌத்த நாடாகப் பிரகடனப் படுத்துவதிலும், சிங்கள - பௌத்தத்தின் மேலாதிக்கம் இலங்கைத்தீவு முழுவதிலும் நிலை நாட்டப்படவைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்த முயற்சியை முதலில் அரசமட்டத்தில் ஆரம்பித்தவர் J. R. ஜயவர்த்தன ஆகும். 1944 ஆம் ஆண்டு மே மாதத்தில் இலங்

கையின் State Council இல் அவர் சிங்கள மொழி இலங்கையின் அரச கரும மொழியாக்கப்படவேண்டும் என்றும், சிங்கள மொழியானது மாண வர்களது பரீட்சைகளில் கட்டாயபாடம் ஆக்கப்படவேண்டுமென்றும் ஒரு பிரேரணையினைக் கொண்டு வந்தார். இவரது பிரேரணை நிராகரிக் கப்பட்டு, தமிழ், சிங்களம் என்ற இரண்டு மொழிகளுக்கும் சமனான அந்தஸ்து வழங்கும் முடிவு எடுக்கப்பட்டது.

இலங்கையின் அரசியலில் "மொழி", "இனம்" என்பவைகள் கி.பி 15 ஆம் நூற்றாண்டுப் பகுதிகளில் முக்கியத்துவம் கொடுக்கப் படாது இருந்து வந்த போதிலும், 20 ஆம் நூற்றாண்டில் இலங்கை யின் அரசியலில் மொழிப் பிரச்சினையை ஆரம்பித்தவர் என்றால், அது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜயவர்த்தன ஆகும்.

சுதந்திர இலங்கையில் இன, மத, மொழி அடிப்படைகளில் அர சியல் தீவிரமடைந்தது. J. R. ஜயவர்த்தனாவால் 1944 இல் புகுத் தப்பட்ட மொழிப் பிரச்சனையானது, சந்திரிக்காவின் தந்தையான S. W. R. D பண்டாரநாயக்கவினால் 1956இல் தீவிரப்படுத்தப்பட் டது. அவர், தான் ஆட்சிக்கு வந்தால், "சிங்கள மொழியை 24 மணி நேரத்தில் அரசகரும மொழியாக்குவேன்" என வாக்குறுதி கொடுத்து, தேர்தலில் வெற்றியீட்டி, சிங்களத்தினை அரசகரும மொழியாக் கினார்.

சுருங்கக் கூறினால், இதன் பின்னர் ஐ. தே. கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற இரு சிங்களத் தேசியக்கட்சிகளும் இலங்கையைச் சிங்கள பௌத்த மயமாக்குவதில் போட்டி போட்டு செயற்பட்டதன் மூலம், தேர்தல்களில் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டன.

1972 ஆம் ஆண்டில் சந்திரிக்காவின் தாயார் சிறிமாவோ பண்டார நாயக்க பௌத்த மதத்திற்கு அரச பாதுகாப்பளித்து, அதனை இலங் கையின் மதமாக்கினார். 1978 ஆம் ஆண்டில் புதிய அரசியல் யாப் பினை அமைத்துக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியும், சிங்களம், பௌத்தம் என்பவைகளையே அரசமொழி, அரச மதமாக மீண்டும் உறுதிசெய்தது.

இலங்கையில் தமிழ், இந்து, சைவம் என்பவைகள் 2200 வருடங் களுக்கு மேலாக இருந்து வரும் போதும், 15ஆம் நூற்றாண்டில் சிறீ ராகுல தேரரின் தலைமையிலான விஜயபாகு பிரிவென என்ற அறப் பள்ளியில் தமிழ்மொழி கற்பிக்கப்பட்டு வந்த போதும் இலங்கையில் தமிழ்மொழிக்குச் சமனான இடம் சுதந்திர இலங்கையில் கொடுக் கப்படவுமில்லை. தமிழர்களுக்கு இலங்கையில் சமனான இடம் கொடுக் கப்படவுமில்லை.

இலங்கைத் தீவானது சிங்களவரின் ''தாயகம்'' என்ற அடிப் படையில்தான் இலங்கையில் சிங்கள மொழிக்கு முதல் நிலை கொடுக் கப்பட்டதுடன், பௌத்த மதத்திற்கு அரச பாதுகாப்பும் வழங்கப் பட்டது. ஆனால், 2200 வருடங்களுக்கு மேலாக இலங்கைத்தீவின் வரலாற்றில் பின்னிப் பிணைந்த தமிழர்கள் தொடர்பாகச் சந்திரிகா வும், அவரது கட்சியும் வேறுபட்ட நிலைப்பாட்டையே கொண்டுள்ளன.

பல நூற்றாண்டுகளாகத் தமிழர்கள் வடக்குக் கிழக்கில் செறிந்து வாழ்ந்து வருகின்றனர். ஆனால், சந்திரிகாவும், அவரது கட்சியும் வடக்குக் கிழக்கைத் தமிழரின் ''தாயகம்'' என ஏற்கவில்லை. வடக்குக் கிழக்கானது தமிழரின் ''தாயகம்'' என்பதைச் சந்திரிகாவும், அவரது கட்சியும் நிராகரிப்பதற்கு, உண்மையில், இரண்டு காரணங்கள்தான் இருக்கமுடியும். அவையாவன:

(1) முழு இலங்கையுமே தமிழரின் ''தாயகம்'' என்ற கொள்கை;

(2) தமிழர்களுக்கும், இலங்கைத் தீவிற்கும் எந்தவித தொடர் பும் வதிவு காரணமாக இருந்து வந்ததில்லை என்ற கொள்கை.

இதில் முதலாவதைப் பொறுத்தமட்டில், வரலாற்றுக் குறிப்புக் களில் தமிழர்கள் வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி, இலங்கையின் பல பகுதிகளில் வாழ்ந்து, தமது மொழி, சமயம், கலாச்சாரம், பண்பாடு என்பவைகளைப் பேணி வந்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. "குரு நாகல விஸ்தரய'' வில், அப்பகுதியில் சிங்களவரும், தமிழரும் சமனான தொகையில் இருந்ததாகவும், அங்கு சிவன், முருகன், மற்றும் கோயில் கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கோட்டே இராச்சியத்தி லும் நிலைமை இதுபோலவே 15 ஆம் நூற்றாண்டில் இருந்தது. கண்டி இராச்சியத்திலும் இதுவே நிலைமை என்பதை வரலாற்று மூலங்கள் கூறுகின்றன; இங்கு தமிழ் மக்கள் வாழ்ந்ததுடன், தமிழ்ச் சைவ அரசர்கள் ஆட்சியையும் நடாத்தி வந்துள்ளனர்.

இவை மூலம், தமிழரின் ''தாயகம்'' என்பதை வடக்குக் கிழக்குடன் மாத்திரம் கட்டுப்படுத்திவிட முடியுமா என சந்திரிகாவும், அவரது கட்சி யும் சிந்தித்து, அது பிழையானது, முழு இலங்கையுமே தமிழர்களின் ''தாயகம்'' எனக் கருத முடியும். அப்படியாயின், இலங்கையில் சிங்கள மொழிக்கு முதலுரிமை கொடுப்பதுவும், பௌத்த மதத்திற்கு அரச பாதுகாப்புக் கொடுப்பதும் பிழையானது. சந்திரிகாவும், அரசும் இரண்டு பிழைகளையும் அரசியல் யாப்பிலிருந்து நீக்குவரா?

சந்திரிக்காவும், அவரது கட்சியும் நாட்டில் நடைபெற்ற நியாயமற்ற, மனிதத் தன்மையற்ற பல நடவடிக்கைகள் பற்றிக் கருத்துத் தெரிவித் துள்ளன, கண்டித்துள்ளன. ஆனால், சிங்கள மொழி முதன்மைப்

படுத்திவந்தது பற்றியோ, அல்லது பௌத்தத்திற்கு மாத்திரம் அரசா பாதுகாப்புக் கொடுத்து வருவது பற்றயோ சந்ரிக்காவும், கட்சியும் இன்றுவரை எதனையும் கூறவில்லை.

இவைகள் இரண்டாவது காரணத்தாலேயே சந்ரிக்காவும், அவரது கட்சியும் வடக்குக் கிழக்கானது தமிழரின் ''தாயகம்'' என்பதை நிரா கரிப்பதாகிறது

இது சந்ரிக்காவினதும், அவரது கட்சியினதும் உண்மை நிலைப் பாடு என்ன என்பதை அறியப்போதுமானது. இப்படியான சூழ் நிலைகளில், ஒரு புறத்தே, சந்ரிக்கா இலங்கையின் இனப்பிரச் சனைக் குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற தீவிரக் கொள்கையுடன் செயற் படுகின்றார் மறு புறத்தில், தாம் கௌரவமாகவும், உரிமைகளுடன் வாழவும், அமைதியுடன் வாழவும், தாம் வாழும் பிரதேசங்களில் பொரு ளாதார முன்னேற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான வாழ்க்கையை நடாத்தவும், தமது மொழி, கலை, கலாச்சாரம், பண் பாடு என்பவைகளைப் பேணிப்பாதுகாக்கவும், நிரந்தர அமைதியை ஏற்படுத்தவும் தமிழ் மக்கள் மிகவும் ஆவலாக உள்ளனர். தத்தமது கிராமங்களில். வீடுகளில் அமைதியான வாழ்க்கையை நடாத்த ஆவ லான எதிர்பார்ப்புடன் உள்ளனர்

இப்படியான சூழ்நிலையில், ''சந்ரிக்கா அரசும் இனப்பிரச்சனைக் கான தீர்வும்'' என்ற ஆய்வுநூல் இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வு பற்றிச் சரியாக அறிந்து கொள்ளவும், அரசியலை விளங்கிக் கொள்ளவும் உதவியாகவிருக்குமென நம்பப்படுகிறது.

இந்தநூல் தொடர்பான ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மனமார வரவேற்கப்படுகின்றன.

Uduvil
02-11-1994.

Institute of Political
Studies - Uduvil.

# சந்திரிக்கா அரசும் இனப் பிரச்சனைக்கான தீர்வும்

## நுழைவு:

1994 ஓகஸ்ற் மாதம் 16 ஆம் திகதியன்று நடைபெற்ற சிறீ லங்கா நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிக்கா ( Chandrika ) வெற்றியீட்டி, அரசை அமைத்துள்ளார். சந்திரிக்காவின் வெற்றிபற்றியும், அவரது அரசின் ஸ்திரத்தன்மை பற்றியும், அவ்வரசு நடைமுறையில் செய்யக் கூடியவை பற்றியும் உள்ளூர், சர்வதேச அரசியல் ஆராய்வாளரும், வெகுஜனத் தொடர்புசாதனங்களும், வடக்குக் கிழக்கு, மலையகம், தென் – இலங்கைப் பொது மக்களும் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்த வேறுபட்ட கருத்துக்களுள் எது, அல்லது எவை சரியாக இருக்கமுடியும் என்பதை ஆராய்வதிலும் பார்க்க, இவை தொடர்பான சுய ஆராய்வைச் செய்து முடிவுக்கு வருவதே புத்திசாதுரியமானது.

நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களை பொ. ம. ஐ. முன்னணி கைப்பற்றி இருந்தாலும், அமைக்கப்பட்ட அரசில் முஸ்லீம் கொங்கிரஸ், மற்றும் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு ''நலன்கள்'' ( Interests ) இருக்கும் போதிலும், ஒவ்வொரு கட்சியினுள்ளும் வெவ்வேறு நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கமுடையவர் இருக்கவே செய்கின்றனர். இந்த வேறுபட்ட குழுவினர்களுக்கிடையில் சில முக்கிய ''நலன்கள்'' பொதுவாக இருக்கும் நிலையில், இவர்களிடையே சில ''புரிந்துணர்வுகள்'' ஏற்பட்டு, கூட்டு அமைப்பு உருவாகியுள்ளது.

கூட்டமைப்பினை உருவாக்கியுள்ள குழுக்கள் மத்தியில் எப்போது ''சுய'' நலன்கள் 'பொது'' நலன்களிலும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றனவோ, அன்று இந்தக் கூட்டமைப்பினுள் முரண்பாடுகள் தீவிரமடையத் தொடங்கும், பிளவுகள் ஏற்படத் தொடங்கும்.

பொ. ம. ஐ. மு. அதனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளையும், வாக்குறுதிகளையும் முன்வைத்தபோதிலும், நாட்டில் காணப்படும் அதி முக்கிய பிரச்சனை இனப்பிரச்சனையே என்றும், அதற்குத் தீர்வு காண்பதே தனது முதல் முக்கிய நோக்கமானது எனவும் சந்திரிக்காவும், அவரது தலைமையிலான கூட்டு முன்னணியும் கூறியிருந்தன.

தேர்தல் வெற்றியின் பின்னர் இனப்பிரச்சனைக்கான தீர்வினை அரசியல் ரீதியாக ஏற்படுத்தவும், விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தைகள் மூலம் ஏற்படுத்தவும் எனச் சந்திரிக்கா, முன்னோடி நடவடிக்கையாக, நான்கு பேரைக் கொண்ட குழுவொன்றினை யாழ்ப்பாணம் அனுப்பவும் முடிவு செய்திருந்தார்.

மேலும், வடபகுதிக்குக் கொண்டு செல்லப்படும் பொருட்களுள் ''தடை செய்யப்பட்ட பொருட்கள்'' என்ற பட்டியலில் பல பொருட்களுக்குத் தடையானது நீர்மானமளவில் நீக்கப்பட்டதுடன், வடக்கு மக்களுக்குத் தனது அரசு மின்சக்தி வழங்கப் போவதாகவும், யாழ்குடா நாட்டினைத் தெற்குடன இணைக்கும் பாதையைத் திறக்கப் போவதாகவும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டன. சந்ரிக்கா அரசின் இப் பகிரங்க அறிவிப்புகள் தமிழ் மக்களாலும், சிங்கள மக்களின் ஒரு பகுதியினராலும் வரவேற்கப்பட்டன. சர்வதேச ரீதியிலும், குறிப்பாக மேற்கு நாடுகளிலிருந்தும். இதற்கு வரவேற்புகள் கிடைத்தன. ஆனால், இலங்கையின் அயல்நாடான இந்தியாவிலிருந்து, காலத்திற்குக் காலம், வேறுபட்ட சமிஞைகளே கிடைத்துவந்தன.

எதுவிதத்திலும், ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதியன்று 4 பேரைக்கொண்ட விசேட தூதுக் குழுவென்று யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு, முன்னோடிப் பேச்சுவார்த்தைகளை நடாத்திவிட்டுக் கொழும்பு திரும்பியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகத் தென்-இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் பாரிய பிரசாரங்களைச் சந்ரிக்க அரசு செய்துள்ளது.

இவற்றைத் தொடர்ந்து, போர் நிறுத்தத்தினை செய்வது பற்றியும், பூநகரிப் பாதையைத் திறப்பது பற்றியும் அரசு தீவிரமாக ஆராய்வதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஒட்டுமொத்தமாகக் கூறினால், இனப்பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பான முற்காரியங்கள் சில நடைபெறுவது போன்ற ஒருவித வெளித்தோற்றங்கள் வெற்றிகரமாகக் கொடுக்கப்பட்டு வந்துள்ளன.

எதுவிதத்திலும், இலங்கையின் சிறுபான்மையினரதும், பெரும்பான்மைச் சிங்களவரதும், உலகநாடுகளினதும் முக்கிய கேள்விகளாக இருப்பவை: இலங்கையின் இனப்பிரச்சனைக்குச் சந்ரிக்காவாலும், அவரது அரசாலும் தீர்வுகாணப்படுமா?, எப்படியான தீர்வு காணப்படும்? இத்தீர்வு நிரந்தர அமைதியை இலங்கைத் தீவில் ஏற்படுத்துமா? என்பவைகளாகும்.

இலங்கைத் தீவினதும், வெளிநாடுகளினதும் அரசுகள், வெகுஜனத்தொடர்பு சாதனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வு நிறுவனங்கள் இவை தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளன. தமிழ்ச் சமூகத்தினுள்ளேயும் வேறுபட்ட கருத்துக்களே உள்ளன. இலங்கையின் ஏனைய சிறுபான்மையினர்களிடையேயும் வேறுபட்டகருத்துக்களே உள்ளன. சிங்களச் சமூகத்தினிடையேயும் நிலைமை இதுதான்.

இந்த நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட மூன்று கேள்விகளுக்கும் விஞ்ஞான ரீதியாக ஆராய்வுகளைச் செய்து, சரியான முடிவுகளுக்கு வருவதே தெளிவை ஏற்படுத்தவும், இயல்பான செயற்பாடுகளுக்கும் வழியமைக்கும். இங்கு ஆராய்வுகள் எளிய முறையில் தரப்

படுகின்றன. இங்கு வரப்படும் முடிவுகளை அப்படியே ஒருவர் முழுமையாக ஏற்க வேண்டும் என்பதக்கில்லை. கருத்துக்களை ஏற்பதும், ஏற்காது விடுவதும் ஒருவரின் ஆராயும் வல்லமையைப் பொறுத்தது. எது விதத்திலும், இங்கு வரப்படும் முடிவுகளை எவரும் எடுத்த எடுப்பில், தர்க்க ரீதியான நியாயங்களற்ற முறையில், நிராகரிக்கவும் முடியாது. ஆகவே, இச்சிறு ஆய்வு பற்றிய விமர்சனம் மனமார வரவேற்கப்படுகிறது. இங்கு வரப்பட்ட முடிவுகள் தொடர்பான விவாதங்கள் தெளிவை ஏற்படுத்தப் பேருதவியாக இருக்கும் என நம்பப்படுகிறது.

# இனப் பிரச்சனைக்கான தீர்வுகள்

## நுழைவு :

இலங்கைத் தீவின் இனப்பிரச்சனையானது இன்று பரந்துபட்ட போர் வடிவினை எடுத்துள்ளது. கடந்த 10 வருடங்களாக, இனப் பிரச்சனையானது "சாதாரண" வழியில் தீர்க்கப்பட முடியாததொன்று எனச் சிறி-லங்கா அரசும், தமிழ்ச் சமூகமும் கருதிய நிலையில், அதனைப் "போர்" மூலம் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தன. 1977 ஆம் ஆண்டு முதல் ஐ. தேசியக் கட்சியானது அரசை அமைத்துவந்த நிலையில், மேலே குறிப்பிட்ட கொள்கையானது ஜக்கிய தேசியக் கட்சியின் கொள்கை என்றும் கருத இடமுண்டு.

இன்று சந்திரிக்காவின் தலைமையிலான பொ. ம. ஐ. முன்னணி அரசை அமைத்துள்ளது. இந்த அரசு இலங்கையின் இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்கப் போவதாகக் கூறுகிறது அதனடிப்படையில், சில முன்னேற்பாட்டுக் காரியங்களையும் அது செய்து வருகிறது. ஆனால், இந்தச் சில நடவடிக்கைகள் மாத்திரம், அரசு "இராணுவத்தீர்வு" என்பதை முற்றாகக் கைவிட்டுவிட்டது எனத் திட்டவட்டமாக கூறப் போதுமானவையல்ல.

படைகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்வதும், ஆயுதக் கொள்வனவு தொடர்வதும், தாக்குதல்கள் தொடர்வதும், இராணுவ சம்பந்தமான பல கொள்கைகளும், செயற்பாடுகளும், சந்திரிக்கா அரசு இராணுவத் தீர்வினை முழுமையாகக் கைவிடவில்லை என்பதை உறுதிப்படுத்துகையில், சந்திரிக்காவின் அரசினது இன்றைய செயற்பாடுகள் இனப்பிரச்சனைத் தீர்வில் அரசியல் தீர்வானது இராணுவத் தீர்விலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட நிலையிலுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், இராணுவ சம்பந்தமான செயற்பாடுகள், தொடர்ந்தும், இராணுவத் தீர்வுக்கு இடமளிப்பதை நிரந்தரமாகக் கொண்டிருப்பதாலும், எந்தத் தீர்வுக்குப் பெயரளவில் முக்கியத்துவம் கொடுப்பதென்பது எக்கணமும் மாற்றப்படமுடியுமாகையாலும், சந்திரிக்கா அரசும் இராணுவத் தீர்வையே நிரந்தரத் தீர்வாகத் கொண்டுள்ளது என்பதும், ''அரசியல் தீர்வு'' என்பதற்குத் தற்காலிகமாகவே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதும் உறுதியாகின்றன.

இந்த நிலையில், சந்திரிக்க அரசினது இனப்பிரச்சனைக்கான தீர்வின பின்வரும் மூன்று அடிப்படைகளில் ஆராய்வதே சரியானது, முடிவுகளைச் சரியாகவும் கொடுக்கக் கூடியதாகவும் அமையும் :

(1) இராணுவத் தீர்வு ;

(2) அரசியல் தீர்வு ;

(3) இவையிரண்டும் ஒருவித சமன்பாட்டில் அமைக்கப்பட்ட தீர்ப்பு.

இவைகள் ஒவ்வொன்று பற்றியும் சுருக்கமாக, ஆனால் சற்று ஆழமாக ஆராய்வோம்.

## 1. இராணுவத் தீர்வு :

இராணுவத் தீர்வானது ஒட்டுமொத்தத்தில் இரண்டு வடிவங்களையே ஈற்றில் எடுக்கமுடியும். அவையாவன :

(1) இராணுவ நடவடிக்கைகள் மூலம் வடபகுதித் தரையானது சிறீலங்கா அரசபடைகளின் பூரண இராணுவ கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டு, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் அழிக்கப்படுவது ;

(2) விசேட இராணுவ நடவடிக்கைகள் மூலமோ, அல்லது வேறு விதமாகவோ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தை அழிப்பது.

இதில் முதலாவதில் தரைப் படையானது விமானப் படை. கடற்படை என்பவைகளின் உதவியுடன் பாரிய தாக்குதல்களை நடாத்தித் தரையைக் கைப்பற்றி, அதனைத் தமது பூரண கட்டுப்பாட்டினுள் வைக்கும். இந்தத் தாக்குதல்கள் பிராந்திய அடிப்படையிலும், ஒரே நேரத்தில் சகல பிராந்தியங்களிலும் மேற்கொள்ளப்படலாம். ஆனால், எப்படியான தந்திரோபாயம் பயன்படுத்தப்பட முடியு மென்பது பல்வேறு விடயங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. அவையாவன:

1. படைகளின் எண்ணிக்கை, ஆயுத பலம், மற்றும் Logistic Support Capabilities;

2 அடையவிருக்கும் குறிக்கோள்கள்.

சிறிலங்கா அரசு அதன் படைகளின் மொத்த எண்ணிக்கையினை 100,000 வரை உயர்த்தியிருப்பதுடன், இன்றும் ஆட்சேர்ப்பினைத் தொடர்கிறது. தரைப்படைகளுக்கான Tanks, Scout Cars, Personnel Carriers என்பவைகளைப் பெரும் எண்ணிக்கையில் கொள்வனவு செய்துள்ளது. விமானப் படையைப் பொறுத்த மட்டில், கீழ்ப் பகுதிகளில் கவசமிடப்பட்டுச் செய்யப்படாத '' மசெட்டி '' Trainer Aircrafts, மற்றும் கீழே கவசமிடப்பட்டதும், நீண்ட நேரம் பறக்கக் கூடியதுமான, Turbo Propeller என்ஜின் களைக் கொண்ட '' புக்காரா '' தரைதாக்கு விமானங்களையும் (Ground Attack Aircralt), சுப்பசோனிக் வேகத்தில் பறக்கும் தரை-தாக்கும் ஜெற் விமானங்களையும், ருசிய, மற்றும் நாடுகளி லிருந்து Attack, Transport ஹெலிக்கொப்ரர்களையும் பெருமளவில் கொள்வனவு செய்துள்ளது.

கடற்படையைப் பொறுத்த மட்டில், அரசு Gun Boats, Landing Crafts, Flat Bottom Transport Vessels என்பவைகளையும் பெருமெண்ணிக்கையில் கொள்வனவு செய்துள்ளது.

சிறீ லங்காப் படைகளின் எண்ணிக்கை, ஆயுதபலம் என்ப வைகள் போதுமானவை எனப் படைத் தளபதிகள் கருதுவார்க ளாயின், தமது படைகளுக்கு Logistic Support Capabilities உள்ளது எனப் படைத்தளபதிகள் கருதுவார்களேயாயின், வடபகுதி முழுவதும் மீதான பாரிய ஒட்டுமொத்த தாக்குதல்களைச் சிறீ லங்காப் படைகள் நடாத்தமுடியும்.

ஆனால், தமது படைகள் தொடர்பான மதிப்பீட்டையும், அவர்கள் எதிர்த்துப் போரிடவுள்ள விடுதலைப் புலிகளின் படை தொடர்பான மதிப்பீட்டையும் வைத்தே, படைத் தளபதிகள் இப்படியான படையெடுப்பைச் செய்து இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இப்படியான பாரிய படையெடுப்புகள் இராணுவத்திற்குப் பாரிய அழிவை ஏற்படுத்தக் கூடியதுடன், பெருமெண்ணிக்கையான பொதுமக்கள் கொல்லப்படவும், காயப்படவும், உடமைகள் அழிக் கப்படவுமே வழிவகுக்கும் படையெடுப்பின்போது இப்படியான சேதங்கள் தவிர்க்கப்பட முடியும் என வாதிட்டாலும், அரச படைகள் தமது '' குறிக்கோள்களை '' அடைய முற்படும்போது, உயிரி ளப்புகள் தவிர்க்க முடியாததாகவேயிருக்கும்.

அரச படைகளின் குறிக்கோளானது வடபகுதித் தரைப் பிராந்தியத்தினைக் கைப்பற்றியதுடன் முடிந்துவிட முடியாது. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அழிக்கப்படுவதும், விடுதலைப் புலிகள் அழிக்கப்படுவதும், அரசின் நிர்வாகம், அதிகாரம் நிலை நாட்டப்படுவதும் அரச படைகளின் குறிக்கோள்களாகவே இருக்க முடியும்.

இவை, இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், சில கட்டுப்படுத்தல்களையும், பிறரில் தங்கியிருக்கும் நிலைகளையும் உருவாக்குகின்றன.

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினை அழிப்பதையும், விடுதலைப் புலிகளை அழிப்பதையும் பொறுத்தமட்டில், தேடி அழிக்கும் நடவடிக்கையானது இரண்டு விடயங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. அவையாவன:

(1) நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பிராந்தியம் இயற்கை அமைப்பாலும், இராணுவ அமைப்பாலும் தனிமையாக்கப்பட்ட சிறிய இடமா, அல்லது திறந்த பிரதேசமா என்பதாலும்;

(2) நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பிராந்திய மக்கள் அரச படைகளுக்கு ஒத்துழைப்பைக் கொடுப்பார்களா, இல்லையா என்பதாலும்.

தேடியழிப்பு நடவடிக்கையானது திறந்த பிரதேசத்தில், அதாவது: இயற்கை அமைப்பாலும், இராணுவ அமைப்பாலும் தனிமையாக்கப்படாத பிரதேசத்தில், வெற்றியளிக்கமாட்டாது. மறுபுறத்தில், இயற்கை அமைப்பாலும், இராணுவ அமைப்பாலும் தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசம் கணிசமான பரப்பளவைக் கொண்டிருந்தால், அது மக்கள் செறிந்து வாழும் இடமாயின், மக்களின் ஒத்துழைப்பு அரச படைகளுக்குக் கிடைக்காவிடின், அரச படைகளின் தேடியழிக்கும் முயற்சி ஒரு நீண்டகால முயற்சியாகவும், மக்கள் கொல்லப்பட்டும், சித்திரவதை செய்யப்பட்டும் சீரழியும் ஒரு நடவடிக்கையாகவுமே அமையும்.

பாரிய இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட மக்கள் அரச படைகளுடன் எவ்வளவு தூரத்திற்கு மனமார ஒத்துழைப்பர் என்பது கேள்விக்குரியதே.

இவைகளைப் பார்க்கும்போது, வடக்குப் பகுதியில் யாழ் குடா நாடே இயற்கையால் தனிமைப் படுத்தப்பட்டுள்ளது. எது விதத்திலும், குடாநாடு பிரதான நிலத்துடன் தரையால் இணைக்கப்பட்ட பகுதி, யாழ்ப்பாணக் கடலேரி, யாழ் குடாவிலிருந்து ஏனைய பகுதிகளுக்குக் கடலால் செல்லக் கூடிய கடற் பகுதிகள் எப்படிக் கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்தே, யாழ். குடா நாட்டினை அரச படைகள் பூரணமாகத் தனிமைப்படுத்த முடியும்.

மேலே குறிப்பிட்ட விதத்தில் யாழ் குடாநாடு தனிமைப் படுத்தப்படுவதாயின், யாழ் குடாவைச் சுற்றிய கடல் பகுதிகள் கடற்படையின் கடுமையான கட்டுப்பாட்டினுள் வைக்க வேண்டியிருப்பதுடன், குடாநாடு பிரதான நிலப்பரப்புடன் இணைக்கப்படும் பகுதிகள், மற்றும் கடலேரி ஊடாகப் பிரதான நிலப்பரப்பை அடையக் கூடிய பகுதிகளான கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகள்,

மற்றும் கல்முனைக் கொம்பு முதல் மன்னூர் வரையான மேற்குக் கரைப் பகுதிகள் என்பவையும் சிறீலங்கா இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட வேண்டும்.

இந்த நிலையில், முதலாவது இராணுவ நடவடிக்கை வடிவம் பூரண வெற்றியளிக்கத் தக்கதாக வைக்கச் சிறீலங்கா அரசு முற் பட்டால், யாழ் குடாநாட்டின் மீதான ஒட்டுமொத்த படையெடுப்பின் போதோ, அல்லது அதற்கு முன்னரோ, கிளிநொச்சி, மற்றும் பகுதி களின் மீது படையெடுப்பு நடாத்தப்பட்டு, அப்பிராந்தியங்கள் அரச படைகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் : ''அரசியல் தீர்வை'' முன்வைக்கும் சந்ரிக்க அரசிற்கு இராணுவத் தீர்வை நடைமுறைப் படுத்தும் உள் ணோக்கம் இருந்து, முதலாவது போர் வடிவத்தைப் பயன்படுத்தும் நோக்கமுமிருந்தால், அது கீழ்வருவனவற்றைக் கொள்கைளாக வைத்திருக்கும் :

(1) யாழ் குடாவைச் சுற்றிய கடல் வலயத்தினில் மீன்பிடியைத் தொடர்ந்து தடைசெய்வது ;

(2) ஆனையிறவு, வெற்றிலைக்கேணி, .......... பூநகரி போன்ற இடங்களில் இராணுவ தளங்களைப் பலப்படுவது ;

(3) கிளிநொச்சிப் பகுதியினை இராணுவ கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்து, அதனைத் தமது கட்டுப்பாட்டினுள் தொடர்ந்து வைத்திருக்க, கிளிநொச்சிப் பகுதி மக்களின் ஆதரவைத்தேட வழிவகைகளைச் செய்வது;

(4) யாழ் குடா மக்களின் மனத்தைக் கவர ஏற்ற சில நடவடிக் கைகளை மேற்கொள்வதும், யாழ் குடாநாட்டு மக்களிடையே முரண்பட்ட கருத்துக்களை ஏற்படுத்துவதும்.

இந்தநிலையில், கிளிநொச்சிப் பகுதியானது பெருமளவு நிதி, மற்றும்பொருள் உதவிகளை உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் (NGOs), அரசுகளிடமிருந்தும், சமய அமைப்பு களிடமிருந்தும் பெறும். சமூகத்தினைப் பிரிப்பதற்குச் சமய மாற்றங் களும் தீவிரமாக்கப்படும்.

யாழ்குடா மக்களைப் பொறுத்தமட்டில், யாழ்குடா மக்கள் எவை தமக்கு முக்கியமானவை எனக்கருதுகிறார்களோ, அவற்றைச் செய்வது போன்ற தோற்றம் கொடுக்கப்படுவதுடன், விடுதலைப் புலிகள் தொடர்பாக முரண்பாடுகளை ஏற்படுத்த உதவும் பிரசாரங்களும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். ''அரசியல் தீர்வு'' என்ப தற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் வரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களும், வேறு செயற்பாடுகளும் கட்டுப்படுத்தப் பட்டவிதத்தில் மேற்கொள்ளப்பட்டாலும், ஒரு கட்டத்தில் அது தீவிரப்படுத்தப்படும். இக்கட்டத்தில் தான் உள்ளூர் கைக்கூலிகள் தமது பிரசாரத்தையும் முடுக்கிவிடுவர்.

இவைகள் அனைத்தையும் சந்திரிக்கா அரசும், அதன் ஆதரவாளர்களும் செய்தாலும், இராணுவ வெற்றியே மிகமுக்கியமானது. இதில் யார் வெற்றிபெறுவர் என்பதே, ஈற்றில், இறுதி முடிவை நிர்ணயிக்கும். இது அரச படைகளினதும், விடுதலைப் புலிகளினதும் படைப்பலம், ஆயுதபலம், மனோதிடகாத்திரம், போர்ப்பயிற்சி, ஆயுத, மற்றும் விநியோகம், தந்திரோபாயங்கள், மற்றும் சில விடயங்களில் தான் தங்கியுள்ளது.

இரராணுவத் தீர்வில் இரண்டாவது வடிவத்தினை எடுத்துக் கொண்டால், இது ஒருவித கொமாண்டோ தாக்குதல் மூலமும், விசேட குண்டுவீச்சுத்தாக்குதல் மூலமும், ஊடுருவல்கள் மூலமுமே சாத்தியமாகலாம்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் அழிக்கப்படுவதாயின், முக்கிய தலைவர்கள் தங்குமிடங்கள், அவர்களின் அசைவுகள் முற்கூட்டியே அறியப்படவேண்டும். இது பெரும் Intelligence பிரச்சனையாகும்.

இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து சிறீ லங்கா அரசுடனோ, அல்லது அரச படைகளுடனோ தொடர்வு கொள்வதாயின், Walkie-Talkie கள் பயன்படக்கூடியதுடன், சில குறிப்பிட்ட ஸ்தாபனங்களிடமுள்ள Wire - less Radio சாதனங்களே பயன்படுத்தப்படமுடியும். இல்லாதுபோனால், சில குறிப்பிட்ட அமைப்புகளே யாழ்குடா இராணுவ முகாம்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தமுடியும்.

விடுதலைப் புலிகளின் தலைவர்களது தங்குமிடங்கள், அசைவுகள் என்பவைகள் சிறி-லங்கா அரசின் கைக்கூலிகளால் அறியப்பட்டாலும். இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், அங்கு சில காலதாமதங்கள் ஏற்படவேயுள்ளன. அவையாவன:

1) தகவல்கள் யாழ்குடா இராணுவ முகாம்களுக்குக் கிடைத்தாலும், கொமாண்டோ தாக்குதலை நடாத்துவதற்கான முடிவுகள் யாழ்குடாவின் பிரதான தளமான பலாலியில் எடுக்கப்பட்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்;

2) யாழ்குடாவின் தளபதிக்குச் சுதந்திரமாக முடிவுகளையெடுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தாலும், அவர் தனது முடிவைக் கொழும்பில் சகல அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதிக்கும், படைப்பெரும் தளபதிக்கும் அறிவித்து, அனுமதி பெற்ற பின்பே, தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம்.

இவைகள், குறைந்தது, 15 நிமிடங்கள் முதல் 30 நிமிட காலத்தை எடுக்கும்.

அப்படி முடிவெடுக்கப்பட்ட பின்னர், விமானங்கள் மூலம் விசேட குண்டுவீச்சுத் தாக்குதலை நடாத்துவதாயினும் சரி, ஹெலிக்கொப்ரர்கள் மூலம் விசேட கொமாண்டோப் படைகள் வந்து

இறங்கித் தாக்குதல்களை நடாத்துவதாயினும் சரி, குறைந்தது 10 நிமிடப் பறப்பு நேரமும், சில நிமிட ஆயத்த நேரமும் எடுக்கும்.

மேலும், இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட கொமாண்டோப் படை உருவாக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், குண்டு வீச்சு விமானங்களும், சிறந்த ஓட்டிகளும் தேவைப்படும். சிறீலங்கா அரசு விசேட கொமாண்டோ படைப்பிரிவை ஏற்கனவே உருவாக்கியிருப்பதுடன். பலவகையான ஹெலிக்கொப்ரர்களையும் கொள்வனவு செய்து, ஓட்டிகளுக்குப் பயிற்சியளித்துமுள்ளது. மேலும், சிறி-லங்கா அரசு பிறநாட்டு விமான, ஹெலிக்கொப்ரர் ஓட்டிகளையும் விரும்பினால் பயன்படுத்தமுடியும்.

இவைகள் அனைத்தையும் தயார்ப்படுத்தினாலும், இந்த இராணுவ நடவடிக்கை வடிவத்தினைச் சுலபமாக முறியடிக்க முடியும். இதற்குக் கீழ்வரும் தந்திரோபாயங்களைக் கையாள முடியும்:

(1) விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினர் தமது தங்கு மிடங்களையும், அசைவுகளையும் "பிறர்" சரியாக அறிய முடியாது வைத்திருப்பதுடன், தமது அசைவுகளைத் தேதி-நேர அடிப்படையில் வைக்காதும் பார்ப்பது;

(2) ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று தங்கும் நேரஅளவினை எதிரிப்படைத்தலைமைப்பீடமும், அரசும் "முடிவை எடுக்கும்" நேரஅளவிலும், விமானங்கள், ஹெலிக்கொப்ரர்கள் இலக்கை அடைய எடுக்கும் நேர அளவிலும் குறைவானதாக வைத்துக் கொள்வது;

(3) விமானங்கள், ஹெலிக்கொப்ரர்களின் அசைவுகளைத் தொடர்ந்து கண்காணித்து, அறிவித்தல்களைப் பெறும் முறையினைக் கையாழுவது.

இந்த முறைகள் கையாளப்படும் அதேவேளையில், கொமாண்டோ தாக்குதல்களை நடாத்த முற்படும் எதிரிகளைத் தகுந்த யுக்தியைக் கையாண்டு அழிக்கவும் முடியும்.

இவைகள் அனைத்தையும் ஆராய்ந்தே சிறீ லங்காப் படையினர் இந்த இராணுவ நடவடிக்கை வடிவை நடைமுறைப் படுத்த முற்படலாம். இதில் தப்புக்கணக்குகள் ஏற்படுமாயின், இரு சாராரும் பேரழிவை எதிர்நோக்குவர். எதுவிதத்திலும், ஈரானில் அமெரிக்க ராஜதந்திரிகளை மீட்க ஜிம்மி காட்டர் அரசு முற்பட்டு. அழிவுகளை எதிர்நோக்கியதை சந்ரிக்கா அரசு மறந்து விட முடியாது.

மேலே ஆராயப்பட்ட இரண்டு இராணுவ நடவடிக்கை வடிவங்களையும் பார்க்கும்போது, சிறீ லங்கா அரசபடைகள் முதல் வடிவத்தினைப் பயன்படுத்த முற்படும் சந்தர்ப்பங்களே அதிகமுண்டு. மேலும், இங்கும், கிளிநொச்சிப் பிராந்தியம் கைப்பற்றப்படுவது முக்கிய நடவடிக்கைகளுள் ஒன்றாகவுள்ளது.

அரசு பூநகரி அல்லது வேறு பாதையைத் திறந்தாலும், அது கிளிநொச்சிப் பிராந்தியத்தினைக் கைப்பற்றுவதன்மூலம் பொதுமக்களின் போக்குவரத்தையும், விடுதலைப் புலிகளின் அசைவையும் கட்டுப்படுத்த முடியுமாகையால், ''பாதை திறப்பானது'', உண்மையில், கிளிநொச்சிப் பகுதிகளை அரச படைகள் தகுந்த நேரத்தில் கைப்பற்ற ஆயத்தம் செய்யப் பட்டுள்ளது என்பதையே உறுதிப் படுத்தும்.

ஒட்டுமொத்தத்தில், ''இராணுவத் தீர்வானது'' உண்மையில் ஒரு நீண்டகாலத் தீர்வாகவும், சிறீலங்கா இராணுவம் நீண்டகாலமாக வடக்கில் தங்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் தீர்வாகவும், அழிவுகளையும், பொருளாதார நட்டங்களையும் நீண்டகாலம் ஏற்படுத்தும் தீர்வாகவும் சந்திரிக்கா அரசிற்கு அமையும். ஆனால், இவைக்கு முன், வடபகுதி அனைத்தும் இராணுவ ரீதியில் அரச படைகளினது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட வேண்டும்.

இவற்றைவிட, எரிபொருட்கள், உணவுப்பொருட்கள், மற்றும் சிலபொருட்கள் யாழ்குடா நாட்டினுள் கொண்டுவர அனுமதிக்கும் அளவுகளில் கட்டுப்பாடுகள் தொடரும்.

## அரசியல் தீர்வு

இலங்கையின் இனப்பிரச்சனையினைத் தீர்ப்பதில் ''அரசியல்'' தீர்வை ஒரு அரசு முன்வைக்குமேயாயின், அது கீழ்வரும் சந்தர்ப்பங்களில்தான் எழமுடியும்:

(1) நாடு எதிர்நோக்கும் பொருளாதார, சமூகப் பிரச்சனைகளும், ஆகவே அரசியல் பிரச்சனைகளும்;

(2) இராணுவத்தீர்வு உடனடியாக வெற்றியளிக்காத நிலையும்; முழுமையான தீர்வுக்கு நீண்டகாலம் எடுக்கவிருப்பதும்;

(3) அரசின் தலைவர்கள் முதல் தடவையாக அதிகாரத்தைப் பெற்றிருக்கும் நிலையும், அரசு ஸ்திரமற்றதாக இருப்பதுவும்;

(5) பிற நாடுகளின் அழுத்தங்கள்;

(6) அரசின் தலைவர்களது சித்தாந்தக் கொள்கைகள்.

இவற்றுள் எது, அல்லது எவைகள் சந்திரிக்கா அரசினை ''அரசியல் தீர்வை'' முன்வைக்க நிர்ப்பந்தித்துள்ளன என்பதில்தான், அரசியல் தீர்வு எவ்வளவுக்குச் சாத்தியமாகும், அது எவ்வளவிற்கு நிரந்தர அமைதியை நாட்டில் ஏற்படுத்தும் என்பவைகள் தங்கியுள்ளன. ஆகவே இவைபற்றி ஒவ்வொன்றாகச் சுருக்கமான முறையில் ஆராய்வோம்.

## 1. பொருளாதாரப் பிரச்சனைகள்:

கடந்த 10 ஆண்டுகள் காலப் போரானது இனப்பிரச்சனைக்குத் தீர்வைக் காணுதபோதும், நாட்டிற்குப் பாரிய பொருளாதாரப் பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளது. இது குறுகிய காலக் கண்ணோட்டத்திலும், நீண்டகாலக் கண்ணோட்டத்திலும் பாதிப்புகளை ஏற்படுத்தியேயுள்ளது. இலங்கையில் நடைபெற்றுவரும் போரானது பொருளாதாரத்தினை மூன்று விதமாகப் பாதித்துள்ளது. அவை யாவன.

(1) படைகளின் செலவு உள்ளூர் பணத்திலும், ஆயுதக் கொள்வனவுச் செலவு வெளிநாட்டுப் பணத்திலும் அதிகரித்தமையும், இப் பணம் உற்பத்தியைப் பெருக்கவும், அபிவிருத்தியை ஏற்படுத்தவும் பயன்படுத்த முடியாது போனமையும்;

(2) போர் காரணமாக வடக்குக் கிழக்கின் உற்பத்திகள் தடைப்பட்டதனால், வடக்குக் கிழக்கில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பொருட்கள் வெளிநாட்டுப் பணத்திற்கு இறக்குமதி செய்யப்பட வேண்டிய கட்டாயமும், அபிவிருத்தி வேலைகளுக்கு வெளிநாட்டுப் பணத்தைச் செலவு செய்யவேண்டிய கட்டாயமும்!

(3) இலங்கையின் போரானது உல்லாசப் பயணிகள் வருகையைக் குறைத்ததன் மூலமும், வெளிநாட்டு முதலீடுகளைக் குறைத்ததன் மூலமும், வெளிநாட்டுப் பண வருவாயைப் பெரிதும் பாதித்தமையும்.

### (1) படைச் செலவு :

படைகளுக்கான ஆயுதக் கொள்வனவுகள் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டே செய்யப்படுகின்றன. இதைவிட, படைகளுக்குத் தேவையான போக்குவரத்து சாதனங்கள், போர்ச் சாதனங்கள் (Tanks, Personnel Carriers, Air Crafts, Helicopters, Gun Boats, Ships, Communication Equipment, Trucks, Jeeps etc.), மருந்து வகைகள், மருத்துவ சாதனங்கள், எரிபொருட்கள் எல்லாம் வெளிநாட்டுப் பணத்திற்கே கொள்வனவு செய்யப்படுகின்றன. வருடா வருடம் இதன் அளவு அதிகரித்தே வந்துள்ளது.

படைகளுக்கான உள்நாட்டு பணச்செலவும் வருடா வருடம் பன்மடங்குகளாக அதிகரித்தே வந்துள்ளது. ஒரு தசாப்தத்திற்கு முன் சில ஆயிரம் படைகளைக் கொண்டிருந்த சிறீ லங்கா, இன்று 100,000 வரையான படையினரைக் கொண்டுள்ளது. படையினரின் சம்பளம், இறந்தவர்களுக்கான நட்டஈடு, ஓய்வுபெறும் காலம் வரையான சம்பளம், ஓய்வூதியம் என்பவைகள் வருடாவருடம் உயர்ந்து, மக்களுக்கு நிரந்தரப் பளுவினை ஏற்றியுள்ளது. எந்தவித உற்பத்தியிலும் ஈடுபடாத படையினர்க்கான பணச் செலவும், மனித சக்திச் செலவும் பொருளாதாரத்தினைப் பாதித்துள்ளது.

இவற்றிற்கு மேலாக, இலங்கையின் இராணுவம் இன்று அரசியலையும் நிர்ணயிக்குமொரு அமைப்பாகவும் மாறியுள்ளது.

## (2) வடக்குக் கிழக்கின் உற்பத்தித் தடைகள், போக்கு வரத்துத்தடைகள்.

போர் காரணமாக வடக்குக் கிழக்கில் ஏற்பட்டிருந்துவரும் உற்பத்தித் தடைகள், போக்குவரத்துத் தடைகள் என்பவை தென் இலங்கையில் வாழ்க்கைச் செலவை அதிகரித்திருப்பதுடன், வெளி நாட்டுப் பணச்செலவையும் இறக்குமதியில் அதிகரித்துள்ளது.

இவைகள் கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்.

(1) சீமெந்து உற்பத்தி;
(2) கடலுணவு உற்பத்தி;
(3) நெல் உற்பத்தி;
(4) காய் கறி, பழவகைகள்;
(5) உப்பு உற்பத்தி

### (1) சீமெந்து உற்பத்தி:

இலங்கையின் கணிசமான சீமெந்து உற்பத்தி வடக்கில்தான் நடைபெற்று வந்தது. 1990 ஆம் ஆண்டு ஆரம்பித்த போரைத் தொடர்ந்து, சீமெந்து உற்பத்தி காங்கேசன்துறை உற்பத்தியாலைகளில் நிறுத்தப்பட்டன. இந்த நிலையில், சிறீ லங்கா அரசு மேலதிகமான சீமெந்தினை வெளிநாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பணத்திற்கு இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால், தெற்கின் கட்டடவேலைகளுக்கும், வேறு அபிவிருத்தி வேலைகளுக்கும் வெளிநாட்டுப்பணம் செலவு செய்யும் நிலை உருவாகியுள்ளது. முன்னர் இவ் வேலைகள் உள்நாட்டுப் பணச்செலவுடன் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இந்த நிலையில், போரினை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலமும், காங்கேசன்துறை உற்பத்தி ஆலைகளில் உற்பத்தியை ஆரம்பிப்பதன்மூலமும், அரசு ஒரு வருடத்திற்குப் பல மில்லியன் வெளிநாட்டுப் பணத்தை மிச்சம் பிடிக்கக் கூடியதாக இருப்பதுடன், கட்டட, அபிவிருத்தி வேலைகளையும் தீவிரப்படுத்த முடியும்.

சந்திரிக்கா அரசு இதனைச் செய்வதாயின், முதலில் காங்கேசன்துறை ஆலைகளைத் திருத்தி, அங்கு மின்சக்தி விநியோகத்தினையும் செய்ய வழிவகுக்க வேண்டும். முன்னர் அங்கு, ஒவ்வொன்றும் 10 மெகா(வ்)வட்ஸ் (Mw) மின் சக்தியை உற்பத்தி செய்யும், 2 Gas - Turbine Generators மின் சக்தியை உற்பத்தி செய்தன. இவற்றைக் கொண்டு மின் சக்தியை உற்பத்தி செய்யமுடியும்.

ஆனால், வடக்கில் மின்சக்தி இல்லாது இருக்கும்போதும், சீமெந்துத் தட்டுப்பாட்டினால் வீடுகளைத்திருத்தி வாழ முடியாத நிலையில் யாழ்குடா மக்கள் இருக்கும் போதும், சந்ரிக்கா அரசு காங்கேசன் துறையில் மின்சக்தியை உற்பத்தி செய்து, சீமெந்தினை யும் தெற்கே எடுத்துச் செல்வது தமிழ் மக்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் அதிகரிக்குமாகையாலும், சந்ரிக்கா அரசின் இனப் பிரச்சனைத் தீர்வு போலியானது எனவும் தமிழ்மக்கள் கருதுவார்க ளானபடியாலும், சீமெந்து ஆலையை இயக்க முன்னர், சந்திரிக்கா அரசு இரண்டு முக்கிய வேலைகளைச் செய்வதன் மூலமே தமிழ் மக்களை ஓரளவிற்குத் திருப்திப்படுத்த முடியும். அந்த இரண்டு காரியங் களும் பின்வருமாறு :

(1) வடபகுதிக்குப் பெயரளவில் மின்சக்தியை விநியோகிப்பது :

(2) வடபகுதிக்குப் பெயரளவில் சீமெந்தினை விநியோகிப்பது.

வடபகுதிக்கு நீர் மின்சக்தியை (Hydral Electric Power) மீண்டும் கொடுப்பது இன்று சாத்தியமற்ற விடயமென்பது சந்ரிக்கா அரசிற்கு நன்றாகத் தெரியும். மேலும், வடபகுதி முழு வதற்கும் வேறுவழியில் மின்சக்தி கொடுக்க முடியாதென்பதும் சந்ரிக்கா அரசுக்கு நன்றாகத் தெரியும்.

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் மின்சக்தி இலங்கை முழு வதற்கும் விநியோகிக்கப் போதுமானதல்ல. மறுபுறத்தில், வடபகுதி யில் 132Kv., 66Kv, 33Kv, 11Kv. மின்விநியோகக் கம்பிகளும், கோபுரங்களும் சேதமுற்றிருப்பதுடன், பல்வேறு Transformers (மின்மாற்றிகளும்), 230V மின்கம்பிகள், தூண்களுமே அழிந்துள்ளன. இவைகளைத் திருத்தப் பல மாதங்கள் எடுக்கும். அப்படி இவற்றைத் திருத்தினாலும், இங்கு எண்ணெய் எரிவில் இயங்கும் மின் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டே மின்சக்தி உற்பத்தி செய்யப்பட முடியும்.

அப்படியாயின், சில மின் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு, பிரசாரத்திற்கு வழிவகுக்க, முக்கிய ஒருசில பட்டினங்கள், யாழ் நகர், மற்றும் ஒருசில பட்டணங்களுக்கும் மின் விளக்குகள் எரிக்க மின்சக்தி விநியோகிப்பதே சந்ரிக்கா அரசின் ''மின்சக்தி விநியோகத் திட்டமாக'' அமையும்.

இது அரசியல் பிரசாரத்திற்கு முக்கியமானதுடன், பொருளாதார ரீதியில், இருல் போட்டுச் சுருப்பிடிக்கும் ஒரு முயற்சியுமாகும்.

காங்கேசந்துறை சீமேந்து ஆலைகள் அன்று இயக்கப்பட்டமை ஒரு சில ஆயிரம் தமிழர்களுக்கு நன்மையாக இருந்தபோதும், வளி மண்டலம் மாசடைவதன் மூலம் யாழ் குடாவின் பல்லாயிரக் கணக்கான மக்கள், உயிரினங்கள் பாதிக்கப்பட்டு வந்ததுடன், பல்லாயிரம் ஏக்கர்' நிலத் தாவரங்களும் பாதிக்கப்பட்டு, மிகவும்

ஆழமாகக் கற்கள் கிண்டியெடுக்கப்பட்ட பரந்த பிரதேசமானது, காலப்போக்கில், உப்பு நீரால் மூடப்பட்டு, பாரிய பிரதேசங்களில் குடியிருப்புகள் இல்லாது போகும் ஆபத்தும் இருந்து வருகிறது.

இன்றைய நிலையில், சந்திரிக்கா அரசு தெல்லிப்பழை - பன்னாலை வீதிவரை கற்களைக் கிண்டி சீமெந்தினை உற்பத்தி செய்து தெற்கே கொண்டு செல்லுமேயானால், காலப்போக்கில், மல்லாகம், சுன்னாகம் வரை நிரந்தர பாதிப்புகள் ஏற்படலாம் இக்கட்டத்தில் சில "தரையமைப்பு நிபுணர்கள்" புதிய விளக்கங்களை முன்வைக்க முற்படலாம். யாழ் குடாவின் தரைப்படைகள் தொடர்பான அளவீடுகளையே முழுமையாகச் செய்யாத நிலையிலிருக்கும்போது, இவர்கள் எவ்வளவிற்குச் சரியான விளக்கங்களைத் தரமுடியுமென்பது கேள்விக்குரியதே.

இந்த நிலையில், சந்திரிக்கா அரசினது நடவடிக்கைகள், குறிப்பாக மின்சக்தி வினியோகம், சீமெந்து வினியோகம் என்பவை, மனோ ரீதியிலான சாதக விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம், சீமெந்து உற்பத்தியூடாக, அரசின் வெளிநாட்டுப் பணச் செலவைக் குறைப்பதும், தெற்கின் அபிவிருத்தித் திட்டங்களைத் தீவிரப்படுத்துவதுமாகும்.

2) கடலுணவு உற்பத்தி:

தென் இலங்கையின் கடலுணவுத் தேவைகளின் அரைப் பங்கிற்கு மேலானவை வடக்குக்கிழக்குப் பகுதிகளின் கடல்களிலுள் தான் பூர்த்திசெய்யப்பட்டு வந்தன. வடக்குகிழக்குப் போரானது இப்பகுதிகளின் கடலுணவு உற்பத்தியினை பெருமளவில் பாதித்துள்ளது. இதனால், வடக்குகிழக்கு மக்கள் மாத்திரமன்றி, தென் பகுதியினரும் உடன்மீன்களையும், கடலுணவுகளையும் சுவைக்க முடியாது போனதுடன், ஏற்றுமதி மூலமான வெளிநாட்டுப் பணவருவாயும் குறைந்து. வெளிநாட்டுப் பணத்திற்கு மீன் வகைகளை இறக்குமதி செய்யவும் நேரிட்டுள்ளது.

இப்படியான பெரும் பொருளாதாரப் பாதிப்பினைச் சிறீ லங்கா அரசுகள் எதிர்நோக்கி வந்தபோதும், போர்த் தந்திரோபாயத்தினைப் பொறுத்தமட்டில், வடக்குக்கிழக்குக் கடல் வலையங்கள் கடற்படையின் பூரண கட்டுப்பாட்டினுள் வைக்கப்பட வேண்டிய நிலை அரசுகளுக்கு ஏற்பட்டு வந்துள்ளது.

சந்திரிக்கா அரசானது ''இராணுவத் தீர்வினை'' முற்றாகக் கைவிடாத நிலை தொடரும்வரை, வடக்குப் பகுதிக் கடல் வலையங்களில் மீன்பிடி முற்றாகத் தடைசெய்யப்பட்ட நிலையும், கிழக்கிலும், மேற்கிலும் மீன்பிடி பகல் நேரத்தில் அனுமதிக்கப்படும் நிலையும் தொடரும். இதனாலேயே, இன்றும், வடபகுதிக் கரைகளில் மீனவர்கள் சிறீ லங்கா கடற்படையின் சூடுகளுக்குள்ளாகி, இறப்பதைக் காண முடிகிறது.

இதனாலேயே, வடபகுதி மக்களை இருளிலிருந்து மீட்க மின் சக்தியையும், உடைந்த வீடுகளில் வசிக்காது, திருத்திய வீடுகளில் வாழவெனச் சில ஆயிரம் சிமெந்துப் பைகளையும் வடக்கிற்கு அனுப்பும் சந்திரிக்கா அரசு, வடக்குக் கிழக்கு மக்களும்' தென் இலங்கைச் சிங்களவரும் ருசியான கடலுணவுகளைச் சுவைக்க விரும்பும் போதிலும், அவர்களின் மனிதாபிமானமான விருப்பு களைப் பூர்த்தி செய்வோம் எனக் கூறவுமில்லை, ''கடல்'' என்ற சொல்லினையே நாவால் மறந்தும் உச்சரிக்கவுமில்லை.

இராணுவத் தீர்வை நிரந்தரக் கொள்கையாகக் கொண்டி ருக்கும் சந்திரிக்கா அரசு, இன்று ''அரசியல் தீர்வு'' என்பதை இராணுவத்தீர்வுக்கு முன்பாகத் தற்காலிகமாக வைக்கும் போதி லும், கடல் வலையக் கட்டுப்பாடுகள் தளர்த்துவதுபற்றி அது எதுவும் கூறமுடியாதுள்ளது. சந்திரிக்கா அரசின் தந்திரோபாயங்களை ஆராய்ந்தறிந்த எவரும், கடல் வலையக் கட்டுப்பாடுகள் தளர்த் தப்படுவது பற்றிச் சந்திரிக்கா அரசிடமிருந்து எதனையும் எதிர் பார்க்க மாட்டார்.

**(3) நெல் உற்பத்தி:**

யாழ் குடாநாடானது மிக நீண்ட காலமாக, ஏன் பல நூற்றாண்டுகள் காலமாக, நெல் உற்பத்தியில் தன்னிறைவு இல்லா திருந்தபோதும், வடக்குக் கிழக்கானது தென் இலங்கையினது அரிசித் தேவையின் 40% வரையானதைப் பூர்த்தி செய்து வந்துள் ளது. வடக்குக் கிழக்கு போரானது நெல் உற்பத்தியையும், விநி யோகத்தினையும் பெருமளவில் பாதித்த நிலையில், மேலதிக அரிசி, கோதுமை என்பவைகளை சிறீலங்கா அரசு வெளிநாட்டுப் பணத் திற்கு இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி வந்துள்ளது. இப்பிரச்சனையினைத் தீர்ப்பதாயின், இரண்டு வழிகளே உள்ளன. அவையாவன:

1) நெல் உற்பத்தி நிலங்கள் சிறீ லங்கா படைகளின் இராணுவக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டு, அங்கு சிங்களக் குடியேற்றங்களைச் செய்வது;

2) இனப் பிரச்சனைக்குத் தீர்வினை ஏற்படுத்துவது.

இவற்றுள் எது நெல் உற்பத்தியைப் பொறுத்தமட்டிலும், வேறு கொள்கைகளைப் பொறுத்தமட்டிலும் இலாபகரமானது, சாதகமானது என்பவைகளைப் போறுத்தே சந்திரிக்கா அரசு முடிவை எடுக்கும். சந்திரிக்கா அரசினது அரசியல் தீர்வுத் திட்டத்தினில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக என்ன தீர்வுகள் முன்வைக் கப்படுகின்றன, வடக்குக் கிழக்குப் பகுதியின் நிர்வாக சபைக்கு நிலம்-அபிவிருத்தி-குடியேற்றம் என்பவை தொடர்பாக எப்படியான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன, வடக்குக் கிழக்கில் ஏற்கனவே

குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகள், விசேட சலுகை நிலை என்பனவைகளைக் கொண்டு, சந்ரிக்கா அரசிற்கு UNP அரசு போன்ற கொள்கைகளும், நோக்கங்களும் உள்ளனவா என்பதை அறிய முடியும்.

இராணுவ பாதுகாப்பின் கீழ் நெல் உற்பத்தியில் ஈடுபடுவது உண்மையில் நெல் உற்பத்திச் செலவை அதிகரிக்கும் நடவடிக்கையாகும். ஆனல், ஏற்கனவே உருவாக்கியிருக்கும் இராணுவத்திற்கு பணம் ஏதோவொரு வகையில் செலவுசெய்யப்படுவதால், நெல் உற்பத்திச்செலவில் வேறுபாடுகள் இல்லை எனக் கருதவும் முடியும். வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்வது மிக முக்கிய நோக்கமாகச் சந்ரிக்கா அரசு கருதினால், முதலாவது முறை தொடரப்படலாம், அல்லது தீர்வுத் திட்டத்தில் இக்குடியேற்றப் பகுதிகள் மத்திய அரசின் நேரடிக் கட்டுப் பாட்டின் கீழ் வைக்கப்படலாம்.

(4) காய்கறி, பழவகைகள், புகையிலை

தென்இலங்கையின் காய்கறி, பழவகைகள், புகையிலை போன்றவற்றின் தேவைகளினது கணிசமான பகுதியை வடக்குக் கிழக்கே பூர்த்தி செய்து வந்தது. மஹாவலி திட்டத்தின் கீழ் இவற்றின் உற்பத்தியினைத் தெற்கில் அதிகரிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தாலும், மிளகாய், சின்ன வெங்காயம், புகையிலை, சில காய்கறிகள், வாழை, மா, பலாப்பழம், திராட்சைப்பழம் என்பவறின் கணிசமான விநியோகம் வடக்குக் கிழக்கிலிருந்தே நடைபெற்று வந்தது. போர் காரணமாக இவைகளின் ஏற்றுமதியும், உற்பத்தியும் தடைப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டவைகளைத் தெற்கில் இன்று உற்பத்தி செய்து, தேவைகள் பூரணப்படுத்தப்படவில்லை. கணிசமான இப்பொருட்கள் இறக்குமதி செய்யவே படுகின்றன. வடக்குக் கிழக்கைப் பொறுத்தமட்டில், மண்எண்ணெய், உரம், மருந்துவகைகள், நீர் இறைக்கும் இயந்திரங்களின் விநியோகம், போக்குவரத்து என்பவை கட்டுப்படுத்தப்பட்ட நிலையில்தான், மேலே குறிப்பிட்டவைகளின் உற்பத்தி குறைந்துள்ளது.

இந்த நிலையில், விவசாயத்திற்கான பொருட்கள் விநியோகிக்கப்பட்டு, பூநகரி அல்லது வேறு பாதை திறக்கப்படுமேயானல் தென் இலங்கையர் இப்பொருட்களை மலிவாகப் பெறமுடியும்.

போக்கு வரத்துப் பாதையை திறக்கப்படுவதும், விவசாயத்திற்கான பொருட்கள் கிடைக்க வழிவகுக்கப்படுவதும் தமிழ் மக்களுக்குப் பொருளாதார இலாபத்தைக் கொடுக்கிறது எனச் சந்ரிக்கா அரசு பிரசாரம் செய்ய முடியும், தமிழ் விவசாயிகளும்,

தரகு முதலாளிகளும் கூறமுடியும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், இது தென் இலங்கை அரசிற்கும், தென் இலங்கை மக்களுக்கும், தமிழ் மக்களுள் ஒரு சிறு பகுதியினருக்கும் பெரு இலாபத்தைக் கொடுக்கையில், பெரும்பான்மையினரைப் பெருமளவில் பாதிக்கவே செய்யும்.

மேலே குறிப்பிட்ட விவசாயப் பொருட்களின் விலைகள் கொழும்பில் நிர்ணயிக்கப்படுகின்றன. இவைகள் பழுதடைய முடியுமாகையால், தென் இலங்கைக்குப் பொருட்களைக் கொண்டு செல்வோர் தவிர்க்க முடியாதபடி பொருட்களைக் குறைவான விலைக்கே விற்க வேண்டியுள்ளது. ஆனால், பொருட்களைத் தென் இலங்கைக்கு ஏற்றியனுப்புவது உற்பத்தி செய்யுமிடத்தில் இப் பொருட்களின் சந்தை விலையை உச்சப்படுத்துகிறது இதனால், வாழ்க்கைச் செலவு பன்மடங்காகிறது. உற்பத்தி செய்யப்படும் இடத்தில் விலைகள் மிக அதிகமாக இருக்கையில், தெற்கில் விலைகள் மலிவாகவுமிருக்கும்.

இப்படியான விலை மாற்றங்களுக்கு முக்கிய காரணம் என்னவென்றால், காய் கறி, பழங்கள் என்பவை பதப்படுத்தியும், சேமிந்து வைக்கவும் தகுந்த முறைகள் கையாளப் படாதமையும், தொழிற்சாலைகள் அமைக்கப்படாதமையுமாகும்.

ஒரு சமூகத்தினதோ அல்லது நாட்டினதோ பொருளாதாரம் முன்னேற வேண்டுமாயின், பொருட்களின் விலைகள் பெரும் அளவில் ஏறி-இறங்காது ஸ்திரமாக வைத்திருக்க வேண்டும். ஆனால். கடந்த காலங்களில் எமது அரசியல் வாதிகளும், விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களும் விவசாய உற்பத்திப் பொருட்களின் விநியோகத்தினையும், விலையையும் ஸ்திரமாக வைத்து, இலாபங்களை உச்சப்படுத்த உதவும் வகையில், பதனிடுதல், சேமித்து வைத்தல் என்பவை தொடர்பாக ஆராய்ச்சிகளைச் செய்யவுமில்லை, விவசாயப் பொருட்களை அடைக்கும், Packet பண்ணும் தொழிற்சாலைகளை அமைக்க முயற்சிக்கவுமில்லை.

ஒருகால கட்டம்முதல், சிறீலங்கா அரசுகள் இப்படியான சிறு கைத்தொழில் ஆலைகளை வடக்குக் கிழக்கில் அமைக்க அனுமதிகளை வழங்கவுமில்லை, உற்பத்தியில் ஈடுபடத் தேவையான பொருட்களைப் பெறஅனுமதிகளை வழங்கவுமில்லை.

இன்று சந்ரிக்கா அரசு வடக்கின் விவசாயிகளுக்கு வாழ்வு கொடுக்க முன்வந்துள்ளது. விவசாய உற்பத்தியைக் கூட்ட உதவ முன்வந்துள்ளது. மேலும், பழுதடையும் இந்த விவசாய உற்பத்திப் பொருட்களை, பழுதடையமுன்னர், குறுகிய காலத்தில். தென் இலங்கைக்குக் கொண்டு செல்லவெனப் பாதையைத் திறக்கவும் முடிவுசெய்துள்ளது. ஆனால், ஏனைய சிங்கள அரசுகளைப் போலவே சந்ரிக்கா அரசும் வடக்குக் கிழக்கில் விவசாய உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தியும், வேறுவகையிலும் அடைக்கும் தொழில்சாலைகள் அமைக்கவோ, அல்லது ஏனைய மூலப்பொருட்களை தடையின்றிப் பெறவோ அனுமதிக்கப் போவதில்லை.

இந்த நிலையில், அரசியல் தீர்வுத் திட்டத்தினை முன்வைக்கவுள்ள சந்திரிக்கா அரசு, வடக்குக்கிழக்கில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க உதவும் விவசாய ஆராய்ச்சிகளையும், விவசாய உற்பத்திப் பொருட்களைப் பதனிடவும், சேமித்து வைக்கவும் ஆராய்ச்சிகளைச் செய்யும் உரிமையை, அதிகாரத்தை வழங்குமா? அல்லது விவசாய உற்பத்திப் பொருட்கள் தொடர்பான உற்பத்தியாலைகளை அமைக்கும் அதிகாரமும், உற்பத்திக்கு தேவையான ஏனைய மூலப் பொருட்களை இறக்குமதி செய்யும் அதிகாரமும், உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் அதிகாரமும் வடக்கு கிழக்குக்கு வழங்கப்படுமா?

இவைகளுக்கான உரிமைகளும், அதிகாரமும் வழங்கப்படாது, மத்திய அரசே இவற்றையெல்லாம் கட்டுப்படுத்துமாயின், ஏகாதிபத்தியங்கள் தமது சுகவாழ்விற்கும், இலாபங்களுக்கும் முன்னேற்றமடையாத நாடுகளை மலிவுக் கூலிகளாகப் பயன்படுத்துவதுபோல், சிங்கள அரசும் தமிழர்களை மலிவுக் கூலிகளாகப் பயன்படுத்தும் கொள்கையைக் கொண்டுள்ளது என்பது உறுதியாகிறது.

நாட்டினதும், மக்களதும் முன்னேற்றத்தினை முழு முதற் கொள்கையாகக் கொண்டிருக்கும் ஒரு தேசிய அரசு மேற்குறிப்பிட்ட உரிமைகளையும், அதிகாரங்களையும் சகலருக்கும் வழங்க வேண்டும். இந்த உரிமைகளும், அதிகாரமும் வடக்குக் கிழக்குத் தமிழருக்கு நிராகரிக்கப்படுமேயாயின், சந்திரிக்கா அரசும் சிங்கள இனவாத அரசுதான் என்பது அசைக்க முடியாத உண்மையாகிறது.

இக்கட்டத்தில், அரசுகள் விவசாய உற்பத்தி தொடர்பான கட்டுப்படுத்தல்களைச் செய்வதை முன்னேறிய நாடுகளிலும் காண முடியும் என்றவொரு போலி விளக்கத்தினை சில பொருளியல் வல்லுனர்கள் முன்வைக்க முற்படலாம். ஆனால், இவர்களது விளக்கம் போலியானது, அடிப்படையற்றது.

இலங்கைத் தீவானது விவசாய உணவு உற்பத்தியில் தன்னிறைவு அற்றது. அரிசி கூட இன்றும் இறக்குமதியே செய்யப்படுகிறது. இப்படியான சூழ் நிலையில், உற்பத்தியைப் பெருக்கவும், விநியோகத்தினைச் சீராக்கவும், விலைகளைச் சீராக்கவும் வடக்குக் கிழக்கு மக்கள் முற்படுவதைச் சந்திரிக்கா அரசும், ஏனைய அரசுகளும் தடை செய்வது, இனவாதமே முன்னேற்றத்திலும் முக்கியமாகச் சிங்களவருக்குள்ளது என்பதை அசைக்க முடியாதபடி உறுதி செய்வதாகும்.

### (5) உப்பு உற்பத்தி

இலங்கையின் பிரதான உப்பு உற்பத்தி இடங்களிலொன்று ஆனையிறவு உப்பளமாகும். இனப்பிரச்சனையால் நடைபெறும் போரானது உப்பு உற்பத்தியை இங்கு தடைப் படுத்தியுள்ளது.

தென் இலங்கையில் உப்பு உற்பத்தி நடைபெறும் போதிலும், ஆனையிறவில் உற்பத்தி தடைப்பட்டமை, சிறீலங்கா அரசினை உப்பினை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளியுள்ளது.

இப்பிரச்சனை தீர்க்கப்படுவதாயின், ஆனையிறவில் உப்பு உற்பத்தி ஆரம்பிக்கப்பட வேண்டும். மேலும், தரைமார்க்கமான போக்குவரத்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவற்றை இரண்டு விதமாகவே செய்ய முடியும். அவையாவன:

(1) கிளிநொச்சி, ஆனையிறவு, மற்றும் வவுனியா வரையான தரைப் பகுதிகள் இராணுவ கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட வேண்டும்;

(2) இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டும்.

இவைகளைவிட, வேறு சில உற்பத்தித் தடைகளும் அரசினைப் பொருளாதார ரீதியில் பாதித்துள்ளன. எது விதத்திலும், பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதாயின், இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பது பொதுவாகவுள்ளது. ஆனால், இது "அரசியல்" ரீதியில் தீர்க்கப்படுவது குறுகியகால, நீண்டகால இலாபங்களின் கண்ணோட்டத்தில் சிறந்ததா, அல்லது "இராணுவ" ரீதியில் தீர்க்கப்படுவது இலாபகரமானதா என்பதை ஆராய்ந்தறிந்தே சந்திரிக்கா அரசு இறுதித் தீர்வினை முன்வைக்கும்.

## உல்லாசப் பயணிகளின் வருகை வீழ்ச்சி:

வடக்குப் பகுதியானது உல்லாசப் பயணிகளுக்கு அதிகம் நாட்டமில்லாத பகுதியாகவிருக்கும் போதிலும், வடக்குக் கிழக்குப் போரானது கிழக்கில் உல்லாசப்பயணிகளின் வருகையைக் குறைத்திருப்பதுடன், தென் - இலங்கையிலும் உல்லாசப் பயணிகளின் வருகையைப் பெருமளவில் பாதித்துள்ளது. கொழும்பு நகரில் நடைபெற்ற குண்டுவெடிப்புகள் காலத்திற்குக்காலம் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வருவதை ரத்துச் செய்யவே வைத்துள்ளது.

குறைந்த பணத்துடன் கூடிய மகிழ்வைப் பெறும் நோக்கமுடைய உல்லாசப் பயணிகள், சிறீலங்கா அரசின் இனவாதக் கொள்கைகளை எதிர்த்து இலங்கைக்கு வருகைதராது நிற்பர் என எந்தவகையிலும் கருதமுடியாது. இந்த நிலையில், வடக்குக் கிழக்கில் நடைபெறும் போரானது உல்லாசப் பயணிகளின் வருகையை நேரடியாகப் பாதிக்கவுமில்லை (கிழக்கைத் தவிர்ந்து), இனியும் பாதிக்கப்போவதில்லை.

ஆனால், கொழும்பில் நடைபெறும் குண்டுவெடிப்புகள் தமது பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கலாம் என்ற அச்சமே வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையைச் சீரற்ற தாக்குகிறது.

அதாவது: உல்லாசப் பயணிகளின் வருகையும், வருமானமும் இடையிடையே குறைக்கப்படுகிறது. இப்பிரச்சனையைச் சிறீலங்கா அரசு இரண்டு வழியிலேதான் தீர்க்கமுடியும். அவையாவன:

(1) கொழும்பு நகரில் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தி, கொழும்பு பாதுகாப்பானது என்ற உணர்வை வெளிநாட்டாருக்கு ஏற்படுத்துவது;

(2) இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது.

எதுவிதத்திலும், முதலாவது முறையானது மிகவும் சுலபமான முறையில் பயனற்றதாக்க முடியும். குண்டு வெடிப்புகளை நடாத்துவோர் உல்லாசப் பயணிகள் செல்லும் கொழும்பு தவிர்ந்த வேறு இடங்களில் குண்டுவெடிப்புகளைச் செய்வார்களேயாயின், பாதுகாப்பானது பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டி நேரிடும். ஆனால் உல்லாசப்பயணிகள் தமது நாடுகளுக்குத் திரும்பவே முற்படுவர்.

## வெளிநாட்டு முதலீடுகளில் வீழ்ச்சியும், வருமான வீழ்ச்சியும்:

இலங்கையின் இனப்பிச்ரசனை காரணமாக நடைபெற்று வரும் போரானது அரசினையும், நாட்டின் அரசியலையும் ஸ்திரத் தன்மையைத் தொடர்ந்து இழக்கவே செய்து வந்துள்ளது. இவைகள் மூலதனங்களையிட்டு இலாபங்களையடைய முற்படும் பிற நாட்டாருக்கு ஒருவித ஐயப்பாடுகளையே ஏற்படுத்தும். இதனால் பிறநாடுகள் மூலதனமிடுவதில் பின்னடிப்பையே செய்வர். இது வருமானத்தைப் பாதிக்கும்.

இது தொடர்பான விரிவான ஆராய்வைப் பின்னர் பார்க்கலாம்.

மேலே ஆராய்ந்தவை அனைத்தையும் ஒன்றிணைத்து ஆராயும் போது, இலங்கையின் இனப்பிரச்சனையானது இலங்கையின் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்துள்ளது. இது தெற்கில் வாழ்க்கைச் செலவை அதிகரித்திருப்பதுடன், இலங்கையின் அபிவிருத்தியிலும், முன்னேற்றத்திலும் குறுகியகால, நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், போர் சூழ்நிலையானது தென் இலங்கையர்களுள் சிறு பகுதியினரை மிகவும் செல்வந்தர் ஆக்கியுமுள்ளது. இன்றைய நிலையில், தென் இலங்கையின் 20% மானோர் தென் இலங்கையின் 60–70% மான செல்வத்தைக் கொண்டிருக்கும் நிலையை உருவாக்கியுள்ளது. ''இல்லை'' என்போர் அதிகரித்திருக்கும் நிலையில், தென் இலங்கையில் காலப்போக்கில் சமூகப் பிரச்சனைகள் அதிகரிக்கவும், வன்முறைகள் அதிகரிக்கவும், அரசியல் போக்கில் மாற்றங்கள் ஏற்படவும் சந்தர்ப்பங்களுண்டு.

இனப்பிரச்சனை தொடருமேயானால், பொருளாதார, சமூக, அரசியல் பிரச்சனைகள் தொடர்ந்து, தென்இலங்கையில் வேறு வித பிரசனைகளும் எழமுடியும். இவைகளும் சந்ரிக்கா அரசை இனப் பிரச்சனைக்குத் தீர்வைக்காண நிர்ப்பந்தித்துள்ளன.

## அரசின் தலைவர்கள் முதல் தடவையாக அதிகாரத்தைப் பெற்றிருக்கும் நிலையும், அரசு ஸ்திரமற்றதாக இருப்பதுவும்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு "இராணுவத் தீர்வினை" முன்வைத்து வந்த சிங்களத் தேசியக்கட்சிகள், தமது தலைவர்களை இழந்தும், வயோதிபம் காரணமாக சில அரசியல் தலைவர்கள் ஒதுங்கிய நிலையிலும், இன்று, புதிய, இளம் தலைமுறைகளைத் தலைவர்களாகக் கொண்டுள்ளன. சிங்களத் தேசியக் கட்சிகளில் தலைமைத்துவமானது நீண்டகாலமாக ஒரு சில தனிநபர்களின் கைகளில் இருந்துவந்தமை, தலைமைத்துவத்தில் வெற்றிடங்கள் தவிர்க்கமுடியாதபடி ஏற்பட்ட போது, கட்சிகளுள் தலைமைத்துவத்திற்கான போட்டிகள் தீவிர மடைந்து, கட்சிகளுள் பிளவுகள் ஏற்பட்டன. இப்பிளவுகள் கட்சி களின் செயற்பாடுகளில் பின்னடைவுகளையும் ஏற்படுத்தி, அரசியல் முதிர்வற்ற இளம் சந்ததி இலங்கைத் தீவின் அரசியலை நடாத்தும் நிலையைத் தவிர்க்கமுடியாதபடி ஏற்படுத்தியுள்ளது. சிங்களவரின் கட்சிகள் அனைத்தும் இதற்கு விதிவிலக்காக இல்லை. இதற்கு இசுலாமி யரும், இலங்கை, இந்தியத் தமிழரும் விதிவிலக்காகவில்லை.

இசுலாமியரிடையே இளைய தலைமுறை ஏற்கனவே தலைமைத்து வத்தைப் பொறுப்பேற்றிருக்கும் போதும், இலங்கையின் இந்திய வம்சாவழியினரிடையே இப்போதுதான் மாற்றங்கள் ஏற்பட ஆரம் பித்தன. ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தமட்டில், 1983 ஆம் ஆண்டுகளிலேயே இளைய தலைமுறைகள் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுவந்தபோதும், "கண்டிச் சிங்களவர்", "கீழ்நாட்டுச் சிங்களவர்" "(g) கொய்கம", "குறைந்தசாதி"ச் சிங்களவர் என்றும், பௌத்தர் கள், பௌத்தமதமற்றோர்கள் என்றும் பிரிவினைகள் தீவிரமடைந்த நிலையில், முதியோர்களே தலைமைத்துவத்தினத்தைத் தொடர்ந்தும் வைத்திருக்கவேண்டியிருந்தது.

இளைய தலைமுறையினர் தமிழர்களுக்கெதிரான போரில் தீவிரத் தன்மையை வெளிக்காட்டித் தம்மை "சிங்களம்", "பௌத்தம்" என்பவைகளுடன் அடையாளம் காட்டமுற்பட்டனர். கட்சியின் முதுநிலை அங்கத்தவரான காலம் சென்ற பிறேமதாஸ கீழ்நாட்டு "குறைந்த" சாதியினர் என்ற முறையில், கட்சியிலும், அரசிலும் முக்கியத்துவம் கொடுக்கப்படாதவராக இருந்தார். இது UNP இனுள் பிளவுகளையும், போட்டிகளையும் ஏற்படுத்தியது. எதுவிதத் திலும், UNP யினுள் தலைமைத்துவத்திற்கான போட்டியில் இலங்கை-இந்திய ஒப்பந்தம்" பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

காமினி திஸ்ஸநாயக்க இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினை ஆதரித்துச் செல்வாக்கைப் பெற முற்பட்டார். அத்துலத்முதலி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைக் கொள்கையளவில் எதிர்த்த போதும், அதனைப் பகிரங்கமாகவும், தீவிரமாகவும் எதிர்க்கவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தம் தொடர்பாக இறுதி நேரம்வரை இருட்டடிப்புச் செய்பட்ட நிலையிலிருந்த பிறேமதாஸவிற்கு உலகின் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வந்த சிங்களப் பௌத்தர்களின் பல்வேறு அமைப்புகள்: '' இலங்கையில் சிங்களவரையும் பௌத்தத் தையும் காப்பாற்றும் பொறுப்பு உங்கள் கைகளில்தான் உள்ளது, எமது ஆதரவு எப்போதும் இருக்கும் '' என்ற கோரிக்கையையும், உறுதி யையும் அனுப்பியிருந்தன. இதைப் போன்ற சில கோரிக்கை-உறுதிமொழிகளைச் சில வெளிநாட்டுச் சிங்கள பௌத்த அமைப் புகள் திருமதி பண்டாரநாயக்கவிற்கும் அனுப்பியிருந்தன.

இவற்றின் விளைவாக, UNPயினுள் பிறேமதாஸ அணியினர் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினைத் தீவிரமாக எதிர்த்தனர். திருமதி பண்டாரநாயக்கவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினுள் ஏற்பட்ட அதிகார கைப்பற்றல் போட்டியானது இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வடிவிலும், சிங்கள, தமிழ் மக்களிடையே ஆதரவைத் தேடும் காரியங்களில் ஈடுபடும் வழியிலும் அமைந்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் முதிர்ந்த அரசியல் வாதியும், 10 வருடங்கள் நிதி அமைச்சராக இருந்தவரும், மேற்கு நாடுகளின் நன் மதிப்புக்குரியவராக இருந்தவருமான றொனி டி மெல் அவர்கள் Radio France International இற்குக் கொடுத்த பேட்டியின் போது ( Interview ): UNP அரசு மக்களிடமிருந்து ஆணையை ( Mandate )ப் பெற வேண்டியுள்ளது என்ற கருத்தைத் தெரிவித் தமை, அவரைக் கட்சியிலிருந்தே நீங்க நிர்ப்பந்தித்தது. இது அவரை ஜனாதிபதித் தேர்தலில் UNP அபேட்சகராக நிற்கமுடியாது செய்தது.

1987 நொவெம்பர் மாதத்தில் (g) காமினி திஸ்ஸநாயக்க விடுதலைப் புலிகளுடன் இரகசியமாகப் பேச்சுவார்த்தைகளை நடாத்த முற்பட்டு, அது இந்திய அரசிற்குத் தெரிய வந்ததுடன், சிங்கள மக்களுக்கும் கொழும்புப் பத்திரிகைகளூடாக வெளிவந்தது. குறிப் பாக: Sun (Week End) பத்திரிகையில், '' Direct Connection Disconnected by India '' என்ற தலைப்பிலான முழுப்பக்கக் கட்டுரை.

கட்சியின் முடிவின்றி அமைச்சர் (g) காமினி திஸ்ஸநாயக்க இரகசியப் பேச்சுவார்த்தைகளை நடாத்த முற்பட்டமை அவரைக் கட்சியினுள் பெரும் பிரச்சனைக்குள் வீழ்த்தியது. மேலும், சிங்கள மக்களிடையேயும் இவர் நன்மதிப்பை இழந்தார்.

தமிழர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை எடுப் பதில் மிகவும் தீவிரமாக இருந்துவந்த அத்துலத்முதலியும் தமிழர்கள் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் தொடர்பாகவும் தனது குரலை மாற்றி, தமிழ், ஆங்கில பத்திரிகைகளில் அறிக்கைகளை விடுத்தார்.

எதுவிதத்திலும். இவர்களது செயற்பாடுகள் கட்சியினுள் கடும் விமர்சிப்புக்குள்ளாகி, பிறேமதாஸ UNP இன் ஜனாதிபதி வேட் பாளராகத் தவிர்க்க முடியாதபடி தெரிவு செய்யப்பட்டார்.

UNP ஆனது தவிர்க்க முடியாதபடி பிளவுபட்டது. ஜனாதி பதித் தேர்தலில் வெற்றியீட்டிய பிறேமதாஸ கட்சியினுள் அதிகார வேட்கையுடையவராகக் காணப்பட்ட (g) காமினி திஸ்ஸநாயக்க, அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரத்ன என்பவர்களைப் பிரதம மந் திரியாக நியமிக்காது, D. B. விஜேதுங்க வைப் பிரதமராக்கினார்.

UNP இனது அரசியல் முதிர்வுடைய அரசியல் வாதிகள் பிறேமதாஸவினை எதிர்த்த நிலையில், அவர் தனிமையாக்கப்பட் டார். அவர் சகலவற்றையும் தானாக ஆராய்ந்து தந்திரோபாய ரீதியில் செயற்பட வேண்டியிருந்தது. இக்கட்டத்தில் எங்கோவி ருந்து ஒரு கை அவரது பீடத்தினையும், அரசையும் ஸ்திரப்படுத்த மேற்கொள்டப்படுவேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து, காலத் திற்குக் காலம் அவருக்குக் கடிதமூலம் அறிவுறுத்தல்களை அனுப்பி வைத்தது.

இவைகள் பிறேமதாஸ தனது ஆராய்வுகளும், முடிவுகளும் சரியானவைகளா என்பதை ஒப்பிடவும், பிழையான முடிவுகளை விட்டு, சரியானவைகளை நடைமுறைப் படுத்தவும் உதவின. இம் முடிவுகளுள் முக்கியமானவொன்று: பிரதமராக (g) காமினி திஸ்ஸ நாயக்க, அத்துலத் முதலி, ரஞ்சன் விஜெரட்ன என்பவர்கள் நியமிக் கப்படாது. D. B. விஜேதுங்க நியமிக்கப்பட்டமை தொடர்பானது.

காலத்திற்குக் காலம் அனுப்பப்பட்ட ஆய்வுகள், பிறேமதாஸ வின் அதிகாரத்தையும், அரசின் ஸ்திரத் தன்மையையும் ஏற்ப டுத்த ஏன் பிறேமதாஸ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை களை நடாத்த வேண்டும் என்பதைக் கடிதங்கள் மூலம் விளக்கின. 1989 ஏப்பிரல் மாதத்தில் பிறேமதாஸ விடுதலைப் புலிகளுடன் முதலில் தொடர்பு கொண்டார். அதிகார பூர்வப் பேச்சு வார்த் தையினை ஆரம்பிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இடையே தனது முடிவு தொடர்பாகத் தளம்பிய பிறேமதாஸ, சில அறிவுறுத்தல்களுடன் முடிவைத் திடப்படுத்திக் கொண்டார்.

பிறேமதாஸவின் இந்த முடிவுகள் அவரது சித்தாந்த அடிப் படைகளில் எழுந்தவையல்ல. அவரதுநிலை, நாட்டின் நிலை, அவரது குறிக்கோள்கள் என்பவைகளால் ஏற்படுத்தப்பட்ட நிர்ப்பந்தங்களின்

விளைவுகளே இவை. இவைகளைச் சரியாக ஆராய்ந்தறிய சில உதவிகள் அவருக்குப் பயனுகவிருந்தன. அவற்றை அவர் சரியாகப் புரிந்து கொண்டிருந்தார்.

தமிழர்களது நிலையானது பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட கொட்டைப்பாக்குப் போன்றது என அவர் குறிப்பிட்டபோதும், அவரால் இனப்பிரச்சனை தீர்க்கப்படவில்லை.

புதிதாக ஆட்சிப் பீடத்திற்கு வந்த பிறேமதாஸ, தனது பீடத்தை ஸ்திரப்படுத்தவேண்டிய நிலையிலிருந்தார். கட்சி பிளவு பட்டிருந்த நிலை ஒருபுறமும், தனது பீடத்தை ஸ்திரப்படுத்தி, அரசையும் ஸ்திரப்படுத்த வேண்டிய தேவை மறுபுறமும் எதிர் நோக்கிய பிறேமதாசவிற்குத் தனது குறிக்கோள்களையடைய சில கால அவகாசம் தேவைப்பட்டது. மேலும், இந்திய அரசின் எதிர்பைச் சம்பாதித்திருந்த பிறேமதாச, தன்னைப் பாதுகாக்கவும் வேண்டியிருந்தது.

இங்குதான் பிறேமதாசவிற்கு இந்திய இராணுவத்தையும், அதன் கைக்கூலிகளையும் அகற்றவேண்டியிருந்தது, விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டியிருந்தது. எந்த எதிரிப்படையை அழிப்பதற்கு இந்திய ''அமைதிப் படை'' தேவைப்பட்டதோ, அந்த எதிரிப்படையுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ''நம்பிக்கை'' ஏற்பட்டால், இந்தியப்படையின் தேவை இங்கு இல்லாதே போகிறது. இந்த அடிப்படையில் இந்தியப்படை 1990 முற்பகுதியில் வடக்குக் கிழக்கைவிட்டு முற்றுக வெளியேற நேர்ந்தது.

சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில், கட்சியும், அரசும், அதிகாரபீடமும் ஸ்திரமற்ற நிலையிலிருந்த பிரச்சனைகளைப் பிறேமதாச தீர்த்துக்கொண்டார். ஆனுல், பெரும் நஷ்டத்துடன்.

சந்ரிக்காவையும், பொ. ம. ஐ. முன்னணியையும். அது அமைந்துள்ளது அரசையும் எடுத்துக்கொண்டால், அவை அன்றைய U. N. P. யினது நிலையிலும், பிறேமதாஸவினது நிலையிலும்தான் உள்ளன.

பிறேமதாஸ நீண்டகாலம் அரசியலில் ஈடுபட்டு வந்து, அனுபவங்களையும் கொண்டிருந்தவர் சந்ரிக்கா அரசியலைப் பரியின் (Paris) ''சொர்பொன் பல்கலைக்கழகத்திலும் (Sorbonne University) ஆய்வு நிறுவனங்களிலும் பயின்றவர். ஆனுல், ஆட்சியை நடாத்துவதைப் பொறுத்தமட்டில், இருவரும் புதியவர்களே. இவர்களது கட்சிகளை எடுத்துக்கொண்டால், ஐக்கிய தேசியக் கட்சியானது, அன்று, ஒரு கட்சியாக இருந்தபோதும், வெவ்வேறு நலன்களைப் பேணிப்பாதுகாக்கும் நோக்கங்களையுடைய குழுக்களாகப் பிரிந்து, ஒருவித கூட்டமைப்பாகவே இருந்தது. ஆனுல், பொ. ம. ஐ. முன்னணியானது வெவ்வேறு நலன்களைப் பேணிப்பாதுகாக்கும் வெவ்வேறு குழுக்கள், தம்மிடையே காணப்பட்ட சில பொது நோக்கங்களால், ஒன்று சேர்ந்த ஒரு கூட்டமைப்பாகும்.

அன்று ஐ. தேசியக் கட்சியினுள் இருந்த பிளவுகள், அரசையும், ஜனாதிபதியையும் ஸ்திரமற்ற தாக்கியது. இன்று கூட்டுக் கட்சியின் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சி நடாத்தப் போதுமான ஆசனங்களைப் பெறவில்லை. மேலும், பொ. ம. ஐ. முன்னணி அரசினை நாடாளுமன்றத்தில் அமைத்திருக்கையில் சகல அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதி U. N. P. ஐச் சேர்ந்தவராகும். இவற்றை விட, புதிதாக ஆட்சிக்கு வந்த பொ. ம. ஐ. முன்னணியினுள் அதிகார போட்டிகள் தீவிரமடைந்துள்ளன. சந்ரிக்கா நாட்டுக்கு வெளியே போகும் போது, யாரைப் பதில் பிரதமராக வைப்பது என்பதில் ஏற்பட்ட போட்டிகள், சந்ரிக்காவினை மதிரி (Madrid) பயணத்தையே கைவிட வைத்தது.

சந்ரிக்கா தனது அதிகாரத்தையும், அரசினையும் ஸ்திரப் படுத்துவதாயின், இரண்டு முக்கிய விடயங்கள் நடைபெறவேண்டும், அவை யாவன:

1) சந்ரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று, மக்களது பூரண அதிகாரத்தைப் பெறவேண்டும்;

2) ஜனாதிபதி வெற்றியைத் தொடர்ந்து, நாடாளுமன்ற தேர்தலை நடாத்தி, தனது தனிக்கட்சியை நாடாளுமன்றத்தில் அதிகப்படியான ஆசனங்களைப் பெறவைத்து, ஸ்திரமான, சுதந்திர அரசை அமைக்க வேண்டும்.

சந்ரிக்காவின் நிலையானது பிறேமதாஸவின் அன்றைய நிலையிலும் சற்று மோசமானது. இப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாயின் சந்ரிக்கா தமிழ், சிங்கள, இசுலாமிய, மலையக மக்களின் ஆதரவைப் பெறுவேண்டும். இன்றைய நிலையில், சந்ரிக்காவுக்கும், பிறேமதாசவிற்கு அன்று இருந்தது போல், தனது பிரச்சனைகளைத் தீர்த்துத் தனது அதிகாரத்தையும், அரசின் ஸ்திரத்தன்மையையும் நிலைநாட்டிக் கொள்வதற்கு, இனப்பிரச்சனைக்குச் சாமாதானப் பேச்சுவார்த்கைள் மூலம் தீர்வு காண முற்படுவதே எஞ்சியுள்ள ஒரேயொரு வழி. ஏனெனில், கடந்த 10 ஆண்டுகள் காலமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த "இராணுவத் தீர்வு" இனப்பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவரவில்லை. ஆகவே, ஒட்டு மொத்த இராணுவ வெற்றியின் மூலம் சிங்கள மக்களின் பேராதரவைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை இல்லாத நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளே எஞ்சியுள்ள ஒரேயொரு வழியாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரும்போது, சந்ரிக்கா அரசு ஜனாதிபதித் தேர்தலில் முதலில் வெற்றி பெற்று, சந்ரிக்காவின் கட்சி தனித்து நாடாளுமன்றத்திலும் அதிகப்படியான ஆசனங்களைப் பெறவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதைப் பொறுத்தமட்டில்' சந்ரிக்காவிற்கு ஐந்து விடயங்கள் முக்கியமாகின்றன. அவையாவன:

1) சிங்கள மக்களிடையே, சமாதானப் பேச்சுவார்த்தைகளூடாக, சந்ரிக்கா பெரும் ஆதரவைப் பெற்றுக் கொள்வது;

2) இனப் பிரச்சனைக்கான தீர்வு என்பதன் கீழ் இசுலாமியரின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது;

3) தொண்டமானின் ஆதரவைத் தேடி, அல்லது வேறுவழியில், மலையக மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது;

4) இயலுமாயின், வடக்கில் தேர்தலை நடாத்தி, வடக்கு மக்களின் வாக்குகளையும் பெற்றுக்கொள்வது;

5) கிழக்கு, தென் இலங்கைவாழ் இலங்கைத் தமிழரின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது;

முதலாவதைப் பொறுத்த மட்டில். அது பாரிய பிரசாரங்களூடாகவே சாத்தியமாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் இங்கு முக்கியமாகிறது. எதுவிதத்திலும், பெரும் பிரச்சனைகளுக்குரிய விடயங்கள் தேர்தல் வரை பேச்சுவார்த்தைகளில் தவிர்க்கும் தந்திரோபாயமே கையாளப்படும். இதன்மூலம் எதிரணியினர், சந்ரிக்காவிற்கும், அவரது கொள்கைகளுக்கும் எதிராகப் பிரசாரம் செய்வதில் சில கட்டுப்படுத்தல்கள் ஏற்படுகின்றன.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சந்ரிக்காவின் கட்சி 50.7% வரையான வாக்குகளைப் பெற்றிருந்தது. சிங்கள மக்களிடமிருந்து மேலதிக ஆதரவைத் தேடுவதன் மூலமே, அவர் சிங்கள மக்களின் வாக்குகளுடன் மாத்திரம் 51% வரையான வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியாக முடியும். இது சற்றுக்கடினமானதுடன், நம்பிக்கையானதுமல்ல. ஆகவே, சந்திரிக்கா சிங்கள மக்களில் மாத்திரம் தங்கியிருக்காமல், பிற சமுகங்களின் ஆதரவையும் பெறவேண்டியுள்ளது. அதாவது: தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் ஆதரவு வேண்டியுள்ளது. இசுலாமியரும் (வடக்குக்கிழக்கு) இனப்பிரச்சனையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாகும். எதுவிதத்திலும், கடந்த காலங்களில் முதிர்ந்த இசுலாமியரின் தலைமைகளின் கீழ் இசுலாமியர்களின் வாக்குகள் U.N.P, SLFP கட்சிகளுக்குப் பிரிந்திருந்தன. போரின் விளைவாக, அண்மைக்காலங்களிலிருந்து, இசுலாமிய இளம் தலைமுறையின் தலைமைத்துவத்தினை ஏற்கத்தொடங்கியுள்ளனர். இன்று "முஸ்லீம் கொங்கிரஸ்" ஆனது, அஷ்ரப் (f) இன் தலைமையின் கீழ், இசுலாமியரின் கணிசமான ஆதரவைப் பெற்றுவருகிறது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் "முஸ்லீம் கொங்கிரஸ்" இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் கொள்கையினை முன்வைத்த சந்ரிக்காவின் கட்சியுடன் கூட்டுச்சேருவது தவிர்க்க முடியாததாகவிருந்தது. அது கூட்டுச்சேர்ந்து, இன்று அரசிலும் அங்கம் வகிக்கிறது.

ஆனால், சந்ரிக்காவின் நோக்கமானது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியபின்பு, நாடாளுமன்றத் தேர்தலை நடாத்தித் தனது கட்சியைத் தனித்த முறையில் நாடாளுமன்றத்தில் அதிகப்படியான ஆசனங்களைப் பெற வைப்பதாகும். இது ''முஸ்லீம் கொங்கிரஸ்'' இனை முக்கியமற்றவொரு கட்சியாக்கவே வழியமைக்கும்.

''முஸ்லீம் கொங்கிரஸ்'' உம், அஷ்ரப் (f) உம் வடக்குக்கிழக்கு மூஸ்லீம்களுக்கு உருப்படியான வேலைகளைச் செய்வதன் மூலமே தமக்கு அரசியல் எதிர்காலத்தினை அமைத்துக்கொள்ள முடியும். ஆகவே, அவர்கள் சந்ரிக்காவினை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்க வேண்டியே உள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக, பின்னர், ஒருவித உடன்பாட்டிற்கு வரவேண்டியுள்ளது.

ஒட்டு மொத்தத்தில், ஜனாதிபதித் தேர்தலில் வடக்குக்கிழக்கு, மற்றும் தென் இலங்கை ''முஸ்லீம் கொங்கிரஸ்'' ஆதரவாளர்கள் சந்ரிக்காவினை ஆதரிக்கும் சந்தர்ப்பங்களே அதிகமுண்டு.

வடக்குக்கிழக்குத் தமிழரின் தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி மற்றும் ஆயுதக்குழுக்களைப் பொறுத்தமட்டில், அவைகளது எதிர் காலம் பேச்சுவார்த்தை மூலமான இனப்பிரச்சனைத் தீர்வில்தான் தங் கியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சந்ரிக்கா இவர்களது ஆதரவை நாடினாலென்ன, நாடாவிட்டாலென்ன, இவைகள் சந்ரிக்காவினை ஆதரிக்கும் நிலைதான் காணப்படும்.

''முஸ்லீம் கொங்கிரஸ்'' ஆதரவாளர்களதும், தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி, மற்றும் ஆயுதக்குழுக்களது ஆதாவாளர்கள் ஜனா திபதித் தேர்தலில் சந்திக்காவை ஆதரித்தால், அளிக்கப்பட்ட வாக்கு களின் 52 –35%வரையான வாக்குகளைச் சந்ரிக்கா பெற வாய்ப்புகள் உண்டு.

யாழ்குடா, மற்றும் இடங்களில் தேர்தல் நடைபெறாது போனா லும், சந்ரிக்கா அளிக்கப்பட்ட வாக்குகளின் 52—53% இனைப் பெறுவது, இலங்கை மக்கள் அவரை சகல அதிகாரங்களையும் கொண்ட ஜனாதிபதியாக ஏற்பதாகிறது.

எது விதத்திலும், மலையகத் தமிழ் மக்களின் வாக்குகளைப் பொறுத்தமட்டில். இதுவரை காலமும் தொண்டமான் தென் இலங் கையில் ஆட்சியை நிர்ணயிக்கும் ஆசானாக இருந்து வந்துள்ளார். இந்த நிலையை அரசியலைத் தீவிரமாகச் சிந்தித்த எந்தவொரு சிங்கள அரசியல் வாதியும் உண்மையில் விரும்பியிருக்கமாட்டார்.

ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலிருந்து தொண்டமானின் கணிப்பீடுகளில் சில குறைபாடுகள் தோன்றத் தொடங்கியுள்ளன. UNP இனை ஆதரித்த தொண்டமான், இன்று எந்தவித அரசியல் அதி காரமும் அற்ற நிலையில்தான் உள்ளார். ஆனால். தொண்டமானின்

செல்வாக்கினை மலையகத்தினில் குறைக்க, சந்திரிக்கா அரசு தந்திரோ பாய ரீதியிலான செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியுள்ளது. தொண்டமான் இல்லாதே, மலையக மக்களுக்கு வேண்டியவை, மனித உரிமைகள் அடிப்படையில் வழங்கப்படும் என்பதை மலையக மக்கள் உணரவைக்க சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொண்டமானைப் பிரச்சனைக்குள் வீழ்த்துகிறது.

மலையக மக்களுக்கான தொழில் நுட்பக்கல்லூரி, மலையகத்தினர் அங்கு கிராமசேவகராக நியமிக்கப்படுவது; கோதுமை மாவின் விலைக் குறைப்பு, மற்றும் சில நடவடிக்கைகள் தொண்டமான் மலையக மக்களின் பிடியைக் கைவிட வைக்க நிர்ப்பந்திக்கையில், சந்திரசேகர னின் பிடி வலுவடையும் சந்தர்ப்பங்கள் அதிகரிக்கின்றன. ஆனால், அரசியலைப் பொறுத்தமட்டில், சுத்த சுயநலவாதியின் தலைமையா னது, மலையகத்தினைப் பொறுத்தமட்டில், தீவிரவாதிகளிலும் நன்மையையே சந்திரிக்கா அரசுக்குக் கொடுக்கும்.

இந்த நிலையில், தொண்டமானுக்குச் சந்திரிக்காவை ஆதரிப்பதுதான் தனது அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்ற எஞ்சியுள்ள வழி. மறு புறத்தில், தொண்டமானை ஏற்பதுவும், நீண்டகாலக் கண்ணோட்டத் தில் மலையக அரசியலைக் கட்டுப்படுத்தச் சந்திரிக்காவிற்கு உதவும். மேலும், மலையகத் தமிழ் வாக்காளரின் எண்ணிக்கையானது வடக் குத் தமிழரின் வாக்காளரின் எண்ணிக்கையின் அரைப்பங்கு வரை யாகையால், தொண்டமான் சந்திரிக்காவை ஆதரித்தால், அது வடக் கில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று, அதில் முழுவாக்காளர்கள தும் வாக்குகள் சந்திரிக்காவிற்குக் கிடைக்கும் விளைவைக் கொடுக்கும்.

ஆனால், தொண்டமானின் ஆதரவை ஏற்பது எவ்வளவிற்கு அரசியல் ரீதியில் சிறந்தது, வடக்கில் ஜனாதிபதித் தேர்தலை வைப் பது எவ்வளவிற்குச் சிறந்தது என்பதை எடைபோட்டே சந்திரிக்கா தனது முடிவை எடுக்க வேண்டியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக சிறீலங்கா அரசு அதனது அதிகாரத் தையும், நிர்வாகத்தையும் வடக்குக் கிழக்கில் பூரணமாக நிலைநாட்ட முடியாது இருந்து வருகிறது. சென்ற ஆண்டில் கிழக்கில் அதனது அதிகாரத்தையும், நிர்வாகத்தையும் ஓரளவிற்கு நிலைநாட்ட முடிந் தபோதும், வடக்கினைப் பொறுத்தமட்டில் சிறிலங்கா அரசின் அதி காரமும், நிர்வாகமும் பூரணமாக இல்லாதே இருந்து வருகிறது.

இந்த நிலையில், வடக்கில் ஜானாதிபதித் தேர்தலை நடாத்து வது சந்திரிக்கா அரசிற்குப் பலவகையில் நன்மையைக் கொடுக்கும். இது சிறிலங்கா அரசு வடக்கிலும் அதனது மேலாதிக்கத்தினை மீண்டும் நிலைநாட்டி விட்டது, இன்று இலங்கை முழுவதிலும் சிறி லங்கா அரசினது, ஆகவே சிங்களம், பௌத்தம் என்பவைகளினது, மேலாதிக்கம் சந்திரிக்காவினால் நிலைநாட்டப்பட்டது என்ற ஒருவித

உணர்வை தெற்கில் கொடுக்கவும், உலகத்திற்குப் பறைசாற்றவும் பேருதவியாகவிருக்கும்.

14, 15 ஆம் நூற்றாண்டுகளின் சந்தேஸ பாடல்களில் குறிப்பிட்ட படி கூறினால்: "சந்ரிக்கா முழு இலங்கையையும் ஒரு குடைகீழ் கொண்டுவந்தார்" என்று இதனைக் கூறலாம். இது தேர்தலில் சிங்கள, பௌத்தர்களின் வாக்குகளைப் பெருமளவில் திருப்ப உதவும் அதே வேளையில், தொண்டமானையும் தேவைப்படாத நிலையையே ஏற்படுத்தும்.

ஆனால், வடக்கில் தேர்தல் நடைபெறுவது விடுதலைப்புலிகளின் கைகளில்தான் தங்கியுள்ளது.

இவைகளிலிருந்து, சந்ரிக்கா தனது அதிகாரத்தை ஸ்திரப்படுத்தவும், தனதும், தனது கட்சியினதும் அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்தவும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதனைத் தவிர்க்க முடியாதபடி முக்கிய கொள்கையாக முன்வைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே ஆராய்ந்தபடி, அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னரும், இனப் பிரச்சனைக்கான தீர்வுகாணலையே முக்கிய கொள்கையாகக் கொண்டிருக்க வேண்டியுள்ளது.

இவைகள் "சாதாரண" சூழ்நிலையில் காணப்பட்ட அரசியல் நிலையாகும். ஆனால், ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி நடுச்சாமத்தில் UNP இனது ஜனாதிபதி வேட்பாளரான (g) காமினி திஸ்ஸநாயக்கவும், UNP யினது முக்கிய அங்கத்தவர்களும் குண்டுவெடிப்பினால் கொல்லப்பட்டுள்ளனர்,

இது தென்-இலங்கை அரசியலைப் பொறுத்தமட்டிலும், ஐக்கிய தேசியக் கட்சியின் நிலை, ஜனாதிபதித் தேர்தல் என்பவைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

"ரணில் விக்ரமசிங்ஹ குழு", "(g) காமினி திஸ்ஸநாயக்க குழு" என ஏற்கனவே பிளவுபட்ட நிலையிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சியானது, சிறிமா திஸ்ஸநாயக்க ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டதன் மூலம், தவிர்க்க முடியாதபடி, மேலும் பிளவுபட்டுள்ளது. முதியவர்களின் கைகளிலிருந்து இளையவர்களின் கைகளுக்கு மாறுவதிலேயே UNP இன்று பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்குகிறது, ஒட்டுமொத்தமாகக் கூறினால், ஐக்கிய தேசியக் கட்சி அதனது ஸ்திரத்தன்மையை இழந்து விட்டது. நடக்க விருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிமா திஸ்ஸநாயக்க வெற்றி பெறுகிறார் என வைத்தாலும், புதிய தலைமைத்துவத்தின் கீழ் UNP இலங்கை அரசியலின் முன்னணிக்கு எடுத்துச்செல்லப்படச் சில வருடங்கள் எடுக்கும்.

எதுவிதத்திலும், (g) காமினி திஸ்ஸநாயக்கவின் கொலை ஜனாதிபதித் தேர்தலில் எப்படியான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பது ஆராயப்படவேண்டிய முக்கிய விடயமே.

(g) காமினி திஸ்ஸநாயக்கவினது கொலையானது வடக்குக் கிழக்குத் தமிழர்களதும், முஸ்லீம்களதும் நிலைப்பாட்டில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்த முடியாது. முஸ்லீம்களைப் பொறுத்தமட்டில் முஸ்லீம்கள் சிங்களதேசிய கட்சிகளின்பின் அணிதிரளாது, ''முஸ்லீம் கொங்கிரஸ்'' பின்பு அணிதிரள்வதை விரும்பாத முதிய இசுலாமிய அரசியல்வாதிகள் ''உணர்ச்சிவசப்படுகை'' மூலமாக UNP இற்கு இசுலாமியரின் ஆதரவைத்தேட முற்பட்டாலும், UNP அரசுகள் கடந்த 17 ஆண்டுகள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணாதமை, இசுலாமிய வாக்காளருள் பெரும்பான்மையினரை ''முஸ்லீம் கொங்கிரஸ்'' இனையே ஆதரிக்க வைக்கும்.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தமட்டில், (g) காமினி திஸ்ஸநாயக்கவைப் பெரும்பான்மையினர் மறக்கவே மாட்டார்கள். 1981இல் யாழ்ப்பாண நூலக எரிப்பு, வன்முறைகளை நன்கு அறிந்தவர்கள் UNP இனை ஆதரிக்கமாட்டார்கள். ஏதுவிதத்திலும், மிரட்டல்களுக்குப் பயந்து, கொழும்புவாழ் சந்தர்பவாத யாழ்ப்பாண தமிழர் UNP இனை ஆதரிக்க முடியும்.

மலையகத் தமிழரைப் பொறுத்தமட்டில், அவர்கள் யாரை ஆதரிப்பர் என்பது தொண்டமானில் பெரிதும் தங்கியிருக்குமேயன்றி, (g) காமினியின் இறப்பால் ஏற்பட்ட அனுதாபத்தினாலல்ல. இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் சிறிமா திஸ்ஸநாயக்கவா, அல்லது சந்ரிக்காவா வெற்றியடைவர் என்பது சிங்கள வாக்காளரால் பெருமளவில் நிர்ணயிக்கப்படவுள்ளது.

(g) காமினி திஸ்ஸநாயக்கவின் கொலை காரணமான அனுதாப வாக்குகள் உணர்ச்சிவசப்படுத்தலால் நிர்ணயிக்கப்படவுள்ளன. 23 நள்ளிரவில் கொலையுண்ட (g) காமினி திஸ்ஸநாயக்கவின் மரணச்சடங்குகள் 29 ஆம் திகதி நடைபெற்று முடிந்து, 9 நொவெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

(g) காமினி திஸ்ஸநாயக்க கொல்லப்பட்டமை, உணர்ச்சிவசப்படக் கூடிய சிங்கள வாக்காளரை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வழங்க உந்தலாம். ஆனால், ஆராயும் தன்மையுடைய UNPயினர் கூட, இலங்கையின் இனப்பிரச்சனைக்கு '' அரசியல் தீர்வு'' காணும் இறுதிச் சந்தர்ப்பம் இதுதான் என்பதைத் திட்டவட்டமாக உணர்வர். ஏன், UNP இன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் ரணில் விக்ரமசிங்ஹ கூட இக்கருத்தையே கொண்டிருப்பார். இந்த நிலையில், இலங்கைத் தீவு இரண்டாகப் பிரிபடக் கூடாது எனக் கருதும் UNP ஆதரவாளர்களுள் ஒரு பகுதியினர், சந்ரிக்காவிற்கு வாக்களிக்கும் நிலையும் ஏற்படும்.

சந்ரிக்காவைப் பொறுத்தமட்டிலும், முஸ்லீம் கொங்கிரஸ் இனைப் பொறுத்தமட்டிலும், TULF, மற்றும் தமிழ்க் குழுக்களைப் பொறுத்த

மட்டிலும், இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ''அரசியல்'' தீர்வைத் தீவிரப்படுத்தவேண்டியது மேலும் தவிர்க்க முடியாததாகியுள்ளது. ஆகவே, இவர்களது ஆதரவாளர்களின் வாக்குகள் சந்ரிக்காவிற்கு இடப்பட்டு, சந்ரிக்கா பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பங்களே அதிகமுண்டு. மேலும், தொண்டமான் சந்ரிக்காவினை ஆதரிக்க முடிவு செய்த நிலையில், சந்ரிக்கா தனது வெற்றியை நிச்சயமாக்கியுள்ளார் என்றே கூறவேண்டும்.

எதுவிதத்திலும், நாட்டில் உணர்ச்சிவசப்படுத்தலால் எழக் கூடிய வன்செயல்கள் உருவாகாது பார்ப்பதில் சந்ரிக்கா அரசு தளர்ச்சியைக் காட்டினால், இலங்கை தவிர்க்கமுடியாதபடி இரண்டு நாடுகளாகும் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

இன்றைய நிலையில், எந்தவொரு பிரதான தென் - இலங்கைச் சிங்கள அரசியல் கட்சியும், முஸ்லீம் கொங்கிரஸ், TULF, மற்றும் தமிழ்க் குழுக்களும் இப்படியான நிலை ஏற்படுவதைத் தவிர்க்கத் தீவிரமாகச் செயற்படவே சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு. அமெரிக்ககா, பிரித்தானியா, இந்தியா, மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளும், நாட்டில் மீண்டுமொரு இனவன்முறை எழாதவாறு பார்க்கும்படி சந்ரிக்க அரசிற்கு வலியுறுத்தவே சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு.

இன்றைய நிலையில், விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளைச் சந்ரிக்கா அரசு தற்காலிகமாக இடை நிறுத்தியதே புத்திசாதுரியமானது. குறைந்தது, ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை.

ஆகவே, ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின்னரே சந்திரிக்காவின் இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு பற்றி அறியக் கூடியதாக இருக்கும்.

## வெளிநாடுகளின் அழுத்தங்கள்:

ஒரு குறிப்பிட்ட நாட்டின் அரசியலானது தமது ''நலன்களை'' (Interests) ப் பேணிப்பாதுகாக்க முக்கியமானது எனப் பிறநாடுகள் கருதினால், இந்த வெளிநாடுகள் குறிப்பிட்ட நாட்டின் அரசியலைக் குறிப்பிட்ட விதத்தில் அமையவைக்க, அந்தநாட்டிற்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றன. குறிப்பிட்டதுவொரு நாடு நான்கு அடிப்படைகளில் பிறநாடுகளுக்கு முக்கியமாக இருக்கமுடியும். அவையாவன:

1) பொருளாதார இலாபங்கள்;

2) இராணுவ, Intelligence தேவைகள்;

3) அரசியல் நன்மைகள்;

4) வேறு நன்மைகள்.

இவற்றுள் பொருளாதார இலாபங்கள் என்பது, பொருட்களைக் குறிப்பிட்ட நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல், மூலப்பொருட்களைக் குறிப்பிட்ட நாட்டிலிருந்து பெறுவது, குறிப்பிட்ட நாட்டில் முதலீடுகளைச் செய்து, மலிவுக்கூலிகளுடனும், மலிவுச் சக்திகொண்டும் உற்பத்திகளைச் செய்து, பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதென்பவைகளை உள்ளடக்கும்.

இலங்கைத்தீவினை எடுத்துக்கொண்டால், இங்கு பெருமளவில் ஏற்றுமதிசெய்யக்கூடிய மூலப்பொருள்கள் இல்லையென்றே கூற வேண்டும். ஆகவே, ஏனைய இரண்டு விதங்களிலுமே இலங்கை பிற நாடுகளுக்கு முக்கியமாகிறது.

இந்தப் பிறநாடுகள் இலங்கை அரசியலில் இரண்டு விதமாக அக்கறை கொள்ள முடியும். அவையாவன:

(1) அரசு ''திறந்த வியாபாரக் பொருளாதாரக் கொள்கை''யைக் கடைப் பிடிக்கிறதா, இல்லையா என்பது தொடர்பான அக்கறை;

(2) நாட்டின் அரசியல் நிலையானது ஸ்திரமாக உள்ளதா, தமது நலன்களுக்குப் பங்கம் விளைவிக்காது நீண்டகாலம் இருக்குமா என்பவை தொடர்பான அக்கறை.

முதலாவதைப் பொறுத்தமட்டில், சந்ரிக்கா தனது கட்சியின் கொள்கைகளை நாடாளுமன்றத் தேர்தலிற்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்திருந்தார். தனது அரசு திறந்த வியாபாரப் பொருளாதாரக் கொள்கையையே கடைப்பிடிக்குமெனச் சந்ரிக்கா வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் அறிவித்திருந்தார். அதாவது: அமரிக்கா, ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகள் எப்படியான கொள்கைகளை முன்னேறாத நாடுகள் கடைப்பிடிக்க வேண்டும் எனக்கருதுகின்றனவோ, அக்கொள்கையினையே சந்ரிக்கா அரசு கடைப் பிடிக்கப் போவதாகக் கூறியுள்ளது.

ஆட்சிக்கு வந்தபின்னர் சந்ரிக்கா அரசு எப்படியான கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்பதை, இந்நாடுகள் உன்னிப்பாகக் கவனித்தவாறே இருக்கின்றன.

இரண்டாவதை எடுத்துக் கொண்டால், இலங்கையில் ஒரு சாரார் தனிநாடு கோரிப் போர்நடாத்தி வருகின்றனர். இப்போரானதுஒரு புறத்தில் அரசினை ஸ்திரமற்றதாக்கி வருகின்றது. மறுபுறத்தில், போரானது கைத்தொழில் வலையங்களுக்குப் பரவும் ஆபத்தும், போர் கைத்தொழில் வலையங்களில் வேலைகளைச் சீரழிக்கும் ஆபத்தும் இருந்தே வருகிறது.

அடுத்த புறத்தில், வடக்கு கிழக்கில் தனிநாடு அமைக்கப்பட்ட பின்னர், தென் இலங்கை அரசு ஸ்திரத் தன்மையை இழந்து, ஆட்சிக்கு வருவோர் வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்க வைக்கக்

கூடிய சந்தர்ப்பங்களும் எழுகின்றன. இன்று நாட்டின் பொருளாதாரப் பிரச்சனைக்கும், சமூக, அரசியல் பிரச்சனைக்கும் தமிழர்களால் நடாத் தப்பட்டுவரும் போரே காரணமெனக் கூறிவந்த சிங்களத்தேசியக் கட்சி கள் தனிநாட்டினை அமைத்தபின்னர் சாட்டுப்போக்குக் கதைகள் கூறமுடியாதேயிருக்கும். தென்இலங்கைச் சிங்களவரிடையே அரசியல் தீவிரமடைந்து, இன்று சிங்களத் தேசியக் கட்சிகளினதும், ஆட்சிப் பீடங்களிலும் தலைமையைக் கைப்பற்றியிருப்பவர்கள் தவிர்க்க முடி யாதபடி நீக்கப்பட்டு, புதிய இளம் சமூகம் அரசியலை நடாத்தும். இது வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏற்கமுடியாததாகும்.

இந்த மாற்றங்களைத் தென் இலங்கையில் தடுப்பதாயினும் சரி, தமது பொருளாதார இலாபங்களைப் பேணிப்பாதுகாப்பதாயி னும் சரி, தென் இலங்கையில் முதலீடுகளை ஏற்கனவே செய்த நாடு களும், எதிர்காலத்தில் செய்யவிருக்கும் நாடுகளும் இலங்கைத் தமிழர் தனி நாட்டினை அமைப்பதை விரும்பமாட்டா.

ஆகவே, இலங்கையூடாகப் பொருளாதார இலாபங்களையடைய விரும்பும் அமெரிக்கா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர், இந்தியா, தென்கொரியா, தாய்வான், ஜப்பான், மற்றும் சில நாடுகள், இலங் கையை இரண்டாகப் பிரியவிடாது, இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி சந்திரிக்கா அரசிற்கு அழுத்தத்தினைக் கொடுக்கவேண்டும். சந்திரிக்கா அரசும், தவிர்க்க முடியாதபடி அரசியல் தீர்வினை முன் வைக்க முற்பட்டு, பிறநாடுகளின் நல்லாசிகளையும் பெற்றுள்ளது. ஆனால், சகலரது நோக்கமும் "தமிழீழம்" அமைக்கப்படுவதைத் தடுப்பதே.

## 2. இராணுவ, Intelligence தேவைகள்;

ஒவ்வொரு சமூகமும், நாடும், தத்தமது நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்தினைக் கொண்டவை. விஞ்ஞானம், தொழில் நுட்பம் என்பவைகள் முன்னேற முன்னேற, குறிப்பிட்டவொரு சமூகத்தினதும், நாட்டினதும் "நலன்கள்" பாதுகாக்கப்படும் எல்லை களும் விஸ்தரிக்கப்பட்டே வந்துள்ளன. இந்த விஸ்தரிப்பானது இரா ணுவ, ஆயுத பலங்களூடாகவும், "உலக ஒழுங்கு முறை" யாலும்தான் பெருமளவில் நடாத்தப்பட்டு வந்துள்ளது, இன்றும் நடாத்தப்படுகிறது.

விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தரை, கடல், ஆகாய மார்க்கங்களூடான போக்குவரத்தில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலமும், சற்றலைற்றுக்களின் பயன்பாடுகளூடான தொலைத் தொடர்புகள் மூலமும், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் எறி ஏவுகணைகள், நியூக்கிளியர் ஆயுதங்கள், விமானங்கள் என்பவை களின் உருவாக்கம் மூலமும் பூமியைச் சிறிதாக ஆக்கி, "நலன்கள்" பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய எல்லைகள் பூகோளரீதியாக விஸ் தரிக்கப்பட வழிவகுத்துள்ளன.

ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார பலமும், இராணுவ பலமும் விஞ்ஞான - தொழில் நுட்ப முன்னேற்றங்களுடாக எவ்வளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளதோ, அவற்றைப் பொறுத்து அந்த நாட்டினது "நலன்கள் " (Interests) பேணிப்பாதுகாக்கப்படும் எல்லைகளும் பிராந்திய ரீதியாகவும், பூகோள ரீதியாகவும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

சோவியற் யூனியனின் வீழ்ச்சியின் பின்னர், பூகோள ரீதியாக அதனது நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் நாடு என்றால், அது ஐக்கிய அமெரிக்காவே. சீனா, இந்தியா, ஜப்பான், மேற்கு ஐரோப்பிய நாடுகள் சில குறிப்பிட்ட பிராந்தியங்களில் மாத்திரமே தத்தமது நலன்களைப் பேணிப்பாதுகாக்க முற்படுகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டது போல், நலன்களைப் பேணிப்பாதுகாப்பதைப் பொறுத்தமட்டில், இராணுவ பலம் மிகவும் முக்கியமானதாக இருந்துவருகிறது. மேலும், விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்கள் பலமாதகாலங்கள் தொடர்ச்சியாகக் கடலில் பயணம் செய்யக் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்கள், மிதக்கும் கப்பல்களை உருவாக்கிப் பயன்படுத்த வழிவகுத்த போதும், இராணுவ தந்திரோபாய அடிப்படையில் சில குறிப்பிட்ட நாடுகளில் வெவ்வேறு படைத்தளங்கள் அமைக்கப்படவேண்டியே இருந்து வருகிறது.

இராணுவ தளங்களை அமைப்பதைப் பொறுத்தமட்டில், சில குறிப்பிட்ட நாடுகள் பிராந்திய வல்லரசினதும், பூகோள வல்லரசினதும் நலன்களுக்கு முக்கியமானவையாக இருக்கலாம். இப்படியான நாடுகள் பெரும் அரசியல் பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இப்படியானவொரு நாடு இன, மத, மொழி, பிராந்திய அடிப்படைகளில் பிளவுபட்டு இருக்குமேயானால், அந்த நாடு பெரும் பிரச்சனைகளுள் விழமுடியும்.

எது விதத்திலும், இன்று சோவியத் யூனியன் சீர்குலைந்த நிலையில், பிராந்திய வல்லரசுகள் தனித்தனியே நின்று அமெரிக்க அழுத்தங்களை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள முடியாதே உள்ளன. மேலும், பிராந்திய வல்லரசுகள் இன்று அமெரிக்காவிற்கு இராணுவ ரீதியில் ஆபத்தினை ஏற்படுத்த முடியாத நிலையானது, அமெரிக்காவினைப் பலம் வாய்ந்ததாகவும், பாதுகாப்பானதாகவும் ஆக்கியுள்ளது.

அமெரிக்காவினது தரை, கடல், விமானப்படைகளின் விஸ்தரிப்பு, Rapid Deployment Force, மற்றும் விசேட படைகளின் உருவாக்கங்கள் என்பவை சில குறிப்பிட்ட நாட்களுள் பூமியின் எந்தப் புள்ளியில் இருக்கும் நாட்டிற்கும் படைகளை அனுப்பக்கூடிய வல்லமையினை அமெரிக்காவிற்கு ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், அமெரிக்காவானது இரண்டு பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகிறது. அவையாவன:

1) பிராந்திய வல்லரசுகள் தம்மை நியூக்கிளியர் ஏவுகணைகள் கொண்ட நாடுகளாக்குவதும், இரசாயன ஆயுதங்களுடைய நாடுகளாக்குவதும்;

2) பூகோள ரீதியில் பல்வேறு நாடுகளின் அரசியல், இராணுவ, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மற்றும் முக்கிய தகவல் கள், விபரங்களைத் துரிதமாகவும், சரியாகவும் பெறமுடியா திருப்பதுவும். அதாவது Intelligence பிரச்சனை.

இவற்றுள் முதலாவதைப் பொறுத்தமட்டில், இன்று பல நாடுகள் (இராணுவ) விஞ்ஞான, தொழில் நுட்பங்களில் முன்னேறியிருக்கும் நிலையில், நியூக்கிளியர் ஆயுதங்களையும், எறி ஏவுகணைகளையும் (Ballistic Missiles), இரசாயன ஆயுதங்களையும் தாமாகவே உரு வாக்கக் கூடிய நிலையை அவை அடைந்துள்ளன. இந்தியா, இஸ் ரேல், பாகிஸ்தான், ஈராக் போன்ற இந்து சமுத்திர நாடுகள், ஜப் பான், கொரியாக்கள், சீனா என்ற தூரகிழக்கு நாடுகள், தென் ஆபி ரிக்கா, பிரேசில். ஆர்ஜன்டீனா போன்றவைகள் இராணுவ தொழில் நுட்பங்களில் கணிசமான அளவு முன்னேறியுள்ளன.

பொருளாதார ரீதியில் மேற்கு நாடுகளுக்கு மிக முக்கியமான இந்து சமுத்திர நாடுகளும், தூரகிழக்கு நாடுகளும் தம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்தக் கூடியதாகவிருப்பது மேற்கு நாடுகளின்பூகோள மேலாதிக்கத்திற்குப் பிரச்சனைகளைக் கொடுக்கின்றன. இந்த நாடு களின் ஆயுதப் பரீட்சைகள் வருடத்திற்குச் சில தடவைகள் மாத்தி ரமே நடாத்தப்படுவதால், கண்காணிப்பு வேலைகளை சற்றலைற்று கள் மூலம் செய்வது மிகவும் செலவானது. ஒரு கண்காணிப்புச் சற் றலைற்றினை உருவாக்கி, அதனை Geostationary Orbit இல் விட ஏறக்குறைய $500—800 மில்லியன் செலவாகும். அன்று ருசியாவும் இருந்து, பனிப்போரும் (Cold War) நடைபெற்ற நிலையில், முக்கிய பிராந்தியங்களில் கண்காணிப்புச் சற்றலைற்றுக்களைத் தவிர்க்க முடி யாதபடி பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆனால், இன்று சோவியத் யூனியன் இல்லை. கண்காணிப்பு வேலைகள் மாற்றமடைந்துள்ளது.

இந்த நிலையில், இன்று கண்காணிப்பு வேலைகளைத் தரையிலி ருந்து நடாத்துவதே இலாபகரமானது. இந்து சமுத்திரமானது இன்று பிரச்சனைக்குரிய பல நாடுகளைக் கொண்டுள்ளது. இந்த நிலையில் இந்து சமுத்திரத்தில் தகுந்தவொரு நாடு தெரிவுசெய்யப்பட்டு, அங்கு கண்காணிப்புத்தளம் அமைக்கப்பட வேண்டும். இதற்கு டியாகோ கார்ஷியா பயனற்றதாகும் மாலைதீவுகள் இந்து சமுத்திரத்தினுள் மூழ்கிய வண்ணமுள்ளது. இந்தியா, பாகிஸ்தான் என்பவைகள் பிரச் சனைக்குரியவை. இலங்கையே பல்வேறு வகையிலும் மிகவும் பொருத் தமானது.

அமெரிக்கா இலங்கையில் கண்காணிப்புத் தளத்தினை அமைக்க முற்படுவது இந்தியாவினால் ஏற்கக்கூடியதாக இருக்காது. ஒரு புறத் தில் அமெரிக்காவினது அழுத்தத்தினையும், மறுபுறத்தில் இந்தியா வினது அழுத்தத்தினையும் இலங்கை அரசுகள் எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகவிருக்கும். இவ்வழுத்தங்கள் இலங்கையின் இனப்பிரச்சனையிலும் பிரதிபலிக்கவே செய்யும்.

இரண்டவதான Intelligence பிரச்சனையினை எடுத்தால், அமெரிக்காவானது குறிப்பிட்ட ஒரு நாட்டிற்குப் படைகளை அனுப்பக் கூடியதாகவிருந்தும், குறிப்பிட்ட ஒரு நாட்டில் அரசியல் ரீதியில் அழுத்தங்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் போதிலும், குறிப்பிட்ட நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகப் போக்கினை உடனுக்குடன் அறியாவிட்டால், படைபலத்தை வைத்திருந்தும் பயனற்றதாகவே போகும். ஏனெனில்: "காலதமதம்" என்பது குறிப்பிட்ட நாட்டின் நிலைமைகளையே மாற்றிவிடும்.

உதாரணமாக: தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நிலைபற்றி அறிவதாயின், அமெரிக்க உளவு ஸ்தாபனம் வடக்கின் செய்திகளை உடனுக்குடன் பெறவேண்டும். கூட்டங்கள், கருத்தரங்குகள் என்பவைகளில் பேசப்படுபவைகளும், புலிகளின் குரல் வானொலியும், Radio Communication என்பவையும் உடனுக்குடன் அறியப்படவேண்டும். இவற்றைவிட, நீண்ட காலக் கண்ணோட்ட ஆராய்வுகளுக்கு நூல்கள்,வெளியீடுகள், சஞ்சிகள் என்பவையும் ஆராயப்படவேண்டும்.

இவைகளெல்லாம் தமிழ் மொழியில் இருப்பதால், இவைகள் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டு, தேவையான முக்கிய விபரங்கள் Intelligence வேலைகளுக்குப் பயிற்றப்பட்டவரால் தெரிந்தெடுக்கப்பட்டு, வோர்ஷிங்ரனிலுள்ள C.I.A. தலைமையகத்திற்கு அனுப்பவேண்டும். இவைகளையெல்லாம் முதலில் சேகரித்து, சரியாக ஆங்கில மொழி பெயர்ப்புக்களைச் செய்வதிலேயே காலதாமதம் ஏற்படும். ஆங்கிலத்திலிருப்பவைகள் உடனுக்குடன் ஆராயப்பட்டு, சிலமணிகளுள் அமெரிக்காவை அடையவைக்கலாம். ஆனால், சுதேச மொழிகளில் இருப்பவைகளை மனிதர் முழுமையாக மொழிபெயர்க்க மிகநீண்டகாலம் செல்லும். மேலும், நம்பிக்கையானவர்களைத் தெரிவு செய்து, பயிற்றுவிப்பதெல்லாம் பெரும் சிரமமானது மாத்திரமின்றி, வருடாவருடம் முடிவின்றிச் செய்யவேண்டியதொன்றாகிறது.

இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதென்றால், உலகின் சகல மொழிகளின் எழுத்து வடிவில் இருப்பவைகளையும், ஒலிவடிவில் இருப்பவைகளையும் மிகக்குறுகிய நேரத்தினில் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்ப்புச் செய்யக்கூடிய சுப்பர் கம்பியூற்றர்களை உருவாக்குவதே எஞ்சியுள்ள ஒரேயொருவழி. இவற்றையெல்லாம் முன் கூட்டியே ஆராய்ந்தறிந்து கொண்ட C. I. A. ஆனது, எழுத்து, ஒலி வடிவுகளில் இருக்கும் பல்வேறு மொழிகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கும் சுப்பர் கம்பியூற்றர்களை உருவாக்கும் வேலைகளை 1980 ஆம் ஆண்டுகளிலே தீவிரப்படுத்தியது. ஜோர்ஜியா பல்கலைக்கழகம், மாசாசுசெற்ஸ் Institute of Technology, மற்றும் பல தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள் இது தொடர்பான வேலைகளில் ஈடுபட்டுப் பலமொழிகளை ஆங்கிலத்திற்கும், வேறு மொழிகளுக்கும் மொழி பெயர்க்கும் முறைகளைக் கண்டு பிடித்துள்ளன.

இராணுவப் பயன்பாட்டிற்கென ஆரம்பிக்கப்பட்ட திட்டம் காலப்போக்கில் சிவிலியன்கள் பயன்படுத்தவும் உதவின. தொழில் நுட்பத்தினைப் பொறுத்தமட்டில், அதன் முதற்பயன்பாடு இராணு வத்திற்கே. இதன் பின்னரே சிவிலியன் பயன்பாடாகும்.

இன்று பல முக்கிய மொழிகளை (எழுத்து, ஒலி), ஆங்கிலம், மற்றும் மொழிகளுக்கு மொழி பெயர்க்கும் சுப்பர் கம்பியூற்றர்களை உருவாக்கியுள்ளனர். ஆனால், துரதிஷ்டவசமாக, பிரச்சனை அதிகமாக வுள்ள இந்து சமுத்திர நாடுகளின் மொழிகளை (எழுத்து, ஒலிவடிவி லுள்ளவைகளை) மொழிபெயர்ப்பதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கு வதாக 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதிச் C. I. A. அறிக்கைகள் கூறுகின்றன.

அமெரிக்காவானது இப்பிரச்சனைகளுக்கும் தீர்வு கண்டு, Intelligence வேலைகளை மிகவும் துரிதமாகச் செய்ய இந்து சமுத் திரத்தில் தகுந்தவொரு நாடு தேவைப்படுகிறது. இதற்கும் இலங் கையே தகுந்த நாடாக உள்ளது. கண்காணிப்பு வேலைகள், மற்றும் Intelligence வேலைகளுக்கு இலங்கை முக்கியமாயின், அங்கு இவ்வே லைகளைச் செய்யும் தளம அமைக்கப்பட வேண்டும். மேலும், இத்த ளமானது நிரந்தரமாக இலங்கையில் வைத்திருக்கக் கூடியதாக இருப்பதற்கு, இலங்கையின் அரசும் அமெரிக்க ஆதரவான அரசாகத் தொடர்ந்தும் இருக்க வேண்டும். அப்படியாயின், அமெரிக்கா சார்பான கட்சியே இலங்கையில் ஆட்சியிலிருக்கவைக்கப்படவேண்டும். சுருங்கக் கூறினால்: இலங்கை அரசியலில் அமெரிக்கா மிகுந்த அக்கறை கொண்டதாகவிருக்கும்.

இலங்கைத் தீவில் கண்காணிப்பு, Intelligence தளம் அமைக்கப் படுவதை இந்தியா வரவேற்கமுடியாது. ஆகவே, இந்தியா இலங்கை அரசானது அமெரிக்க சார்பாக இருப்பதை எதிர்த்தும், கண்காணிப்பு Intelligene தளம் அமைக்கவிடுவதைத் தடைசெய்யவும் செயற்படும். இது இலங்கைத்தீவு அமெரிக்கா, இந்தியா என்பவைகளின் அழுத்தங் களை எதிர் நோக்கவே செய்யும். இப்படியான பிரச்சினைகளை இலங்கையானது1983 ஆம் ஆண்டிலிருந்துதே எதிர்நோக்கி வருகின்றது

## இரணவில Voice of America (VOA) திட்டம்:

"இரணவில" என்பது இலங்கையின் மேற்குக் கடல் பகுதியில் சிலாபம் மாவட்டத்தில் இருக்கும் ஒரு சிறு கிராமமாகும். இதில் 413 ஏக்கர் நிலமானது அமெரிக்க "Voice of America" (VOA) நிறு வனத்திற்கு 90 ஆண்டுகள் குத்தகைக்கு UNP அரசால் கொடுக்கப்பட்டு, அங்கு பெரும் கட்டடவேலைகள் நடைபெறுகின்றன. "VOA" என்பது, சட்டரீதியில், ஒரு பொதுமக்கள் அமைப்பாக இருக்கும்போதிலும், கட்டவேலைகள் நடைபெறும் இடத்தைச் சுற்றிப் பலத்த காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, மின்சாரம் செலுத்தப்பட்ட கம்பிவேலி களும் அமைக்கப்பட்டுள்ளன.

''இரண்வில''வில் VOA இனது ''Relay Station''(அஞ்ச நிலையம்) கட்டப்படுவதாக அமெரிக்க தூதரகமும், US Information Service உம் கூறி வரும் போதிலும், U.N.Pஅரசால் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் இலங்கை மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப் படவில்லை. இது தொடர்பாக UNP அரசுகள் மௌனமாகவே இருந்தன. UNP அரசுகளின் இந்தச் செயற்பாடு இலங்கை மக்களின் உரிமைகளை நிராகரிக்கும் ஒரு நடவடிக்கையாகும்.

''இரண்வில'' வில் இன்று அமைக்கப்படும் தளத்திற்கான முதலாவது முக்கிய ஒப்பந்தம் 1983 ஆம் ஆண்டில் எழுதப்பட்டது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப் பட்டது. நாடாளுமன்றத்தில் இவ்வொப்பந்தம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், அது பலரால் அறியக்கூடியதாக விருந்தது. 1983 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தினை இந்திராகாந்தி மிகவும் தீவிரமாக எதிர்த்தார். 1982 ஆம் ஆண்டில் கூட்டணியின் ஒத்துழைப்புடன் ஜனாதிபதியாகியிருந்த ஜயவர்த்தன இந்தியாவினைக் கடுமையாக எதிர்த்தார்.

இவைகளின் விளைவே இந்திரா காந்தி இலங்கை இளைஞர் குழுக்களுக்கு இந்தியாவில் இராணுவப்பயிற்சி அளித்தமையும், ஆயுதங்களை வழங்கியமையாகும். இந்தியா அதனது தொழில்நுட்ப, முதலீட்டுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் இலங்கைத்தமிழர் பிரச்சனையைப் பயன்படுத்த முற்பட்டது. அன்று சோவியத் யூனியன், அமெரிக்கா என இரு வல்லரசுகள் இருந்த நிலையில், இலங்கையில் இனப்பிரச்சனையைப் பயன்படுத்தியமை மிகுந்த அழுத்தத்தைக் கொடுக்கக் கூடியவொரு விடயமாக விருந்தது.

இந்திய அரசு அதனது குறிக்கோள்களையடைய, வெவ்வேறு தமிழ் விடுதலை அமைப்புகளைத் தம்மில் அனைத்திற்கும் தங்கியிருக்க வைக்க முற்பட்டபோதும், தமிழீழ விடுதலைப்புலிகள் தமக்கென சுதந்திர ஆயுத விநியோகத்தினையும், சர்வதேச நிதி – பிரசார அமைப்புக்களையும் உருவாக்கிக் கொண்டமை, இந்தியாவினை இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையைப் பகடைக்காய் போலப் பயன்படுத்த முடியாது செய்தது.

*1984* இறுதியில் இந்திரா காந்தி கொல்லப்பட்டமையும், அதன் பின்னர் ராஜீவ் காந்தி அதிகாரத்திற்கு வந்தமையும், இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாகச் சற்று வேறுபட்ட நிலைகளை ஏற்படுத்தின. எது விதத்திலும், *1983* இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படாதே இருந்து வந்தன. 1987ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் போதும், இலங்கையில் பிறநாடுகள் தளங்கள் அமைப்பது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது அவதானிக்கத்தக்கது.

எதுவிதத்திலும், பிறேமதாஸ 1988இல் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டு, விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து, சிறீலங்காவிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் போர் ஆரம்பமாகி, 1991 இல் ராஜீவ் காந்தி கொல்லவும்பட்டார்.

1983ஆம் ஆண்டில் பிரதான ஒப்பந்தம் கைச்சாந்திட்ட போதும், 1991ஆம் ஆண்டிலே எங்கு VOA கட்டப்படுவது என்பது தொடர்பான ஒப்பந்தம் பிறேமதாஸவினால் கைச்சாத்திடப்பட்டது. இதில் குறிப்பிடப்பட்ட விபரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த ஒப்பந்தமானது " VOA" இன் அஞ்சல் நிலையம் தொடர்பானது மாத்திரம்தானா, இதில் என்னென்னவகையான சாதனங்கள் பயன்படுத்தப்படலாம், எவை எவைகள் பயன்படுத்தப்பட முடியாது, இந்த ஒப்பந்தத்தின் கீழ் இரண்வில வில் வேறு பயன்பாடுகளை அமைத்துக் கொள்ளவோ, அல்லது 1983ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் சரத்துகளை மாற்றவோ இடவெளிகள் விடப்பட்டுள்ளனவா என்பது பற்றிப் பொதுமக்களுக்கு அறியக்கொடுக்கப்படவில்லை. இந்தத் திட்டத்தினை 1995 டிசெம்பருக்கு முன்பாக முடித்து, அது செயற்படுத்தப்பட வேண்டும் என்பது அமெரிக்கரின் எதிர்பார்ப்பு.

"இரண்வில" VOA திட்டத்தினைச் சில அமைப்புகள் "எதிர்த்து" வருகின்றன. ஆனால், இத்திட்டம் தொடர்பாக அவர்கள் சரியான விபரங்களைப் பொதுமக்களுக்குக் கொடுக்கவில்லை. அமெரிக்க தூதரகமும்' USIS (அமெரிக்க தகவல் சேவை) சுலபமாக முறியடிக்கக் கூடிய வாதங்களே இவர்களால் முன்வைக்கப்பட்டன. இரண்வில "VOA" திட்டம் அப்பிரதேசத்தில் கலாச்சாரச் சீரழிவுகளை ஏற்படுத்தும், AIDS பரவ வழியமைக்கும் என்பவைகளே இவர்களின் பிரதான வாதங்கள். ஒரு வருடத்திற்கு ஒரு மில்லியன் வரையான உல்லாசப் பயணிகள் வந்து செல்வதால் ஏற்படும் AIDS, கலாச்சாரச் சீரழிவு ஆபத்துக்களிலும், 20 - 30 வரையானோர் இரண்விலவில் வேலைபார்ப்பது ஆபத்தானதல்ல என்ற வாதத்தினை USIS சுலபமாக வைத்து, நியாயப்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

இரண்வில " VOA" திட்டத்தின் பொருளாதார தாக்கங்களை இத்திட்டத்தினைப் போலியாக எதிர்ப்பவர்கள் முன்வைத்து, அமெரிக்காவிற்குச் சாதகமான நிலையை ஏற்படுத்திவருகின்றனர். இரண்விலத் திட்டத்திற்கு மின் சக்தி விநியோகிப்பதன் மூலம் சிறீலங்கா அரசு வருடத்திற்கு $ 2.5மில்லியன் வெளிநாட்டு வருவாயை பெறுமெனவும், அப்பகுதியின் போக்குவரத்துப் பாதை திருத்தியமைக்கப்படுமென்றும், நன்னீர் விநியோகம் மற்றும் வேலைகளுக்கு 100 இற்கு மேற்பட்ட இலங்கையர் நிரந்தரமாக அமர்த்தப்படுவர் என்றும் அமெரிக்க தூதரகமும், USISஉம் எதிர்ப் பிரசாரங்களை முடுக்கிவிட்டன.

அமெரிக்காவின் இரணவில VOA திட்டம் உண்மையில் என்ன என்பதை மக்களுக்குத் தெளிவாகக் கூறவிரும்பாத "எதிர்ப்பு" அமைப்பாளர்கள், இத்திட்டம் இலங்கையை நியூக்கிளியர் போர் பிராந்தியமாக்கும் எனத் திசைதிருப்பிய பிரசாரங்களைச் செய்கின்றனர். இவர்களது திரிவுபடுத்தப்பட்ட பிரசாரமானது சாதாரண மக்களை இரணவில திட்டம் ஒரு "இராணுவத் திட்டம்" என்றே கருதவைக்கும். அங்கு அமெரிக்க படைகளும் தங்கும் என்ற எண்ணத்தையும் உருவாக்கும்.

ஏற்கனவே இங்கு விளக்கப்பட்டவைகளிலிருந்து' கண்காணிப்பு வேலைகளுக்கும், Intelligence வேலைகளுக்கும் இன்று இராணுவத்தினர் தேவையில்லை, அன்றும் தேவைப்படவில்லை. கம்பியூற்றர்களை இயக்கச்சிவிலியன் தொழில்நுட்பவியலாளர்கள் சிலர்போதும் இந்த நிலையில், இரணவில திட்ட எதிர்ப்பாளர்கள் அமெரிக்க தூதரகமும், USISஉம் மக்கள் ஏற்கத்தக்க விளக்கங்களைக் கொடுக்கப் போலிப் பிரசாரத்தினைச் செய்துள்ளன. அமெரிக்கர் "இரணவில திட்ட எதிர்ப்பாளர்கள்" பொய்ப் பிரசாரத்தைச் செய்கின்றனர் என மக்கள் கருதவைக்கும் விதத்தில் விளக்கப் பிரசாரங்களை முன்வைத்துள்ளனர்.

அமெரிக்க ராஜதந்திரி ஒருவர்: "No military personnel will be stationed in Chilaw or else where to support the Relay-Station" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதாவது: "சிலாபத்திலோ, அல்லது வேறெங்கினுமோ, அஞ்சல் நிலையத்தினை இயக்கவுதவ இராணுவ ஆட்கள் நிறுத்தப்பட மாட்டார்கள் எனக்கூறியுள்ளார். இவரது கூற்று உண்மையானதே. இன்று Intelligence வேலைகளைச் சிவலியன்களே பெருமளவில் செய்கின்றனர். சுப்பர் கம்பியூற்றர்களைப் பயன்படுத்தும் தன்னியக்க Intelligence வேலைகளுக்கு இராணுவத்தினர் தேவைப்படமாட்டார்கள் தான். சேகரிக்கப்பட்ட தகவல்கள், விபரங்களை ஆராய்வதில்தான் இராணு அமைப்புக்கு ஒரு பங்குண்டு!

மேலும், இரணவில "VOA திட்டம்" பற்றிய அமெரிக்க விளக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது: "VOA is a public broadcasting net work and have no Covert or Overt military purposes"

அதாவது: "VOA ஆனது பொதுசன ஒலிபரப்புத் தொடரமைப்பாகும். அதற்குத் திறந்த அல்லது இரகசிய இராணுவத் தேவைகள் இல்லை"

இந்த அறிக்கை திசை திருப்பும் நோக்கத்தினை உடையது. VOA இற்கு இராணுவத் தேவைகள் இல்லாதிருக்கலாம். வெகுஜனத் தொடர்பு சாதனம் என்ற ரீதியில், வளிமண்டலத்தில் விடப்படும் Signals VOA இற்கு நேரடியாகத் தேவைப்படாது இருக்கலாம்.

ஆனால், அவற்றைப் பிற ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க முடியும். வளி மண்டலத்தில் விடப்பட்ட Signals களை வாங்குவது இராணுவ நடவடிக்கையல்ல. அதேபோல், Intelligence வேலைகள் இராணுவ சம்பந்தமானவையாக இருக்கவேண்டியதுமல்ல.

"Intelligence" வேலைகள் "Political Intelligence" ஆகவுமிருக்க லாம், "Military Intelligence" ஆகவுமிருக்கலாம், "Technological Intelligence" ஆகவுமிருக்கலாம். விண் வெளியிலும், வளிமண்டலத்தி லும் விடப்படும் அலைகளை வாங்கும் உரிமை எவருக்குமுண்டு. அதே போல், பொதுமக்களுக்கெனப் பேசப்பட்டவை, பிரசுரிக்கப்பட்டவை களைச்சேகரிக்கவும், மொழி பெயர்க்கவும் எவருக்கும் உரிமையுண்டு.

இந்த நிலையில், இரண்வில VOA திட்டத்தின் கீழ் இந்தியாவின் றொக்கற் பரீட்சிப்புகளின் Signalகளை வாங்குவதும், வளிமண்ட லத்தில் விடப்பட்ட இராணுவ, சிவிலியன் ரேடியோ அலைகளை வாங் குவதும், பிரசுரங்கள், வெளியீடுகளைச் சேகரிப்பதும், அவற்றைச் சுப் பர் கம்பியூற்றர்கள் கொண்டு மொழி பெயர்ப்பதும் சர்வதேச சட்டங் களையோ அல்லது, ஒரு நாட்டின் சட்டத்தினையோ மீறமாட்டாது.

அப்படியான ஒரு திட்டம் இரண்விலவில் செயற்படுத்தப்பட் டால், இந்திய அரசோ, அல்லது எந்தவரசோ சட்டரீதியாக ஒன்றுமே செய்யமுடியாது. சிறீலங்க அரசு இதற்குச் சம்மதித்தால், இந்தியா "வேறுவித" அழுத்தங்களையே சிறீலங்க அரசுக்குக் கொடுக்கமுடியும்.

மறுபுறத்தில், சிறீலங்கா அரசு இதற்குச் சம்மதித்தால், இலங்கைத் தீவின் மக்களே இதை எதிர்க்கமுடியும். இலங்கை மக்களுக்கு அவை தொடர்பான போதிய அறிவு இல்லாவிடின், மக்கள் திசை திருப்பவே படுவர். இன்று இலங்கையில் நடப்பதும் இதுதான், முன்னர் UNP ஆட்சியின் கீழ் நடைபெற்று வந்ததும் இதுதான்.

ஒகஸ்ற் 16இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்தின் போது, இன்றைய பிரதமரும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுபவ ருவருமான சந்திரிக்கா "இரண்வில VOA திட்டம்" பற்றியவொரு கருத்தும் வாக்குறுதியும் மக்களுக்குப் பகிரங்கமாக விடுத்திருந்தார். அதில் அவர்: இரண்வில VOA திட்டத்தின் ஒப்பந்தத்தினை தான் ஆட்சிக்கு வந்தால் இரத்துச் செய்வதாகக் கூறியிருந்ததுடன், இரண்வில VOA திட்டம்," உண்மையில், Intelligence வேலைக்கானவொரு திட்டம் எனவும் குறிப் பிட்டிருந்தார்.

சந்திரிக்காவினது கூற்றுச் சரியாக விருக்கலாம். ஆனால், நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்னர் இப்படிக் கூறியமை, அவரைப்பற்றிச் C.I.A. யும், அமெரிக்காவும் தப்பபிப்பிராயம் கொள்ளவும், அவர்மீது ஐயத்தினை வலுவடையவுமே செய்துள்ளது. இதன்மூலம் சந்திரிக்கா தன்னை ஆபத்தினுள்தான் வீழ்த்தியுள்ளார்.

"புதிய உலக ஒழுங்குமுறை" (New World Order) என்பதன் கீழ் உலகினை நிர்வாகம் செய்ய அமெரிக்காவிற்கு சகல மொழி

களையும் ஆங்கிலம், வேறு மொழிகளுக்கு மொழி பெயர்க்கும் சுப்பர் கம்பியூற்றர்களைப் பயன் படுத்துவதும், இந்து சமுத்திர நாடுகளின் றொக்கற், மற்றும் ஆயுதப் பரீட்சிப்புகள், ஏனையவைகளைக் கண் காணிப்பதும் மிகமுக்கியமாகும். "இரண்வில VOA திட்டத்தின், வேலைகளை முடித்து, அதை 1995 டிசெம்பர் முன்பு இயக்கவைக் கும் நோக்கத்துடன்தான் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிலையில், சந்ரிக்கா தான் ஆட்சிக்கு வந்ததும் அத்திட்டத்தின் ஒப்பந் தத்தினை இரத்துச்செய்தால், அது அமெரிக்க திட்டங்கள் அனைத் தையும் சிதைத்து விடும்.

அமெரிக்கா வேறு நாட்டிலே இத்திட்டத்தை மீண்டும் ஆரம் பிக்க வேண்டும். ஆனால் இலங்கைத்தீவு போன்ற தகுந்த இடத்தில் அமைந்த தீவு வேறொன்றுமில்லை, வேறு வசதிகள் உடைய தீவும், நாடும் வேறொன்றுமில்லை.

ஆகவே, ஏதொவொரு வழியில், சந்ரிக்காவை "இரண்வில VOA திட்டம்" தொடர்பான அவரது தீர்மானத்தை மாற்றவைக்க வேண்டி யுள்ளது, அல்லது அவரது அரசைப் பதவியை இழக்கச்செய்து, UNP அரசைப் பதவிக்கு வரச்செய்ய வேண்டியுள்ளது. இவற்றுள் எது சுலபமானது, சாத்தியமானது, நீண்டகாலம் இலாபத்தைக் கொடுக் கக்கூடியது என்பதை ஆராய்ந்து, முடிவுகளை எடுத்தே அமெரிக்கா செயற்பட வேண்டியுள்ளது.

எதுவிதத்திலும், தேர்தலுக்கு முன்னர் சந்ரிக்கா வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசியிருந்தார். (ஓகஸ்ற் 11). இதே தினத் தன்று அவர் கொழும்பில் உள்நாட்டு வெளிநாட்டுச்செய்தியாளர் களுக்குச் சிறப்புப்பேட்டியையும் வழங்கியிருந்தார். அப்பேட்டியின் போது, சந்ரிக்காவும் அவரது அரசும் பிறநாடுகளின் அழுத்தங்களை அனுபவித்து, நெகிழ்ச்சியடைந்திருந்தன என்பது வெளியாகியது. சந்ரிக்கா தனது பேட்டியில் இரண்டு விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தார். அவையாவன:

1) பொருளாதாரக் கொள்கை;
2) நாட்டின் அரசியல் நிலை.

பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தமட்டில், தனது அரசு திறந்த சந்தைப் பொருளாதாரத்தையும், தனியார் துறைக்கு அதிமுக் கியத்துவம் கொடுக்கப்படுவதையும் ஏற்குமெனக்கூறியிருந்தார்.

பிற நாடுகளின் "நலன்கள்" பேணப்படுவதாயின், இலங்கையின் அரசியல் நிலை தகுந்தபடி அமைக்கப்பெறவேண்டும். இலங்கையின் அரசியல் நிலையானது, பிற, மேற்கு நாடுகள் பொருளாதார இலா பங்கள் அடையக்கூடிய விதத்தில் ஸ்திரமாக இருக்கவேண்டும். மேலும், பூகோள ரீதியில் மேற்கு நாடுகள் தமது நலன்களைப் பேணிப்பாது காக்கத்தேவையான கண்காணிப்பு Intelligence வேலைகள் செய்யும்

தளமும் நீண்டகாலக்கண்ணோட்டத்தில் அமைக்கப்பெறவேற்ற விதத்தில் அரசியல் அமையவேண்டும்.

இது பற்றித் தனது அரசு கொண்டிருக்கும் கொள்கையின் ஒரு பகுதியைச் சந்ரிக்கா உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்குக் கொடுத்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அது என்னவென்றால்: வடக்குக்கிழக்கு இணைப்பைத் தான் எதிர்பார்ப்பதாகவும், சமாதான முயற்சிகள் தோற்றால், யுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாகும்.

அதாவது: நாடு இரண்டாகப் பிரிந்து, அரசியல் நிலையானது, நிரந்தரமாக, வெளிநாடுகளின் "நலன்களைப்" பேணிக்காக்க உதவும் வகையில் அமையாதிருப்பதைத்தடுக்க நாட்டில் அரசியல் தீர்வு காண முயற்சிக்கப்படும் என்பதைச் சந்ரிக்கா வலியுறுத்தியதுடன், இம்முயற்சி தோற்றால், தனது அரசு இராணுவ நடவடிக்கைமூலம் இதணைச்செய்யும் என்ற உறுதிமொழியும் கொடுத்துள்ளார்.

இவைகளைவிட, ஒரு விடயம் பற்றி எதனையும் குறிப்பிடாது விட்டதன் மூலமும், சந்ரிக்கா தனது அரசு வெளிநாடுகளின் நலன் களைப் பேணிப்பாதுகாக்கும் கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கும் என்பதை மறைமுகமாக வலியுறுத்தியுள்ளார். அந்த விடயம்தான் இரண்வில VQA திட்டம்" ஆகும்.

வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்திக்குமுன்னர், தான் ஆட்சிக்கு வந்ததும் அந்த Intelligence திட்ட ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதாகக் குறிப்பிட்ட சந்ரிக்கா, இதுபற்றிப் பின்னர் மௌனம் சாதித்தமை பிறநாடுகளின் அழுத்தங்களுக்குச் சிறந்த உதாரணமாக அமைகிறது. இக்கட்டத்தில் சில "அரசியல் ஆராய்வாளர்கள்", ஏற்கனவே U.N.P அரசால் எழுதப்பட்டு, கட்டடவேலைகளும் ஆரம்பிக்ககப்பட்ட திட்டத்தினை இரத்துசெய்ய முடியாது, அதனாலேயே சந்ரிக்கா அத்திட்ட ஒப்பந்தத்தினை இரத்து செய்வதைக் கைவிட வேண்டியுள்ளது என்ற வாதத்தினை முன்வைக்கலாம்.

இவ்வாதம் உண்மையில் அடிப்படையற்றது. இலங்கையின் இனப் பிரச்சினையை ஆழமாக ஆராய்ந்து, யதார்த்த நிலையை அறிந்து, அரசியல் தீர்வை முன்வைக்கும் சந்ரிக்காவும், அவரது, ஆலோசகர்களும், "இரண்வில V.O.A திட்டம்" பற்றி ஆராய்ந்து, முன்னர் முடிவுக்கு வந்தது பிழையானதென இவர்கள் கூறுகின்றனரா? பிரான்சின் சொர்(b) பொன் பல்கலைக் கழகத்தில் அரசியல் கற்ற சந்ரிக்கா, இலங்கையின் அரசை நடாத்தும் சந்ரிக்கா, "இரண்வில V.O.A திட்டம்" பற்றிப் பிழையான கருத்தையும், கொள்கையையும் வெளியிடுவது தனக்கு அமெரிக்காவிடமிருந்தும், C I.A யிடமிருந்தும், எப்படியான எதிர்ப்புக்கள், ஆபத்துக்கள் வரும் என்பதை அறியாதவர் அல்ல.

அப்படியிருந்தும், தேர்தலுக்கு முன் இரண்வில Intelligence அமைப்பினை இரத்து செய்யப்போவதாகக் கூறி, பின்னர் எதிர்மாறான கொள்கையைக் கடைப்பிடிக்கும் சந்ரிக்கா, எவ்வளவு தூரத்திற்கு நம்பிக்கையானவர், இலங்கை மக்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடியவர், ஆராய்ந்து, அதற்கேற்றபடி சரியானமுடிவை எடுக்கக்கூடியவர் என்பது பற்றிக்கேள்விகள் எழவே செய்கின்றன.

சந்ரிக்காவிற்குப் பிறநாடுகள் தொடர்பாகத் திடமான கொள்கைகள் உள்ளனவா எனப்பார்த்தால், அங்கு தளம்பல் நிலை காணப்படுவதையே அறிய முடிகிறது. "இரண்வில V.O.Aதிட்டம்" தொடர்பாக அவரது தடம்புரண்ட கொள்கைகள், இந்திய அரசையும் இலங்கை தொடர்பாக, மாறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்க நிர்ப்பந்தித்துள்ளன. இந்திய அரசு இலங்கையின் "கண்காணிப்பு, Intelligence" அமைப்பு கட்டிஎழுப்பப்படுவதை ஒரு போதும் ஏற்கமாட்டாது. சந்திரிக்கா மேற்கு நாடுகளின், குறிப்பாக அமெரிக்காவின், "சினேகிதி" ஆகுவதை இந்தியா ஒருபோதும் விரும்பமாட்டாது.

சந்ரிக்கா இந்தியாவின் நலன்களுக்கு முரணான விதத்தில் செயற்படுவதைக் கட்டுப்படுத்துவதாயின், இந்தியாவுக்கு இரண்டு வழிகளே எஞ்சியிருந்தன. அவையாவன:

1) தனக்கு ஆதரவான (g) காமினி திஸ்ஸநாயக்கவினை இலங்கையின் ஜனாதிபதியாக்குவது,

2) சந்ரிக்கா அரசினுள் தொண்டமானைச் செல்வாக்குடையவராக ஆக்குவது.

ஆனால், இந்தியா இவை இரண்டிலும் தோல்வியையே அடைந்துள்ளது. தொண்டமான் சந்ரிக்காவின் காலடிகளில்தான் உள்ளார். மறுபுறத்தில், இந்த அரசியல் நிலை. தவிர்க்க முடியாதபடி, அமெரிக்காவிற்குச் சாதகமாகியுள்ளது. எதுவிதத்திலும், (g) காமினி திஸ்ஸநாயக்க சிங்கள அரசியல் அரங்கிலிருந்து நீக்கப்பட்டமை எப்படியான விளைவுகளை ஏற்படுத்தும், சந்ரிக்கா அரசினை என்ன நிலைக்குத் தள்ளும் என்பவைகளை ஆராய்ந்தே சந்ரிக்காவின் எதிர்கால அரசியலும், இரண்வில திட்டம் பற்றிய கொள்கைகளும் எப்படியிருக்குமென்பதை அறியமுடியும்.

"இராணுவ, Intelligence தேவைகள் தொடர்பாகப் பிறநாடுகளிடமிருந்து இலங்கை எதிர்நோக்கும் அழுத்தங்களை ஆராய, "இரண்வில VOA திட்டம்" மிகமுக்கியமாக இன்றுள்ளது.

## 4) அரசியல் நன்மைகள்;

இலங்கையின் அரசியல் நிலை பிற நாடுகளுக்கு இரண்டுவிதமாகவே அரசியல் நன்மைகளைக் கொடுக்கமுடியும். அவையாவன:

1) இலங்கை எப்படியான சித்தாந்த அப்படிடைகளையுடைய வொரு நாடு என்பதை உலகிற்குப் பறைசாற்ற உதவும் வகையில் அமைவது;

2) இன, மத, மொழி, பிராந்திய அடிப்படைகளில் பிரச்சனை களை எதிர்நோக்கும் நாடுகளில் இன்று எப்படியான தீர்வு கள் சாத்தியமாகும்,புதிய உலக ஒழுங்குமுறையில் ஏற்கப்படும் என்பதை உலகிற்கு பறைசாற்ற உதவும் வகையில் அமைவது.

இலங்கைத்தீவானது மிக நீண்டகாலமாக நாடாளுமன்ற ஜன நாயகத்தையும், சித்தாந்த ரீதியில் மார்க்சியத்திற்கு எதிரான நாடா கவுமே இருந்து வந்துள்ளது. இலங்கையில் ஒரு கம்யூனிச அரசை உருவாக்கும் நோக்கத்தில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாடு அமைக்கப்போராடி வருகின்றனர் எனப் பலவேறு அரசுகளும், ஆய்வு நிறுவனங்களும், சில நாடுகளின் வெகுஜனத்தொடர்பு சாதனங்களும் சர்வதேச ரீதியில் பிரசாரங்களைச்செய்து வந்துள்ளன. இந்த நிலை யில், அமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, மற்றும் நாடுகளைப்பொறுத்த மட்டில், இலங்கையின் இனப்பிரச்சனையானது அரசியல் ரீதியில் தீர்வு காணப்பட்டு, அங்கு நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்வது அத்தியாவசியமானது.

இந்த நிலையில், ''பிறநாடுகள்'' இலங்கையில் இனப்பிரச்சனை யானது தீர்க்கப்படுவதில், குறிப்பாக: அரசியல் ரீதியில் தீர்க்கப்படு வதில், அக்கறையுடையவையாக இருக்கும். இது அந்த நாடுகளுக்கு அரசியல் நன்மைகளைக் கொடுக்கும்

அடுத்ததாக: அன்று கம்யூனிச சோவியத் யூனியனின் ஆயுத உதவி களுடனும், அதனது கைக்கூலி நாடுகளினது உதவிகளுடனும்தான் விடுதலைப் போராட்டங்களும், கெரில்லா யுத்தங்களும் நடைபெற்றன என மேற்கு நாடுகளும், அரசியல்–இராணுவ ஆராய்வாளர்களும் பிரசாரத்தினை உலகிற்குச்செய்ததுடன், தமது கோட்பாடுகளை முன்வைத்துமிருந்தனர்.

இன்று சோவியத் யூனியன் சின்னாபின்னமாகி, அதன் சித்தாந் தமும் கைவிடப்பட்டுவிட்டது. உலகில் ஆயுதம் தாங்கிய போராட்டம் மூலமோ, அன்றிப் பிறநாடுகளின் உதவிகளுடனோ நடாத்தப்படும் போர்கள் எந்தவிதத்தீர்வையும் ஏற்படுத்த முடியாது என ஏகாபத் தியங்கள் உலகிற்குப்பறைசாற்றிவரும்போதும், இலங்கைத் தமிழரின் விடுதலைப் போராட்டமானது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையில், புதிய பாணியில், புரட்சிகரமான முறையில் முன்னெடுத்துச்செல்லப்படுகி றது. இதனை உலகிலெவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இலங்கைத்தமிழர் தமது பிரச்சனைகளுக்கான தீர்வை விடுதலைப் புலிகளின் தலைமையிலான ஆயுதப்போராட்டமூலம் தனி நாடமைத் துத் தீர்ப்பதை, உலகின் பலபாகங்களிலும் அடக்குமுறைக்கும், ஒடுக்கு

முறைக்கும் உள்ளாக்கி, நம்பிக்கையை இழந்து, உரிமைகள் பறிக்கப்பட்டும் சுரண்டலின் உச்சக்கோரத்தன்மையை அனுபவித்தும் அடிமைகளாகவி ருக்கும் பல சமூகங்களுக்கு நம்பிக்கை ஒளியையும், மண உறுதியை ஏற்படுந்துவதற்கான உந்து சக்தியையும் கொடுக்கும்.

இது ஒருபுறத்தில், பல்லின, பல்மத, பல்சமூகமக்கள் பிராந்திய அடிப்படைகளில் வாழும் நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்குப் பிரச்சனைகளை அதிகரிக்க வழிவகுக்கையில், 2000 ஆண்டுகளில் உலகில் 'புதிய உலக ஒழுங்குமுறை'' (New World Order) யினைப் பூரணமாக நிலைநாட்ட முற்படும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கும் பிரச்சனையினை ஏற்படுத்தும். இலங்கை இனப்பிரச்சனையா னது பொருளாதார ரீதியில் இலாபங்களை அடைவதில் மூலப் பொருட்கள் வினையோகத்தில் முக்கியமற்றதாயினும், ஏனைய விடையங்களில் முக்கியமாகவே பிற நாடுகளுக்குள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழர் தனிநாட்டினை அமைப்பதை விரும்பாத முதலாவது அயல்நாடு இந்தி யாவே. பிராந்திய வல்லரசான இந்தியா, இலங்கையின் தமிழர்கள் தனிநாட்டினை அமைத்துக் கொண்டால், அது மொழி, பிராந்திய அடிப்படைகளில் பிரிக்கப்பட்டிருக்கும் மாநிலங்களில் பிரச்சனைகளை ஏற்படுத்துமென்க் கருதுகிறது. இதனால், இலங்கையின் இனப்பிரச்சனை யானது தீர்க்கப்பட வேண்டும் என்ற கொள்கை இந்தியாவிற்குண்டு. ஆனால், அது அரசியல் தீர்வால் ஏற்படுத்தப்படவேண்டுமா, அல்லது இராணுவத் தீர்வால் ஏற்படுத்தப்படவேண்டுமா என்பது குறித்து எப்படியான கொள்கைகளைக் கொண்டிருக்கும் என்பதைச் சந்ரிக்கா அறிவார். ஏனெனில்: அவரின் வெற்றியின் பின்னர், இந்தியப் பிரத மரின் விசேட தூதுவர் சந்ரிக்காவைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

எதுவிதத்திலும், என்ன தீர்வு முன்வைக்கப்படும் என்பது, பிற நாடு களின் அழுத்தங்களிலும், சந்ரிக்கா, மற்றும் கட்சி அங்கத்தவர்களின் சிந்தனைப்போக்கிலும் பெரிதும் தங்கியுள்ளது. இந்திய ஆளும்வர்க் கங்கள் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன ''அரசியல் தீர்வு'' முன்வைக்கப்படும் நிலை ஏற்பட்டாலும், இந்திய அரசு அதனது நலன் கள் கருதிச் சில உரிமைகளையும், அதிகாரங்களையும் உருவாக்கப் படும் அரசியல் அமைப்புகளுக்குக் கொடுக்காது விடும்படி அழுத்தத்தி னைக் கொடுக்கலாம். இங்கும், சந்ரிக்காவினதும், அவரது கட்சி அங் கத்தவர்களதும், பிறநாடுகளினதும் கொள்கைகளே இறுதி முடிவு களை நிர்ணயிக்கும். மேலும், என்னென்ன அதிகாரங்கள், உரிமைகள் அரசியல் அமைப்பு அலகிற்கு வழங்கப்படவேண்டும் என்பதை ஏனைய சிங்களக்கட்சிகளின் அழுத்தங்கள், சிங்கள அமைப்புகளின் அழுத்தங் கள், சிங்கள மக்களின் அழுத்தங்கள், விடுதலைப்புலிகள், தமிழ்மக்கள், இசுலாமியர் என்போரின் அழுத்தங்கள் என்பவையும் இறுதி வடிவத் தினை நிர்ணயிக்கும் நிலைமை காணப்படும்.

வெளிநாடுகளின் அழுத்தங்களைப் பொறுத்தமட்டில், இங்கு, விடு தலைப்புலிகளின் தலைமையில் தமிழர்கள் தனிநாடு அமைப்பதைக் குறுகியகால கண்ணோட்டத்திலும் நீண்டகாலக்கண்ணோட்டத்திலும் தடுப்பதே முதல் முக்கிய நோக்கமாகும். இராணுவ நடவடிக்கை மூலம் இதனைச் செய்ய முடியாது எனக்கருதப்படும் நிலையில், அரசியல் தீர்வில் "ஓரளவு" உரிமைகளும், அதிகாரங்களும் உருவாக்கப்படும் அரசியல் அமைப்பு அலகுக்குக் கொடுக்கும்படியே அழுத்தங்கள் அமையும். ஆனால், இந்த "ஓரளவு" உரிமைகளும், அதிகாரங்களும் எவை என்பது முக்கிய கேள்வியாகவேயிருக்கும்.

இவைகளைப் பார்க்கும்போது, எந்தத்தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதில், பிறநாடுகளின் அரசியல் நலன்கள் மூலமான அழுத்தங்களும் நிர்ணயிக்குமென்பது தெளிவாகிறது.

## வேறு நன்மைகள்:

இலங்கையின் இனப்பிரச்சனைப் போரானது பல ஆண்டுகளாக நடைபெற்று வந்து, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல்லாயிரக் கணக்கான அகதிகளை உருவாக்கியுள்ளது. இந்தியா, மற்றும் பிரித்தானியா, பெல்ஜியம், பிரான்சு, இத்தாலி, ஸ்பெயின், சுவிற்சலாந்து, ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க் சுவீடன், நோர்வே, பின்லாந்து, செக்கோசிலோவாக்கியா, மற்றும் கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும், ருசியா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பல லட்சம் இலங்கைத் தமிழர்கள் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களைப் பராமரிக்க இந்நாடுகள் பெருமளவு பணத்தைச் செலவு செய்வதுடன், மேலதிகமானோர் தொடர்ந்து நுழைவவைத் தடுக்கவுமெனப் பணத்தை இலங்கையிலும் செலவு செய்கின்றன.

இலங்கை இனப்பிரச்சனை தீர்க்கப்படுமேயாயின், தேவையான மலிவுக்கூலிகளைத் தமது நாட்டில் வைத்துக்கொண்டு, ஏனையோரை இலங்கைக்கு அனுப்புவது இந்த நாடுகளுக்கு இலாபகரமானது. நெதர்லாந்து, சுவிற்சலாந்து, சுவீடன், டென்மார்க், நோர்வே போன்ற சிறிய நாடுகள் இப்படியான கொள்கைகளைத் தீவீரமாகக் கடைப்பிடிக்க முயன்றாலும், பிரான்சு, ஜேர்மனி, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா போன்றவைகள் அகதிகளைத்திருப்பியனுப்பும் நோக்கங்கள் குறைவாகவே காணப்படுகிறது.

இந்த நிலையில், இந்த நன்மைக்காகவும், பிறநாடுகள் சந்திரிக்கா அரசின்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பங்களே அதிகம் காணப்படுகிறது. போர்மூலம் தீர்வு காணப்பட்டு, இலங்கையில் இனப்பிரச்சனை தீர்க்கப்படுவது இங்கு சாதகமாகக் காணப்பட்டாலும் அரசியல் ரீதியிலான தீர்வு காணப்படும்போதே இந்த அகதிகளைத் திருப்பியனுப்ப இந்தநாடுகளுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். ஏனெனில், போரின் போது அகதிகளைத் திருப்பியனுப்ப அந்தநாட்டின் மனித உரிமை அமைப்புகள் விரும்பமாட்டா, அனுமதிக்கமாட்டா.

ஒட்டு மொத்தத்தில், கடந்த 10 ஆண்டுகள் கடைபிடிக்கப்பட்டு வந்த போரானது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாத நிலையி லிருப்பது, பிறநாடுகளை "அரசியல் தீர்வை" முன்வைக்கும்படி சந்திரிக்காவை அழுத்தம் கொடுக்க நிர்ப்பந்தித்துள்ளது. அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டுத் தீர்வுகாணப்படுவதே அகதிகளைத் திருப்பி யனுப்ப ஏற்ற சூழ்நிலைகளை உருவாக்குமெண அவை கருதுகின்றன

## 5. அரசின் தலைவர்களது சித்தாந்தக் கொள்கைகள்

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வினை பிரதான கொள்கை யாகச் சந்திரிக்காவும், அவரின் கட்சியின் தலைமைப்பீடமும் முன் வைத்து, அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதற்காகக் கூறப்படுகிறது. இது இவர்களின் சித்தாந்த அடிப்படையிலெழுந்த கொள்கையா, அல்லது அதிகாரத்தினை நிலைநாட்ட அரசியல் தீர்வை விட வேறொரு வழியு மில்லை என்பதை ஆராய்ந்தறிந்ததன் மூலம் தவிர்க்க முடியாத படி யெழுந்தவொரு செயற்பாடா என்பவற்றில் எதனாலெழுந்த செயற் பாடு என்பதைப் பொறுத்தே, சந்திரிக்காவினால் முன்வைக்கப்படும் அரசியல் தீர்வானது எவ்வளவிற்கு வெற்றியளிக்கும், இலங்கையில் எவ்வளவிற்கு நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் என்பவை தங்கி யுள்ளன.

சந்திரிக்கா பிரான்சின் சொர்பொன் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர். இந்த நிலையில், அவரது சிந்தனைகள் பிரான்சின் இடது சாரிகளின் சித்தாந்தங்களையுடையதாக இருக்கும் சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு. பிரெஞ்சு தேசமானது பல இடது சாரப் புரட்சிவாதி களைக் கொண்டிருந்தது. அல்ஜீரியப்புரட்சி, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிகளில் தொடர்புடைய பல சித்தாந்தவாதிகள் 1960 ஆம் ஆண்டுகளில் பிரான்சில் இருந்தனர். இவர்களது சித்தாந் தங்கள் அன்றைய மாணவியான சந்திரிக்காவின் சிந்தனைகளுக்கு உருவத்தை கொடுத்திருக்க முடியும்.

ஆனால், பிரான்சின் சோசலிசமும், கம்யூனிசமும் உண்மையில் "யூறோ சோசலிசம்" (Euro Socialism) "யூறோ கம்யூனிசம்" (Euro-Communism) ஆகவே இருந்தன. உற்பத்தியில் தனியார் துறை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. ஆனால், தொழிலாளர்களின் உரிமைக ளுக்கும், நாட்டின் அபிவிருத்திக்கும் முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (Social Security) தீவிரப்படுத்தும் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டன. அமெரிக்க எதிர்ப்புக் கொள் கைகள், இனவாதத்திற்கெதிரான கொள்கைகள் இடது சாரிகளின் சிந்தனைகளிலிருந்தன.

பிரான்சின் கம்யூனிஸ்ற் கட்சியினர் மிகவும் பலம் வாய்ந்த தொழி லாளர் அமைப்பினைக் கொண்டிருந்தனர். ஆனால், சோசலிச வாதிகள்

தொழிலாளர் அமைப்பினைப் பலமாக்கும் கொள்கைகள் அற்றவரா கவே பிரான்சில் காணப்பட்டனர்.

சந்ரிக்க தனது உயர் கல்வியைப் பிரான்சில் பெற்றதன்மூலம், அவர் ''Euro Socialism'' இனையே தனது சித்தாந்தக் கொள்கை யாகக் கொண்டிருக்கச் சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு.

இந்த நிலையில், இலங்கையின் அரசியலிலும் ''Euro - Socialism'' கொள்கைகளே பிரதிபலிக்கப்படச் சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு. இந்த முடிவு எவ்வளவிற்குச் சரியானது என்பதை அவர் இதுவரையில் முன்வைத்த பொருளாதாரக் கொள்கைகள், மனித உரிமைகள் தொடர் பான கொள்கைகள், இலங்கையின் சிறு பான்மை இனத்தவர்கள் தொடர்பான கொள்கைகள் என்பவற்றிலிருந்துதான் உறுதிப்படுத்த வேண்டும்.

பொருளாதாரக் கொள்கையைப் பொறுத்தமட்டில், அவர் ''தனி யார்துறை மிகவும் அவசியம் என்பதை உணர்ந்திருப்பதாகக்'' குறிப்பிட் டுள்ளார். மேலும் அவர் ''திறந்த சந்தைப் பொருளாதாரத்தை'' ஏற்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் "ஐ. தேசியக் கட்சியைப் போல் அல்லாது, முன்னணியின் கொள்கைகள் நாட்டின் அபிவிருத்தி யைக் கருத்தில் கொண்டு நன்றாகத் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப் படும்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவைகள் அசல் ''Euro Socialism'' கொள்கைகளே.

மனித உரிமைகளுக்கு முக்கிய இடத்தைக் கொடுத்து, இலங்கை யின் தமிழரும் சிங்களவரைப் போல் சமனான உரிமைகளைப் பெற வேண்டும் எனக் கூறும் சந்ரிக்காவும், அவரது கட்சியும், டெலிவிஷன் விவாதத்தில் வாசுதேவ நாணயக்கார வடக்குக் கிழக்குத் தொடர்பாக முன்வைத்த கருத்துக்களை அவசர அவசரமாக நிராகரித்துள்ளனர். இது சந்ரிக்காவும் அவரது கட்சியினரும் அடிப்படை மனித உரிமை களில் சிலவற்றை மாத்திரம், அதுவும் பெரும்பான்மையினருக்குச் சாதமாக அமையக் கூடியவைகளை மாத்திரம், ''மனித உரிமைகள்'' எனக் கருதும் கொள்கைகளைக் கொண்டிருப்பதை எடுத்துக் காட்டு கின்றன.

Euro Socialists ''தமது'' நாட்டவர்கள் தொடர்பாகவே மனித உரிமைகளைப் பற்றி அதிகம் அக்கறை கொண்டவர்கள். பிறநாடுகள் தொடர்பான கொள்கைகளைப் பொறுத்தமட்டில், ''Socialism'' என்பது பிரயோகிக்கப்பட மாட்டாது. சந்ரிக்காவும், அவரது கட்சி யானர்களும் சிங்களவர்களுக்கு மாத்திரமே சுயநிர்ணய உரிமை உள்ளது, தமிழர்களுக்கு இல்லை எனக் கருதுவதையே இது எடுத்துக் காட்டு கிறது.

இவைகள் சந்ரிக்காவும், அவரது கட்சியினரும் தமது சித்தாந்தங் களை இனவாத அடிப்படையில் தான் கொண்டுள்ளனர் என்பதை

உறுதிப்படுத்துகின்றன. பிரான்சில் உயர்கல்வியைப் பெற்ற சந்ரிக்கா தனது ஆராயும் தன்மையை வளர்த்துக் கொண்டார் என்பது உண்மை. ஆனால் ''சித்தாந்தத்தை'' பொறுத்தமட்டில், அங்கு ''இனவாதமே'' முன்னிற்கிறது.

சந்ரிக்கா இலங்கையின் அரசியலை ஆராய்ந்து, சிங்கள இலங்கையின் முன்னேற்றத்திற்கு இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தான் எஞ்சியுள்ள ஒரேயொரு வழி என்ற அடிப்படையிலும், சிங்கள இலங்கையின் இறைமை, ஒருமைத் தன்மை பேணிப் பாதுகாக்கப்படுவதாயின், இலங்கையின் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுவது தான் எஞ்சியுள்ள ஒரேயொரு வழி என்றும், தனதும், தனது கட்சியினதும் அதிகாரத்தை நிலை நாட்டவும், அரசினை ஸ்திரப்படுத்தவும் ''அரசியல் தீர்வை'' முன் வைப்பது தான் ஒரேயொரு வழி என்றும் முடிவுக்கு வந்தே இன்று செயற்படுகிறார் என்பது அவரது ''சித்தாந்தத்திலிருந்து'' புலனாகிறது.

ஒட்டு மொத்தமாகக் கூறினால், சந்ரிக்காவின் ''அரசியல் தீர்வு'' கொள்கையானது இன்றைய யதார்த்த நிலையின் விளைவேயன்றி, அவரின் ''சித்தாந்த''க் கொள்கையினால் எழுந்தவொரு செயற்பாடல்ல என்பது தான் உண்மைநிலை. இந்த நிலையை உருவாக்கியது ஆயுதம் தாங்கிய போராட்டமாகும்.

## உப - முடிவுகள்

சந்ரிக்காவும், அவரது அரசும் இன்று இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ''அரசியல்'' தீர்வை முன்வைப்பதற்கான காரணங்கள்:

1) நாடு எதிர்நோக்கும் பொருளாதார, கடன் பிரச்சனைகள், சமூகப் பிரச்சனைகள், ஆகவே அரசியல் பிரச்சனைகள்;

2) இராணுவத் தீர்வு உடனடியாக வெற்றியளிக்காத நிலையும், முழுமையான தீர்வுக்கு நீண்டகாலம் எடுக்கவிருப்பதும்;

3) அரசியல் தலைவர்கள் முதல் தடவையாக அதிகாரத்தைப் பெற்றிருக்கும் நிலையும், அரசு ஸ்திரமற்றதாக இருப்பதுவும்;

4) பிற நாடுகளின் அழுத்தங்கள்.

இவற்றுள் இரண்டாவதே ஓரளவிற்குச் சுலபமாக மாற்றியமைக்கப்பட்டு, இன்று ''அரசியல் தீர்வு'' என முன்வைக்கப்பட்ட கொள்கை ''இராணுவ தீர்வு'' என மாற்றியமைக்கப்படலாம். இதைச் செய்வதாயின், இலங்கைப் படைகளுடன் பிறநாட்டுப் படைகளையும் சேர்த்துப் பயன்படுத்தலாம். ஆனால், இங்கு எழும் முக்கிய கேள்வி: எந்த நாட்டுப் படைகளை, எப்படிப் பெறுவது என்பதே. இலங்கை இன்று சகல அதிகாரங்களையும் பெற்ற ஜனாதிபதியின் கீழ் ஆட்சி செய்யப்படுகிறது. பிற நாட்டுப் படைகள் இங்கு வருவதாயினும்,

ஜனாதிபதியே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டும். மறுபுறத்தில் பிற நாடுகளின் மத்தியஸ்தங்களை முற்று முழுதாக நிராகரித்து வந்த சந்திரிக்கா அரசு, பிற நாடுகளை எப்படி வரவழைக்க முடியும் என்பது சிந்திக்க வேண்டியதே

அப்படிப் பிறநாடுகள் படைகளையனுப்பச் சம்மதித்தாலும், ஜனாதிபதித் தேர்தலின் முன்னர் அது சாத்தியமாகாது. பிறநாடுகளின் படையுதவிகள் இல்லாது இலங்கை இராணுவம் தனித்துப்படையெடுப்பினை நடாத்த முற்பட்டாலும், அது ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே சாத்தியமாகும்

ஆனால், இங்கும், ஏற்கனவே ஆராயப்பட்டது போல், இலங்கை இராணுவம் வடக்கு முழுவதையும் கைப்பற்றி, விடுதலைப் புலிகளையும், தலைமையையும் அழிக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே

இந்த நிலைமைகள் சந்திரிக்கா அரசினை, ''அரசியல்'' தீர்வையே ஜனாதிபதித் தேர்தலின் பின்பும் முதன்மைப்படுத்த நிர்ப்பந்திக்கும். எதுவிதத்திலும், இராணுவத்தீர்வுக்கான தயார்ப்படுத்தல்களும் தீவிரப்படுத்தப்படலாம். இறுதிப் போருக்கு தமிழ் மக்கள் தம்மைத் தயார்ப்படுத்தும் தேவைகளுள்ளன என்பதை எவரும் எடுத்த எடுப்பில் நிராகரிக்க முடியாது.

## சந்திரிக்கா அரசின் அரசியல் தீர்வுத் திட்டம்

சந்திரிக்காவினது அரசு எப்படியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவுள்ளது என்பது பொது மக்களுக்கு இதுவரையில்தெரியாது. ஆனால், முன்வைக்கப்படும் தீர்வுத் திட்டம் எப்படியான அம்சங்களை உள்ளடக்க வேண்டும் என்பதைப் பல சிங்கள, பௌத்த அமைப்புகள் ஏற்கனவே வேண்டுகோள்களாக விட்டுள்ளன. சந்திரிக்காவும், அவரது கட்சியும் கடந்த காலங்களில் பகிரங்கமாகக் கூறியிருப்பவைகள் அவர்களின் அரசியல் தீர்வின் நோக்கங்களையும், தீர்வுத் திட்டம் எப்படி அமையும் என்பதையும் ஓரளவிற்குச் சரியாக ஆராய்ந்தறியப் போதுமானவை.

எதுவிதத்திலும், இவைகளைப் பார்க்கும் முன்னர், கடந்த 10 ஆண்டுகளாக ஆயுதம் தாங்கிப் போராடி வரும் இலங்கைத் தமிழரின் அபிலாசைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டுமாயின், எவை யெவை தொடர்பாக, எப்படியான அதிகாரங்கள் வடக்குக் கிழக்கிற்கு கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஆராய்வோம்.

சுருங்கக் கூறினால், இலங்கைத் தமிழர்கள் தமக்கு அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றங்களை ஏற்படுத்தவும், தமது பாதுகாப்பினை ஸ்திரப்படுத்தவும் ஆயுதம் தாங்கிய போராட்டத்தினை நடாத்தி வருகிறார்கள். இவைகளை ஏற்படுத்திக் கொள்ள வழிவகைகள் செய்யப்படுவதே அரசியல் தீர்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்க முடியும். இல்லாவிட்டால், தீர்வு ஏற்பட முடியாது.

இவைகள் பலதரப்பட்ட விடயங்களை உள்ளடக்கும். இவைகள் அனைத்தினையும் ஆராய்வது சிரமமானது, தேவையுமற்றது. ஏனெனில், இவற்றைக் கவனிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். எதுவிதத்திலும், சாதாரண தமிழ் மக்கள் அனைவரும் கட்டாயம் விளங்கிக் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவைபற்றி விரிவாக இங்கு ஆராய்கையில், ஏனைய சில விபரங்கள் சுருக்கமாக ஆராயப்படுகிறது.

## 1. கல்வித்திட்டங்கள், கல்விப்பாடத்திட்டங்கள் தொடர்பான அதிகாரங்கள்:

குறிப்பிட்டவொரு சமூகத்தின் அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றமும், பாதுகாப்பும் அதனது கல்விப்பாடத்திட்டங்களும், கல்வித்திட்டங்களும் எப்படி அமைக்கப் படுகின்றன என்பதில்தான் பெருமளவில் தங்கியுள்ளன. ஆனால், கடந்த காலங்களில் சிறீலங்காவின் அரசுகள் கல்வித்திட்டங்களையும், கல்விப்பாடத்திட்டங்களையும் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை அடையும் விதத்தில் அமைத்துக் கொள்ளவில்லை இதன் விளைவு களை இன்று இலங்கையின் சகல சமூகங்களும் அனுபவிக்கின்றன.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரின் பிற் போக்குக் கொள்கைகளால், ஏனைய சமூகங்களும் எந்தவித முன்னேற் றமும், பாதுகாப்பும் இல்லாத சமூகங்களாக இருக்க வேண்டியதில்லை. இலங்கையைப் பொறுத்த மட்டில் சிங்கள சமூகமே நாட்டின் கல்வித் திட்டங்களையும், கல்விப் பாடத்திட்டங்களையும் வகுத்து நடை முறைப்படுத்தியது. கல்வித் திட்ட வகுப்பாளர்களின் பிற்போக்குத் தன்மையும், கல்வித்திட்டங்கள் தொடர்பாகத் தெளிவற்ற நிலையும் இலங்கை சமூகங்களைச் சீரழித்துள்ளன.

இந்த உண்மையைச் சிங்கள சமூகத்தின் கல்வித்திட்ட வகுப் பாளரும் ஏற்கப்போவதில்லை, தமிழ், இசுலாமிய ''அறிஞர்'', படிப் பாளர் பகுதியினரும்'' ஏற்கப்போவதில்லை. இதற்குக் காரணம்: இவர்களும் முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் உதவாத கல்வித்திட் டங்களின் கீழும், கல்விப்பாடத்திட்டங்களின் கீழும்தான் கல்வியைக் கற்றவர்கள்.

இலங்கையின் கல்விப்பாடத்திட்டங்களிலும், கல்வித்திட்டங்களி லும் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. மாற்றங் களை ஏற்படுத்த விரும்பாத சமூகங்கள், தொடர்ந்தும் பின்ன டைந்து போகும். ஆனால், மாற்றங்களை ஏற்படுத்தித் தமக்கு முன்னேற்றத்தினை ஏற்படுத்த விரும்பும் சமூகங்களும், பிற் போக்குவாதிகளுடன் பலோத்காரமாகச் சேர்க்கப்பட்டு, பின்னடைவை அடையவேண்டும் என்பதற்கில்லை. இதைச் சந்திரிக்காவும், சிங்களவரும் உணரவேண்டும்.

ஆகவே, வடக்குக் கிழக்கின் கல்வித்திட்டங்களையும், கல்விப்பாடத் திட்டங்களையும் வகுத்து, நடைமுறைப்படுத்தும் அதிகாரமும், பரீட்சை களை நடாத்தும் அதிகாரமும் வடக்குக் கிழக்கு மக்களிடமே விடப்படவேண் டும். பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களை அமைத்துச் செயற்படுத்தும் உரிமைகளும் வடக்குக் கிழக்கு மக்களிடம் கொடுக்கப்படவேண்டும்.

இலங்கையானது பல அலகுகளாகப் பிரிக்கப்பட்டால், இந்த உரிமை யும், அதிகாரமும் சகல அலகுகளுக்கும் கொடுக்கப்படலாம். பிரிக்கப் பட்ட ஒவ்வொரு அலகும் கல்வித்திட்டங்களையும், கல்விப்பாடத் திட்டங்களையும் தாமாக ஆராய்ந்து வகுத்துச் சுதந்திரமாக நடை முறைப்படுத்தும் வல்லமை, வளங்கள் இல்லாதிருப்பின், பிற அலகுடன், அல்லது அலகுகளுடன் இணைந்து நடாத்தமுடியும்.

சகல சமூகங்களுக்கும், முன்னேற்றத்திற்குச் சமனான உரிமைகளை வழங்கவும், முன்னேற்றத்திற்குச் சமனான வாய்ப்புகளையும் கொடுக்கும் கொள்கை சந்திரிக்காவிற்கும், அவரது கட்சிக்கும் இருந்தால், கல்வி தொடர்பான இக்கொள்கையைக் கடைப்பிடித்து, இனப் பிரச்சினைத் தீர்வில் முதலாவது படியில் காலை வைக்கமுடியும்

## 2. பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அதிகாரங்கள்:

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றமும், பாதுகாப்பும் அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில்தான் தங்கியுள்ளது. இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொட்டு, அரசு பொருளாதாரக் கொள்கை களை வகுத்து, நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. ஆனால், இலங்கை பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கியே வந்துள்ளது. இன்றும் நிலமை அதுதான். இதற்கு எவை காரணமென ஆராய்ந்தால், சிங்கள அரசியற் கட்சிகளும், கொள்கை வகுப்பாளர்களும்தான் குற்றத்தினை ஏற்கவேண்டியுள்ளனர்.

இவர்களது வல்லமையற்ற நிலை ஒருபுறமும், சுயநலப்போக்கு மறு புற மும், இனவாதக் கொள்கைகளும் நாட்டில் பொருளாதார அபிவிருத்திக் குத் தடையாக இருந்ததுடன், மோசடிகளும் நாட்டினைக் குட்டிச் சுவ ராக்கியுள்ளன. இவர்களது பொருளாதாரக் கொள்கைகள் நாட்டின் சிறு பகுதியினரையும், வெளிநாட்டாரையும் இலாபமடையச் செய்கை யில், நாடு பொருளாதார அபிவிருத்தியின் விளைவுகளை அனுபவிக்க முடியாது செய்துள்ளது. இவர்களது கல்விப்பாடத்திட்டங்கள் இவர் களுக்கு உதவியாகவே இருந்துள்ளது. இன்றும் இருக்கிறது.

தேச பற்று என்பது சிங்கள ஆளும் வர்க்கங்களால் ''இனவாதம்'' என்று மாத்திரமே கருதப்பட்டு வருகிறது. ''பொருளாதார அபிவிருத்தி'' யினைப் பொறுத்த மட்டில், ''தேச பற்று'' என்பது சிங்கள ஆளும் வர்க்கங்களிடமில்லை. இன்று வரை சிங்கள ஆளும் வர்க்கங்கள் பொருளா தார அபிவிருத்தியின் கனிகள் தமக்குரியனவென்றே கருதுகின்றனர்.

தாம் இலாபங்களை அடைய வெளிநாட்டார்களையும் இலாபமடைய விடும் கொள்கைப் போக்குடைய சிங்கள ஆளும் வர்க்கங்கள், சாதாரண சிங்கள மக்களைக் கூடக் கருத்தில் கொள்ளவில்லை. ''இனவாதி'' களான இவர்கள், தமிழர்களைப் பொறுத்தமட்டில் எப்படியான பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டிருக்க முடியும் என்பதைச் சுலபமாக விளங்க முடியும்.

இலங்கையானது ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பவைகளாலும், பல்வேறு அரசியல் தலைவர்களாலும் ஆளப் பட்டு, பொருளாதார முன்னேற்றத்தினை அடைய முடியாது இன்று இருந்து வருகிறது. சந்ரிகாவும், அவரது அரசும் இன்று இலங்கை யைத் திடீரென மாற்றியமைத்து விடுவர் என்பதற்கில்லை. அது சாத்தியமுமில்லை.

அதே வேளையில், தேசபற்றற்ற சிங்கள ஆளும் வர்க்கங்களின் சுயநலக் கொள்கைகளுக்காக, இலங்கையின் பிற சமூகங்களும் படுகுழி யில் விழவேண்டியதில்லை. சிங்கள மக்கள் தமது அரசியல், பொருளா தார, சமூக, விஞ்ஞான, தொழில் நுட்ப முன்னேற்றத்திலும், பாது காப்பிலும் அக்கறை எடுக்காதிருக்கும் காரணத்திற்காக, தமிழ், சமூகமும் சீரழிய வேண்டுமென்பதற்கில்லை. தமது முன் னேற்றத்திற்குச் செயற்பட எந்த சமூகத்திற்கும் உரிமையுண்டு.

கடந்த 45 வருடங்களாகச் சிங்கள ஆளும் வர்க்கங்கள் இலங்கை யையும், இலங்கையின் சமூகங்களையும் முன்னேற்றக் கொள்கைகளை வகுத்து, நடைமுறைப்படுத்த முடியாது இருந்துள்ளன. இன்று 1994 இல் சந்ரிக்காவின் தலைமையிலான அரசில் அவர்கள் இதனைச் செய்து விடுவர் எனக்கருதுவது புத்திசுவாதீனமற்ற சிந்தனையே. சிங்கள சமூகத் தில் ஒரு புரட்சி ஏற்பட்டாலே இது சாத்தியமாகும். சிங்கள சமூகத் தின் ஆராயும் தன்மை வளர்க்கப்பட்டாலே இது சாத்தியமாகும். ஆனால், அது நடைபெற எத்தனை தசாப்தங்களெடுக்கும் என்பது எவருக்கும் தெரியாது. சந்ரிக்காவிற்கும், அவரது கட்சியினருக்கும் கூடத் தெரி யாது.

இந்த நிலையில், இலங்கையின் வெவ்வேறு பிராந்தியங்களில் வாழும் வெவ்வேறு சமூகத்தினர் தமது விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்களைத் தமது அறிவு, ஆராயும்தன்மை என்பவைகளுக்கு ஏற்ற விதத்தில் வளர்த்து, தமது பொருளாதாரத்தினை விருத்தி செய்வதற்கான அதிகாரங்கள் எந்தவித கட்டுப்படுத்தல்களுமின்றி வழங் கப்பட வேண்டும்.

சந்ரிக்கா, தான், தனியார் துறையின் முக்கியத்துவத்தையும், திறந்த வியாபாரப் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருப்ப தாகக் கூறியுள்ளார். இப்படியான கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் சந்ரிக்கா அரசு, பின்வரும் கொள்கைகளையும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்:

1) சந்தைப் படுத்தல் போட்டியடிப்படையில் இருப்பதால், உற்பத்தியும் போட்டியடிப்படையிலும், உற்பத்திச்செலவு குறைக்கப்படவும் சமனான உரிமைகள் வெவ்வேறு அலகுகளுக்கு வழங்கப்படவேண்டும்;

2) பொருளாதார அபிவிருத்தி நாட்டில் ஏற்படவேண்டுமாயின், இலங்கையின் சகலருக்கும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய, எந்தவித தடைகளும் ஏற்படாத விதத்தில்தான் சட்டம், நிர்வாகம், கொள்கைகள் அமைக்கப்படவேண்டும்.

அப்போதுதான், சகலரும் சுதந்திரமாகப் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிக்கமுடியும்.

இலங்கையானது பல அலகுகளாகப் பிரிக்கப்பட்டால், ஒவ்வொரு அலகில் வாழும் மக்களும் தாம் வாழும் பிராந்தியத்தில் பொருளாதாரத்தினை விருத்தி செய்யப் பூரண வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். இதில் ஏற்படுத்தப்படும் தடைகள், பிராந்திய ரீதியாகவோ அல்லது இனரீதியாகவோ திணிக்கப்படும் கட்டுப்படுத்தல்களாகவேதான் இருக்க முடியும் இவை இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடரவே வழியமைக்கும். இவை இலங்கையில் பிராந்திய அடிப்படையிலான, அல்லது இன அடிப்பிடையிலான பிரச்சினைகள் தொடரவே வழியமைக்கும். இவையெல்லாவற்றிற்கும் மேலாக, இவை சந்ரிக்கா தானே பகிரங்கமாகக் கூறிய கொள்கைகளை நிராகரிக்கும் நிலையை ஏற்படுத்தும்.

இவைகள் அனைத்தையும் கருத்தில்கொண்டு, சில முக்கிய துறைகள் தொடர்பாக, பிரிக்கப்படும் அலகுகளுக்கு, சில உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும்.

## 1. விவசாயம்:

ஒரு சமூகத்தினதோ, அல்லது ஒரு நாட்டினதோ ஸ்திரத்தன்மை அந்த சமூகம், அல்லது நாடு எவ்வளவு தூரத்திற்கு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்துள்ளது என்பதில்தான் பெருமளவில் தங்கியுள்ளது. இலங்கைமுதல், பல மூன்றாம் உலக நாடுகளின் சமூகங்கள் ஸ்திரமற்றதாகவிருக்கவும், அரசியல் ஸ்திரமற்றதாகவிருக்கவும் உணவு உற்பத்தியில் தன்னிறைவற்ற நிலையே முக்கிய காரணமாகும். உணவு உற்பத்தியில் தன்னிறைவற்ற நிலையில், உணவுப் பொருட்கள் பிற நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பணத்திற்கு இறக்குமதி செய்யப்படும் கட்டாயம் எழுகிறது. இன்றைய விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மேற்கு நாடுகளைத் தமது உணவு உற்பத்தியை உச்சப்படுத்த வழிவகுத்துள்ளன. இந்த நிலையில், திறந்த வியாபாரப் பொருளாதாரக் கொள்கையின் கீழ், இலங்கையானது உணவுப் பொருள் உற்பத்தியில் ஏதாவொரு வகையில், தன்னிறைவை ஏற்படுத்திக் கொள்ளாவிடின், அது பெரும் பிரச்சினைகளையே நீண்ட காலத்திற்கு எதிர்நோக்கும். மாறிமாறிவரும் இலங்கை அரசுகள், தேர்தலை நோக்க

மாகக் கொண்டே தமது விவசாய உற்பத்திக் கொள்கைகளையும், உணவு தொடர்பான கொள்கைகளையும் முன்வைத்து வந்தன, வருகின்றன. உணவு உற்பத்தியில் நாடு தன்னிறைவை அடையவேயில்லை.

சந்தர்ப்பவாத சிங்கள ஆளும் வர்க்கங்களது பிழையான கொள்கைகளால் சிங்கள, தமிழ், இசுலாமிய சமூகங்கள் நிரந்தரமாக படுகுழியில் விழவேண்டியதில்லை. மறுபுறத்தில், சிங்கள மக்களது ஆராயும் தன்மையற்ற நிலைகாரணமாக, தமிழ்ச் சமூகமும் படுகுழியில் விழ வேண்டும் என்றுமில்லை. இந்த அடிப்படை உரிமையை சந்ரிக்கா அரசும், சிங்கள சமூகமும் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த நிலையில், விவசாயம் தொடர்பாக வடக்குக் கிழக்கு அலகிற்குப் பின்வரும் உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்:

1) விவசாய உற்பத்தி, உற்பத்திப் பொருட்களைச் சகல விதமாகவும் பதப்படுத்திச் சேமித்தல், களஞ்சியப்படுத்தல், உள்ளூர்களிலும், வெளியூர்களிலும் சந்தைப்படுத்தல் என்பவைகளைத் திட்டமிடும், முகாமைப்படுத்தும் உரிமைகளும், அதிகாரங்களும்;

2) உணவு, மற்றும் பயிர்கள் தொடர்பான ஆராச்சிகளைச் செய்யும் ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்து, பிராந்தியத்தின் சுவாத்திய நிலைக்கேற்றவாறும், மண், நீர் வளங்களுக்கு ஏற்றவாறும் புதிய, கலப்பு இனங்களை உருவாக்கியும், பிற நாடுகளிலிருந்து பெற்றும் உற்பத்தியைப் பெருக்கும் உரிமையும், அதிகாரமும்;

3) விவசாய உணவு உற்பத்திப் பொருட்களை நேரடியாகவும், உப உணவுப் பொருட்களாக மாற்றியும் பதனிட்டுக் களஞ்சியப் படுத்தும் ஆராய்ச்சிகளைச் செய்யும் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

4) விவசாய உணவுப் பொருட்களை நேரடியாகவும், உப – உணவுப் பொருட்களாக மாற்றியும், சகல விதங்களிலும் அடைத்துக் களஞ்சிப்படுத்தத் தேவையான உற்பத்தியாலைகளை அமைக்கவும், அவற்றிற்கான இயந்திரங்கள், மற்றும் சாதனங்கள், வேறு மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்ளவும் உரிமையும், அதிகாமும்;

5) குறிப்பிட்ட அலகினது நிலங்களை உற்பத்தியையும், வருவாயையும் உச்சப்படுத்தும் வகையில், எப்படி முகாமைப்படுத்துவது என்பதை நிர்ணயிக்கும் உரிமையும், அதிகாரமும்;

6) சகல பயிர் வகைகளையும் வளர்த்துப் பயன்படுத்துவது தொடர்பான ஆராச்சிகளைச் செய்ய, ஆராய்ச்சி நிலையங்களமைத்துச் செயற்படவும், உப பொருட்களை உற்பத்தி செய்யும் ஆலைகளைத் திட்டமிட்டு அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

7) விவசாய உற்பத்திப் பொருட்கள் அனைத்தினதும் தரக்கட்டுப் படுத்தல்களை செய்யும் உரிமையும், அதிகாரமும்;

8) விவசாய உற்பத்திக்குத் தேவையான சகல சாதனங்களையும், ஏனைய பொருட்களையும் கொள்வனவு செய்யும் உரிமையும், அதிகாரமும்.

2. **கைத்தொழில்:**

சிங்கள இனவாத அரசுகளினது கொள்கைகள் கடந்த காலங்களில், வடக்குக் கிழக்கில் கைத்தொழிலைத் தடைப்படுத்தும் வகையில் இருந்தன. வடக்குக் கிழக்கில் கைத்தொழில்கள் கடந்த 40 ஆண்டுகளாக முன்னேற விடப்படவில்லை. இன்றும் நிலைமை அது தான் சந்திரிக்காவிற்கும், அவரது கட்சிக்கும், அரசிற்கும் இது நன்றாகத் தெரியும் இனவாதக் கொள்கைகளே வடக்குக் கிழக்கில் கைத்தொழில் வளர்ச்சியடைய விடாது பார்க்க வைத்தன என்பதும் சந்திரிக்காவிற்கும், அரசிற்கும் நன்றாகத் தெரியும். இன்று நெருப்புப்பெட்டி, சவற்காரம் என்பவைகளுக்கே தமிழர் தெற்கில் தங்கியுள்ளனர் இது ஏன்?

சிங்கள ஆளும் வர்க்கங்களது கைத்தொழில் தொடர்பான கொள்கைகள் நாட்டினை முன்னேற்றும் வகையில் இதுவரை காலமும் இருக்கவில்லை. இன்று சந்திரிக்காவும், அவரது அரசும் தனியார் துறையின் முக்கியத்துவத்தையும், ''திறந்த சந்தைப் பொருளாதாரம்'' என்பதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்திருப்பதாகக் கூறுகின்றனர். இவர்கள் உண்மையில் இக்கொள்கைகளைக் கொண்டிருந்தால், இவர்கள் உண்மையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் உரிமை சிங்களவருக்கு மாத்திரம் தான் இருப்பதல்ல, நாட்டின் சகலருக்கும் உண்டு என்பதை ஏற்றால், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் தமது கைத்தொழில்களை முன்னேற்ற, எந்த வித தடைகளின்றிச் செயற்பட உரிமைகளும், அதிகாரமும் வழங்கப்பட வேண்டும்.

மேலும், கடந்த ஐந்து தசாப்தங்களாகச் சிங்களப் பொருளியல் வல்லுனர்களும், திட்டவகுப்பாளரும், அரசுகளும் நாட்டின் கைத்தொழில்கள் தொடர்பான கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து வந்தனர். ஆனால், நாடு கைத்தொழிலில் முன்னேறாத நிலைதான் பெரிதும் காணப்படுகிறது. இதற்கான முழுப்பொறுப்புக்களைச் சிங்கள அரசுகளும், சிங்களப் பொருளியல் வல்லுனர்களும், திட்டவகுப்பாளருமே ஏற்க வேண்டும்.

இன்று சந்திரிக்காவும், அவரது கட்சியும் ஆட்சிக்கு வந்துள்ளனர். சிங்கள ஆளும் வர்க்கங்களது திறனற்ற தன்மையும், இனவாதப் போக்கினையும், தேசபற்றற்ற தன்மையையும், சிங்கள மக்களது ஆராயும் தன்மையற்ற நிலையையும் இலங்கையின் ஏனைய சமூகங்கள் தமது தோள்களில் தாங்கி, படுகுழியில் தாழவேண்டுமென்பதற்கில்லை.

இந்தநிலையில், கைத்தொழில்கள் தொடர்பாக கீழ்வரும் உரிமைகளும், அதிகாரங்களும் வடக்குக் கிழக்கிற்கு வழங்கப்படவேண்டும்:

1) குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில், நடுத்தர கைத்தொழில், பெரும்கைத்தொழில் என்பவைகளைத் திட்டமிடவும், நடைமுறைப்படுத்தவும் உரிமையும், அதிகாரமும்;

2) வடக்குக் கிழக்கில் காணப்படும் சகல வளங்களைக் கொண்டும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களைக் கொண்டும் கைத்தொழிகளை ஆரம்பித்து, உற்பத்திப் பொருட்களை உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் சந்தைப் படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

3) சகல கைத்தொழில்கள் தொடர்பான தொழில்நுட்ப ஆராய்ச்சிகளைச் செய்ய, ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

4) வடக்குக் கிழக்கின் வளங்களை ஆராய்ந்து பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி நிறுவனங்களை அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

5) கைத்தொழில்களைப் பிறநாட்டு நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தும் உரிமையும், அதிகாரமும்.

### 3. கடலுணவு உற்பத்தி:

கடலுணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டிலும், வடக்குக் கிழக்கானது பல தசாப்தங்களாக, விவசாய, கைத்தொழில் துறைகளைப் போலவே பலவித கட்டுப்படுத்தல்களை சிங்கள அரசுகளிடமிருந்து எதிர்நோக்கி வந்துள்ளது. சிங்களவரது ''இடது சார'' கட்சிகளும், ''வலதுசார'' கட்சிகளும் அதிகாரங்களில் இருந்தபோதும், வடக்குக் கிழக்கின் கடலுணவு உற்பத்தி ஒரே விதமான தடைகளை எதிர் நோக்கியே வந்துள்ளது. சந்ரிக்கா அரசியல் இக்கொள்கைகள் மாறும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இந்தநிலையில், கடலுணவு உற்பத்தியைப் பொறுத்தமட்டில் கீழ்வரும் உரிமைகளும், அதிகாரங்களும் வடக்குக் கிழக்கிற்கு வழங்கப்படவேண்டும்:

1) கடலுணவு உற்பத்தி, பதனிடுகை, பதப்படுத்திக் கலன்களில் அடைத்தல், சகல விதமாகவும் களஞ்சியப்படுத்தல், உள்ளூர், வெளிநாடுகளில் சந்தைப்படுத்தல் என்பவைகளை திட்டமிடவும், நடைமுறைப் படுத்தவும் உரிமையும், அதிகாரமும்;

2) கடலுணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான சகல ஆராச்சிகளையும் செய்ய ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

3) கரைகளிலும், ஆழ்கடலிலும் மீன், மற்றும் கடல் உயிரினங்களைப் பிடிக்கும் உரிமையும், இவற்றிக்கான சாதனங்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்தும் உரிமையும், அதிகாரமும்.

**4. கால் நடைகள், மற்றும் மிருக இனங்கள், பறவை இனங்கள்:**

மேலே குறிப்பிட்டவைகள் தொடர்பாகக் கீழ் வரும் உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்:

1) மேலே குறிப்பிட்ட சகலவற்றையும் வளர்த்தல், அவற்றை நேரடியாகவும், அவற்றிலிருந்து பெறப்படுபவைகளையும் சகல முறைகளிலும் பதனிட்டு, களஞ்சியப் படுத்திச் சந்தைப்படுத்தவும், இவைகளிலிருந்து வேறு பொருட்கள் செய்வதற்கான சகல கைத்தொழில்களையும் திட்டமிட்டுச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

2) மேலே குறிப்பிட்ட உயிரினங்கள் தொடர்பாக ஆராய்ச்சிகளைச் செய்து, புதிய, கலப்பு இனங்களை உருவாக்க ஆராய்ச்சி நிலையங்கள் அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

3) மேலே குறிப்பிட்ட உயிரினங்களிலிருந்து பெறப்படுபவை தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்தும் ஆராய்ச்சி நிலையங்களை அமைத்துச் செயற்படுத்தும் உரிமையும், அதிகாரமும்;

4) மேலே குறிப்பிட்ட உயிரினங்களைப் பிறநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யும் உரிமையும், அதிகாரமும்.

**5. சக்தி:**

குறிப்பிட்டவொரு பிரதேசத்தினதோ, அல்லது ஒரு நாட்டினதோ ஒட்டு மொத்த முன்னேற்றமானது அதனது சக்தி வளத்திலும், சக்தியைத் திறம்படப் பயன்படுத்துவதிலும்தான் தங்கியுள்ளது. சக்தி வளங்களை நேரடியாகவும், மாற்றியும் பயன்படுத்துவதில் தன்னிறைவற்றவொரு நாடு, பிறரில் தங்கியிருக்கும் நிலை ஏற்படுவதுடன் அபிவிருத்தியும்,முன்னேற்றமும் கட்டுப்படுத்தப்படும் சூழ்நிலைகளையே எதிர்நோக்கும்.

வடக்குக் கிழக்கானது, மின் சக்தியைப் பொறுத்தமட்டில், தெற்கில் முழுமையாகத் தங்கியிருக்கும் நிலையும், எரிபொருட்களுக்கு தெற்கையும், பிறநாடுகளையும் தங்கியிருக்கும் நிலையும் நீண்டகாலமாக இருந்துவருகிறது. மின் உற்பத்தியானது மிகமிகச் சிறிய அளவில்தான் வடக்குக் கிழக்கில் இருந்துவந்துள்ளது. இதன் ஆபத்தான விளைவை இன்று வடக்குக் கிழக்கு அனுபவிக்கிறது. இந்தநிலையில்,

சக்தி தொடர்பாகப் பின்வரும் உரிமையும், அதிகாரமும் வடக்குக் கிழக்கு அலகிற்கு வழங்கப்படவேண்டும்:

1) வடக்குக் கிழக்கு அலகு, பிற அலகுகள் போல், மின்சக்தியை மத்திய அல்லது கூட்டரசிடமிருந்து பெறுகையில், அதற்குத் தேவையான மின் சக்தியை உற்பத்தி செய்து பயன்படுத்து வதற்கான சகல உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்;

2) வடக்குக் கிழக்கில் உள்ள சகல சக்தி வளங்களையும், பூமியில் சகலருக்கும் பொதுவானதெனக் கருதப்படும் சகல சக்தி வளங் களையும் நேரடியாகவோ, அல்லது மாற்றியோ பயன்படுத்து வதற்கான ஆராய்ச்சிகளைச் செய்யவும் சக்தி வளங்களை நேரடியாகவோ, மாற்றியோ பயன்படுத்துவதற்கான உரிமையும், அதிகாரமும்;

3) தேவையான சக்திமூலகங்களைப் பிறநாடுகளிலிருந்து கொள் வனவு செய்து, பயன்படுத்தும் உரிமையும் அதிகாரமும்.

## 6. போக்குவரத்துகள்:

கடந்த காலங்களில் சிங்கள அரசுகளே இலங்கையின் போக்கு வரத்து வசதிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்தன. இதனால், வடக்குக்கிழக்கின் போக்குவரத்து வசதிகளில் எந்தவித அபிவிருத்தியும் காணப்படவில்லை. இதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் கட்டுப் படுத்தல்கள் வடக்குக் கிழக்கின் பொருளாதார, பொது அபிவிருத்தி களைப் பெரிதும் பாதித்துள்ளன தரை, கடல், விமானப் போக்கு வரத்து வசதிகள் சுதந்திர காலம்தொட்டு, வடக்குக் கிழக்கில் கைவிடப் பட்ட நிலையில்தான் இருந்துவந்துள்ளன.

இந்த நிலையில், வடக்குக் கிழக்கின் போக்குவரத்து அபிவிருத்தி வேலைகள் திட்டவட்டமான கொள்கைகளின் அடிப்படையில் தான் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது தான், தடைகள், கட்டுப்படுத் தல்கள் திணிக்கப்படாது பார்த்துக் கொள்ள முடியும். உதாரணமாக: வடக்குக் கிழக்கானது சுற்றிவரக் கடலைக் கொண்டிருக்கும் போதிலும் வடக்குக் கிழக்கில் பல துறைமுகள் இருக்கும்.

இருக்கும் போதிலும், இத்துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவேயில்லை. ஏற்றுமதிகளைச் செய்வதாயினும், பொருட்கள் தரை வழியாகக் கொழும்பு, திருகோணமலைத் துறைமுகங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டே ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். சந்ரிக்கா அரசும், உலகின் பெரும்பான்மையான நாடுகளும் திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளையே கடைப்பிடிக்கவுள்ளன. இந்த நிலையில், வடக்குக் கிழக்கின் உற்பத்திப் பொருட்களை மலிவாகச் சந்தைகளை அடையச் செய்வதன் மூலமே இலாபத்தை அதிகரிக்கலாம். ஆனால், வடக்கின் பொருட்கள் கொழும்பு சென்றுதான் ஏற்றுமதியாக வேண்டுமெனச் சிங்கள அரசுகள் கருதுவது, வடக்கின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தினைக் கொண்டதேயன்றி வேறொன்றும் இல்லை. பொருட்கள் கொழும்பு சென்று கப்பலில் ஏற்றும் நேரத்திற்கு, அவை வடக்கிலேயே கப்பல்களில் ஏற்றப்பட்டிருந்தால், அயல் நாடுகளை அடைந்துவிடும்.

மறுபுறத்தில், இன்றுவரை, வடக்குக் கிழக்குக்கு எப்படியான, என்னென்ன துறைமுகங்கள் போதுமானவை, எவ்வளவு பருமன், நிறையுடைய கப்பல் வரக்கூடிய துறைமுகம் போதுமானது, எப்படியான இறக்கும் - ஏற்றும் வசதிகள் இருப்பது போதுமானது, எப்படியான களஞ்சியங்கள் இருப்பது போதுமானது என்பவற்றையெல்லாம் சிங்கள அரசுகளும், சிங்களத் திட்ட வகுப்பாளரும் நிர்ணயித்து வந்தனர்.

இவற்றின் விளைவே இன்று காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, மற்றும் பல துறைமுகங்களின் பரிதாப நிலையாகும்.

துறைமுகங்களை விருத்தி செய்யாது விடுவதன் மூலம் அபிவிருத்தித் தடைகளை ஏற்படுத்தும் அதே வேளையில், துறைமுகங்களில் பிற்காலத் தேவைகளைக் கருத்தில் கொள்ளாது, பிழையான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும் முன்னேற்றத்திற்கு நீண்டகாலக் கண்ணோட்டங்களில் தடைகளை ஏற்படுத்தும். பிழையானவற்றை அழித்து, திருத்தங்கள் செய்வது, வீண் செலவு மாத்திரமன்றி, துறைமுகத்தின் பயன்பாட்டிலும் தடைகளை ஏற்படுத்தும். சிலவேளைகளில் திருத்தங்களைச் செய்ய புதிய துறைமுகம் கட்டுவதிலும் கூடிய செலவை ஏற்படுத்தலாம்.

இப்படியான தடைகள், தடங்கல்கள் நீக்கப்பட வேண்டும்.

கடற் போக்குவரத்துப் போலவே, விமானப் போக்குவரத்தும் மிக முக்கியமாகும். இன்று விமான மூலமாகப் பொருட்கள் பெருமளவிலும், மிகவும் விரைவாகவும் தூர இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. உடன் பொருட்களின் ஏற்றுமதிக்கு விமானப் போக்குவரத்து மிக மிக முக்கியமானது. வடக்குக் கிழக்கானது அதன் பொரு

ளாதார அபிவிருத்தியைத் தடைகளின்றி ஏற்படுத்துவதாயின், வடக்குக் கிழக்கில் சர்வதேச விமானப் போக்குவரத்து வசதிகளை, குறிப்பாகப் பொருட்களுக்கானதும், மனிதருக்கானதும், ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்;

மேலும், விமான நிலையங்கள் அமைப்பது, ஏற்கனவேயுள்ள விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வது என்பவைகளிலும் மேலே குறிப்பிட்ட தடைகள், தடங்கல்கள் ஏற்பட்டே வந்துள்ளன.

தரைமார்க்கமான போக்குவரத்துக்கள் பொருளாதார, மற்றும் அபிவிருத்திகளுக்கு முக்கியமானவை மாத்திரமின்றி, வடக்குக் கிழக்கின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களையும் சமூக, கலை, கலாச்சாரம் பண்பாடு, முன்னேற்றம் என்பவைகளுடாக இறுக இணைக்கவும் முக்கியமானவை.

சிங்கள அரசுகளும், திட்டவகுப்பாளர்களும் வடக்குக் கிழக்குப் பகுதிகள் குறுகிய நேரத்தில் இணைக்கப்படுவதைத் தடுத்தே வந்துள்ளனர். ஆகவே, இவைகளை ஏற்படுத்தும் உரிமையும், அதிகாரமும் வடக்குக் கிழக்கு அலகிற்கு வழங்கப்படவேண்டும். இந்த உரிமைகளை நிராகரிக்க எவருக்கும் அதிகாரமில்லை.

இக்கட்டத்தில், சந்திரிக்காவும், அவரது அரசும் இலங்கையின் சகல இனத்தவர்களது உரிமைகளையும் விளங்கி, இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணவுள்ளன, ஆகவே மேலே குறிப்பிட்ட தடைகள், தடங்கல்களை வடக்குக் கிழக்கு மக்கள் எதிர்நோக்க மாட்டார்கள் எனத்தம் மைத்தாமே' சமாதானம் விரும்பிகள்'', ''அமைதிவிரும்பிகள்'' "அறிஞர்" எனக் கருதுபவர்கள் ஓலமிடமுடியும் ஆனால், கடந்த காலங்களில் சகல சிங்கள அரசுகளும் இவற்றையே செய்து வந்துள்ளன. சந்திரிக்காவும், அரசும் இதற்கு விதிவிலக்கு எனக் கூற எந்தவித ஆதாரங்களும் இல்லை. அப்படிக் கூறுபவர்கள் ஆதாரமாகக் கொள்ள எவையும் இல்லை

இந்த நிலையில், போக்குவரத்துகள் தொடர்பாக, வடக்குக் கிழக்கு அலகிற்குப் பின்வரும் அதிகாரமும், உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்:

(1) வடக்குக் கிழக்கில் இன்றிருக்கும் சகல போக்குவரத்துக்களையும் தடையின்றிப் பயன்படுத்தும் உரிமை;

(2) வடக்குக் கிழக்கின் இன்றிருக்கும் சகல துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் அபிவிருத்தி செய்யும் உரிமையும் அதிகாரமும்;

(3) வடக்குக் கிழக்கில் புதிய துறைமுகங்களையும், விமான நிலையங்களையும் அமைக்கும் உரிமையும், அதிகாரமும்;

(4) ஏற்கனவே இருக்கும் தரைப் போக்குவரத்து வசதிகளைத் திருத்தியமைக்கவும், புதிய வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையும், அதிகாரமும்;

(5) ஏற்கனவே இருக்கும் துறைமுகங்கள், விமான நிலையங்கள், தரைப் போக்குவரத்து வசதிகளில் திருத்தங்கள் (Modification) செய்யும் போதும், அபிவிருத்திகளைச் செய்யும் போதும், புதியனவைகளை அமைக்கும் போதும், மத்திய அரசு(?) அலகின் சம்மதத்துடனும், அலகினது ஆலோசனைகளின் கீழுமே செய்ய வேண்டும்;

(6 சர்வதேச போக்குவரத்துகள் இருக்கும் துறைமுகங்கள், விமான நிலையங்களில் மத்திய அரசு அதனது Customs, Immigration Emigration கட்டுப்படுத்தல்களை வைத்திருக்க முடியும்;

(7) வடக்குக் கிழக்கு அலகு அதற்கென தரை, கடல், விமான போக்குவரத்துச் சாதன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையும், அதிகாரமும்.

VI. ஏனைய உரிமைகளும், அதிகாரங்களும், ஆராய்வுக்குரியவைகளும்

இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வுகாணலில் மேலே குறிப்பிட்ட ஆறு விடயங்களை விட வேறு பலவிடயங்களும் உள்ளன. ''வடக்குக் கிழக்கு'' என்பது வடக்கினையும், கிழக்கினையும் இணைத்த பிராந்தியமா. அல்லது வடக்கும், கிழக்கும் பிரிக்கப்பட்டிருக்குமா, வடக்கும், கிழக்கும் எந்தெந்தப் பகுதிகளை உள்ளடக்கும், இவற்றின் எல்லைகள் எவை என்பன முக்கியமானவை. வடக்குக்கிழக்கு எப்படியான நிர்வாக முறையைக் கடைப்பிடிக்கும், இவை மாவட்டங்களாக அல்லது வேறு விதமாகப் பிரிக்கப்படுமா, இப்பிரிவுகள் சிங்கள, இசுலாமிய அடிப்படைகளில் இருக்குமா எனப் பல கேள்விகள் எழுகின்றன.

இலங்கையானது எத்தனை அலகுகளாகப் பிரிக்கப்படும்; இந்த அலகுகள் எப்படி இணைக்கப்படுகின்றன; ஒவ்வொரு அலகிற்குமுள்ள உரிமைகள், அதிகாரங்கள் எவை; அலகு ஒவ்வொன்றும் எப்படி ஆளப்படும், அலகின் ''அரசு'' எப்படித்தெரிவு செய்யப்படும்; அது எப்படி அதிகாரத்திலிருந்து நீக்கப்படலாம்; குறிப்பிட்டவொரு அலகினது அரசைத் தெரிவுசெய்வதிலும், நீக்குவதிலும் குறிப்பிட்ட அலகின் மக்களுக்கு மாத்திரம்தான் உரிமையுண்டா அல்லது வேறு வழியிலும் அரசைக் கலைக்க முடியுமா எனப்பல கேள்விகள் எழுகின்றன.

அலகின் அரசிற்கும், அலகுகள் இணைக்கப்பட்ட அதிகார பீடத்திற்குமிடையில் ஏற்படும் நிர்வாக அதிகாரப் பிரச்சனைகள் எப்படித் தீர்க்கப்படும்; இரு அலகுகளுக்கிடையிலான பிரச்சனைகள் எப்படித்

தீர்க்கப்படும்; இரு அலகுகள் அபிவிருத்தி தொடர்பாக ஒப்பந்தங்களை எழுதிச் செயற்படுத்தமுடியுமா; எவையெவை தொடர்பாக ஒப்பந்தங்கள் எழுதப்படமுடியும் என்ற கேள்விகள் எழுகின்றன.

ஒரு அலகின் நிலங்கள் தொடர்பான அதிகாரம், குடியேற்றங்கள் நிதி, நிர்வாகம், சட்டமியற்றல், சட்டவொழுங்கு நீதி தொடர்பான அதிகாரங்களும், வேறு பல விடயங்களும் முக்கியமானவை. இவைகள் தொடர்பாக நுணுக்கமாக ஆராய்ந்து முடிவுகளுக்கு வரவேண்டியுள்ளது.

## உப முடிவுகள்

மேலே குறிப்பிட்ட முதல் ஆறு விடயங்களுக்கும் சந்திரிக்கா அரசு சம்மதிக்காவிடின், ஏனைய விடயங்கள் பற்றிப் பேசுவதில் எந்தவித பயனுமில்லை. ஏனெனில், இவைகள் இல்லாது தமிழ்ச் சமூகமோ, அல்லது வடக்குக் கிழக்கோ முன்னேற முடியாது

சந்திரிக்கா அரசானது இலங்கையின் இனப் பிரச்சனைக்கான "அரசியல் தீர்வில்" இலங்கையை எப்படிப் பிரிக்கின்றது. வடக்குக் கிழக்கினை எப்படிப் பிரிக்கின்றது. அங்கு வாழும் சிங்களவருக்கும் இசுலாமியருக்கும் எப்படியான அதிகாரங்கள், உரிமைகள், விசேட சலுகைகளைக் கொடுக்கிறது, மேலே குறிப்பிட்ட ஆறு விடயங்கள் தொடர்பாகவும் கொள்கைகள் என்ன என்பவைகள் மிக முக்கியமாகும் இவைகளிலிருந்து சந்திரிக்காவும், அவரது அரசும் உண்மையில் எப்படியான கொள்கைகளையும், நோக்கங்களையும் கொண்டுள்ளன என்பது தெளிவாகும்.

சந்திரிக்கா "நாட்டின் முன்னேற்றம்", "நாட்டின் அபிவிருத்தி", "மக்களின் உரிமைகள்", "மக்களின் பாதுகாப்பு", —... என உரத்த குரலில் பேசுபவையெல்லாம் "சிங்கள", "பௌத்த" என்ற உரிச் சொற்கள் பயன்படுத்தப் படவைகளை மாத்திரம் குறிக்குமா என்பது பற்றி ஏற்கனவே முடிவுக்குவரக் கூடியதாக இருக்கும் போதிலும், மேலே குறிப்பிட்ட ஆறு விடயங்களிலும் எந்தவொன்றையும் சந்திரிகா அரசு நிராகரிக்குமாயின், ஏற்கனவே வந்த முடிவுகளை உறுதிப்படுத்தும் வகையில்தான் அது அமையும்.

சுருங்கக் கூறினால், சந்திரிக்காவும், அவரது அரசும் சிங்கள இனவாதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் தென் இலங்கைக் கூட்டத்தில் ஒரு குழு என்பது அசைக்கமுடியாதபடி உறுதியாகும்.

# முடிவுகள்

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக, இலங்கையின் இனப் பிரச்சனைக்கான தீர்வு ''போர்'' தான் என்ற கொள்கையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டுவந்தது. ஆனால், ''போர்'' மூலம் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியவில்லை. மேலும், இலங்கைத்தீவானது பொருளாதார ரீதியால் பெரிதும் பாதித்திருப்பதுடன், உள்ளூர் - வெளியூர் கடன்களும் அதிகரித்து தென் இலங்கையினது அரசியலும், தென் இலங்கை அரசியல் கட்சிகளும் ஸ்திரத் தன்மையை இழந்துள்ளன

இவ்வருடம் ஒகஸ்ற் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் சந்திரிக்காவும், அவரது முன்னணியும் வெற்றியீட்டிக் கூட்டரசை அமைத்துக் கொண்டபோதும், அவரது நிலையும், கட்சியினதும், அரசினது நிலையும் ஸ்திரமற்றதாகவும், அரசியல் எதிர்காலமற்றதாகவுமே உள்ளன. இப்பிரச்சனைக்கான தீர்வு காணலை, அதுவும் ''அரசியல்தீர்வு'' காணலை, கொள்கையாக முன்வைப்பது தவிர்க்க முடியாததாகும்.

மறுபுறத்தில், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூடட்ணி, மூஸ்லீம் கொங்கிரஸ், தொண்டமான் என்போர்களது அரசியல் எதிர்காலம் இலங்கையின் இனப்பிரச்சனையானது ''அரசியல்'' தீர்வின்மூலம் தீர்க்கப்படுவதில்தான் தங்கியுள்ளது. இவர்களது ஆதரவுடன் சந்திரிக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறச் சந்தர்ப்பங்கள் அதிகமுண்டு.

எது விதத்திலும், இது இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வாக அமையமாட்டாது ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினாலும், சந்திரிக்கா அரசு ''அரசியல் தீர்வு'' என்றதையே முன்வைக்க வேண்டியுள்ளது. இதற்கு மேலே குறிப்பிட்டவையும், வெளிநாட்டு அழுத்தங்களும் முக்கிய காரணமாக அமைகின்றன.

ஆனால், சந்திரிக்கா அரசு ''அரசியல் தீர்வு'' ஊடாகப் பிரச்சனைக்குத் தீர்வினைக்காண முடியுமா என்பது,சந்திரிக்கா அரசு கல்வித் திட்டங்கள், கல்விப்பாடத் திட்டங்கள்,விவசாயம், கைத்தொழில், கடலுணவு உற்பத்தி, கால்நடைகள், மற்றும் உயிரினங்கள், சக்தி, போக்குவரத்து வசதிகள் தொடர்பாக வடக்குக் கிழக்கிற்கு உரிமையையும், அதிகாரங்களையும் வழங்கும் நோக்கத்தினைக் கொண்டதா என்பதில் தான் தங்கியுள்ளது.

மேலே குறிப்பிட்டவைகள் தொடர்பாக உரிமைகளையும், அதிகாரங்களையும் வழங்கும் நோக்கமில்லாவிடின், சந்ரிக்காவும், அவரது கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைகளையே கொண்டுள்ளன என்பது உறுதியாகும். காலப்போக்கில், இன்று ‘‘அரசியல் தீர்வு’’ என்பதை ‘‘இராணுவத்தீர்வு’’ என்பதிலும், தற்காலிகமான முறையில். முக்கியத்துவம் கொடுத்திருக்கும் சந்ரிக்கா, ‘‘இராணுவத் தீர்வு’’ என்பதற்கு ‘‘அரசியல் தீர்வு’’ என்பதிலும் முக்கியத்துவத்தைக் கொடுக்கும் நிலைதான் காணப்படும். இதில் எந்தவித வியப்பும் இருக்க வேண்டியதில்லை.

சிங்கள ஆளும் வர்க்கங்களதும், அவர்களது கட்சிகளினதும் கொள்கைகளில் இன்றுவரை மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டுள்ளனவா, இல்லையா என்பதை அறியவும், தமிழர் தமது நிலைபற்றிச் சரியாக அறிந்து கொள்ளவும், சந்ரிக்காவின் ஆட்சி ஒரு அமிலச்சோதனையாக இருக்கவுள்ளது.

மறுபுறத்தில், 1983 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சி ‘‘தமிழீழம்’’ என்பதைக் கொடுத்துவிட்டது எனக் கூறும் சந்திரிக்கா, இனப்பிரச்சனைக்கான ‘‘அரசியல் தீர்வு’’ மூலம் இலங்கை முழுவதையும் ‘‘ஒரு குடைக்கீழ்’’ கொண்டு வரப்போவதாகச் சிங்கள மக்களுக்கு உணர்த்தி வந்துள்ளார் ‘‘தமிழீழம்’’ என்பது திருப்பி மீட்கப்பட்டு, அதை சிங்கள பௌத்த இலங்கையுடன் இணைக்க ‘‘அரசியல் தீர்வு’’ வழி வகைகளைச் செய்யமுடியாதெனக்கண்டால், இன்று தமிழ், சிங்கள, இசுலாமியமக்களின் உரிமைகளுக்காக ஓலமிடும் சந்ரிக்காவும், அவரது கட்சியும், ‘‘இராணுவத்தீர்வு’’ இனைமுன்வைத்து, இரத்தக் களறியை ஏற்படுத்தமாட்டார் என்பதிற்கில்லை; இது சந்தர்ப்பவாத அரசியலாகும்!

குறிப்புகள்: